

DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com

SCARBOROUGH
416 292 7004

BRAMPTON / MISSISSAUGA
905 457 1700

MARKHAM (New Location)
905 472 7223

பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524





29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

உதயன்
UTHAYAN

தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Cnaada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit







உதயம் 1595 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 30, 2026

ரொறன்ரோ மாநகர முதல்வராக மீண்டும் ஒலிவியா சோ அவர்கள் தெரிவானர்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நகரசபைகளுக்கான தேர்தலில் 2 தமிழ் பேசும் கவுன்கிலர்கள் இரு கல்விச் சபை உறுப்பினர்கள் மற்றும் ஒரு பிராந்திய கவுன்சிலர் ஆகியோர் வெற்றி!





ரஞ்சித் பரனிவாசகம்



பார்த்தி கந்தவேள்



நீதன் சண்முகராஜா

கடந்த 26ம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற ரொறன்ரோ மாநகர சபை மற்றும் ஏனைய நகர-சபைகள் ஆகியவற்றிற்கான தேர்தலில் ஆவலோடு எதிர்பார்க்கப்பெற்ற ரொறன்ரோ மாநகர முதல்வாக மீண்டும் ஒலிவியா சோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்-பட்டுள்ளார். அவர் தன்னை எதிர்த்து போட்டியிட்ட பலம் நிறைந்த வேட்பாளராகக் கணிக்கப்பெற்ற பிராட் பிராட்போர்ட் அவர்களை ஒரு இலட்சத்து 25 ஆயிரம் வாக்குகள் வித்தியாசகத்தில் தோல்வியுறச் செய்தார். ‘

ரொறன்ரோ நகர சபைத் தேர்தலில் கவுன்கிலர்களாக “பழைய” முகங்களே மீண்டும் ஸ்காபுறோ ரூஜ் பார்க் வட்டாரம் மற்றும் ஸ்காபுறோ தென்மேற்கு வட்டாரம் ஆகியவற்றில் முறையே நீதன் சண்முகராஜா (44 வீத வாக்கு) பார்த்தி கந்தவேள் (36 வீத வாக்கு) வாக்கு வீதத்தைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்கள். அத்துடன் புதியவராக அஜக்ஸ் நகரசபையின் 2ம் வட்டார பிராந்திய கவுன்சிலராக ரஞ்சித் பரனிவாசகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேலும் தமிழ் பேசும் பெண்மணிகள் இருவர் ரொறன்ரோ கல்விச் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்-டுள்ளார்கள்.

வடக்கு மாகாணத்தில் முதலாம் தர மாணவர்களில் 10 இல் ஒருவருக்கு பார்வை குறைபாடு உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது!



வடக்கு மாகாணத்தில் முதலாம் தர மாணவர்களில் சுமார் 10 பேரில் ஒருவருக்குப் பார்வைக் குறைபாடு இருப்பது, “தெளிவான பார்வை, பிரகாசமான எதிர்காலம் பாடசாலைக் கண் சுகாதாரத் திட்டத்தின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய கண்டறிதல்கள் அடங்கிய அறிக்கையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கண் பிரிவு மருத்துவ நிபுணர் எம். மலரவன் அவர்கள் 26ம் திகதி அன்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் கையளித்தார்.

கடந்த ஜூலை 21ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 23ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம், வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள 13 கல்வி வலயங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்போது மொத்தம் 14,997 முதலாம் தர மாணவர்கள் கண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

(தொடர்ச்சி 10ம் பக்கத்தில்)







Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

KANAGAAMBIKAI
Pawn Brokers



32 வருட சேவைகள்

கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடகு!

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

PAWNBANK INC.™

Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



"செம்மணி" விவகாரத்தில் அனைத்து தமிழர் தரப்பும் எதிர்பார்த்து காத்திருந்த "நீதி"யை நிராகரிக்க இனவாதிகளின் "கருவி" ராஜ் சோமதேவ!

'செம்மணி புதைகுழிகள் அகழ்வு மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த நீண்ட காலப்பகுதியில் அங்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் மற்றும் ஆடைகளின் எச்சங்கள், குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் அனைத்தை புகைப்படங்கள் மூலமாகவும் காட்சி ஊடகங்கள் ஊடாகவும் பார்த்து கலங்கிய இதயங்களோடு எமது மக்கள் காணப்பட்டாலும் மறுபக்கத்தில் "எமக்காக தங்கள் அர்ப்பணிக்கும் பணிகளினால் ஓய்வின்றி பணி செய்தவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள். அவர்களில் நாம் ஊடகங்கள் மூலம் பார்த்து வியந்த அகழ்வுப் பணியாளர்கள் அவர்களோடு ஒத்துழைத்த கடமை உணர்வுள்ள தமிழ் பேசும் சட்டத்தரணிகள். நீதிபதிகள். தமிழ்இன உணர்வாளர்கள், அரச அதிகாரிகள், தொண்டர்கள். சில அரசியல் செயற்பாட்டாளர்கள் என பெரியதொரு "பட்டாளம்" எம்மிடம் உள்ளுத என்று மிகுந்த நம்பிக்கைகளோடு காத்திருந்தார்கள் என்பது உலகெங்கும் தெரிந்த ஒரு உண்மையாகும்.

மறுபக்கத்தில் தங்கள் உறவுகளையும் நண்பர்களையும் இராணுவத்திடம் ஒப்படைத்தவர்கள் அலலது தங்கள் நெருங்கியவர்களை வீதிகளில் கைது என்ற பெயரில் பிரிந்தவர்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எதிர்பார்ப்புக்கள் "குழம்பிய நிலையில்" இருந்திருக்கும் என்பதை அனைவரும் அறிந்திருந்தார்கள். அனால் ஒவ்வொரு எலும்புக்கூடாய் குழிகளிலிருந்து வெளியே எடுக்கப்பட்டுக்கும் நாட்களில் எவ்வாறான உணர்வுகளையும் அல்லது மன வலி-களை அனுபவித்திருப்பார்கள் என்பதை மற்றவர்கள் நிச்சயம் உணர்ந்திருப்பார்கள் இந்த செம்மணி விவகாரத்தில் உலகெங்கும் உள்ள அனைத்து தமிழர் தரப்பும் குறிப்பாக வடக்கு கிழக்கு மலையகம். தமிழகம் புலம்பெயர் உறவுகள் என அனைத்து தரப்பினரும் ஏதோ எங்களை ஆற்றுப்படுத்தும் ஒரு பதில் அல்லது நீதி எங்கள் காதுகளுக்கு கொண்டு வரப்படும் என்று காத்திருந்தார்கள். அகழாய்வுத் துறையில் கலாநிப் பட்டம் ஒருவர் தான் கற்ற கல்விக்கும் பெற்றுக் கொண்ட அனுபவத்திற்கும் துரோகம் இழைக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருப்புக்களை தங்கள் இதயங்களில் ஏநதிய வண்ணம் இருந்திருப்பார்கள். இதுதான் உண்மையிலும் உண்மை.

அந்த நாளும் வந்தது. ஆமாம் ஒக்டோபர் மாதம் 19ம் திகதி திங்கட்கிழமை உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் எதிர்பார்த்திருந்த அறிக்கையை பேராசிரியர் ராஜ் சோமதேவ யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்19ம் தி-கதி திங்கட்கிழமை சமர்ப்பித்தார்.

செம்மணிப் புதைகுழி அகழ்வாராய்ச்சி தொடர்பான தடயவியல் அறிக்கையைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றத்தில் சமரப்பித்த அறிக்கையின் விபரங்களை அவர் நீதிமன்றத்தில் வெளிப்படையாக வாசிக்க அந்த விபரங்கள் செய்திகளாக வெளியுலகிற்கு தெரிந்தன.

அதுவரையிலும் பேராசிரியர் ராஜ் சோமதேவாவை ஒரு பெரும்பான்மை இன மகனாக எமது மக்கள் பார்க்கவில்லை. ஒரு நீதியின் தூதுவனாகவே கற்பனை செய்திருப்பார்கள்.

ஆனால் மக்களும் செம்மணி புதைகுழிகளுக்கு அருகில் எத்தனையோ மாதங்கள் தங்களை அர்ப்பணித்து பணி செய்தவர்களும் திகைத்து நின்றார்கள். அந்த கயவ-னின் தீர்ப்பைக் கேட்டு இலட்சக் கணக்கானவர்கள் தங்கள் இழந்திருப்பார்கள் நிச்சயமாக. அவர்களது "மூளைகள்" இயங்க மறுத்திருக்கும். கடந்த பத்து நாட்களாக உலகத் தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் எமது தாயக மக்களும் கவலைகளால் வாடிப்போயிருப்பார்கள். அல்லது பொறுமையின்மையின் உச்சத்திற்கு சென்றிருப்பார்கள்.

ஆம்! அந்த கயவனது அறிக்கை வெளியான நாளான கடந்த 19ம் திகதியிலிருந்து பல குரல் ஒலித்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் நியாயமான அல்லது எமது வலிகளுக்கு மருந்து தடவும் வகையில் எதுவுமே அரசின் பக்கத்திலிருந்து ஆறுதலான வார்த்தைகள் அல்லது உறுதி மொழிகள் எதுவுமே கிட்டவில்லை.

அதே நேரத்தில் வடக்கு கிழக்கிலிருந்து அரசாங்கமோ அல்லது இனவாதிகளோ, அல்லது எமது உறவிகளின் இழப்பிற்கு காரணமானவர்களோ அதிரும் வகையில் "உரத்துக் குரல்" எழுப்பவல்ல ஒரு "உண்மையான" அரசியல் தலைவரைக் காணமுடியவில்லை.

ஆனால் ஊடகவியலாளர்கள் எமது மண்ணிலிருந்து குரல கொடுக்கின்றார்கள். தங்கள் எழுத்துக்கள் மூலமாக அவர்கள் தங்கள் கண்டனத்தையும் தெரிவித்து எது இனிமேல் எமது தரப்பால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அழுத்தமாகச் சொல்கின்றார்கள்.

இந்த வார எமது உதயன் வெளியீட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து "நிலாந்தன்" எழுதிய கட்டுரையும் கொழும்பிலிருந்து "பாலா" எழுதியுள்ள கட்டுரையும் எமது மக்களுக்கு சில தரவுகளையும் உண்மைகளையும் எதை நாம் செய்யத்தவறிவிட்டோம் என்பதையும் எடுத்து வந்துள்ளனர்.

நிலாந்தன் அவர்கள் சில இடங்களில் ஆக்குபூர்வமான கருத்துக்களை தனது கருத்துக்களாக முன்வைக்கின்றார். ராஜ் சோமதேவவிற்கு கடுமையான கண்டனங்களை முன்வைத்து பாராளுமன்றத்தில் உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் கருத்துக்களை அவர் வரவேற்றுள்ளார்.

சர்ச்சைக்குரிய செம்மணி மனிதப் புதைகுழியின் பின்னணியில் தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவு என்பன காரணமாக இருந்திருக்கலாம் என்றும், அங்கு முறையான இறுதிச் சடங்குகள் இடம்பெற்றதற்கான சில குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் தென்படுகின்றன என்றும் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ள கருத்துக்களை நிராகரித்து இதுவரை எழுத்து வடிவில நூற்றுங்கணக்கான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஆனால், எமக்கு பலம் சேர்க்கும் வகையிலும் தென்னிலங்கையையும் திட்ட மிட்ட இனவாத நகர்வுகளுக்கு காரணமாக விளங்குபவர்களையும் பயங்கொண்டு ஓட வைக்கும் வேறு அரசியல் தலைவர்களோ, கருத்துக்களை முன்வைக்கக்கூடிய புத்திஜீவிகளோ எம் மத்தியில் அற்றுப் போய்விட்டார்களா என்ற ஏக்கம் எம்மில் பலரின் இதயங்களில் எழுந்து நிற்கின்றது.

. இந்த வார எமது "உதயன்" வெளியீட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து "நிலாந்தன்" கொழும்பிலிருந்து "பாலா" ஆகியோர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஆக்குபூர்வமானவை என்பதை அவற்றைப் படிப்பதில் இருந்து தெரிந்து கொள்ளலாம். அவர்கள் இருவ-ரின் எண்ணங்களிலும் உண்மையான போராட்ட உணர்வுள்ள தலைவர் எவரும் இல்லாத ஒரு சமூகமாய் அதற்குள் ஏமாற்று அரசியல் செய்து தங்கள் பதவிகளைத் தக்க வைக்கும் "போலி" அரசியல்வாதிகள் காணப்படும் அநியாயம் நிலவும் ஒரு காலத்தில் அநியாயங்கள் நிகழ்ந்து கொண்டிருக்க அவற்றைபற்றி சிந்திக்காமல் எதையும் பேசாது மாகாண சபைத் தேர்தலுக்காக காத்திருக்கின்ற அரசியல்வாதிகளையும் அவர்களது வால்களையும் பதவி மோகத்திலிருந்து அப்புறப்படுத்துவதம் எமது மக்களுக்கு முன்பாக உள்ள "பணி" என்றே நாம் கருதுகின்றோம்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers
• EDITOR IN CHIEF: R. N. Logendralingam
• GRAPHIC: Pathma & Yalini
• TECHNICAL: Janani and Bala
• PRINTERS: KT Web Printing Ltd.
• DISTRIBUTION: Uthayan Team
Phone: 416 752 1524 - Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

கனடா வாழ் செந்தில் குமரன் அவர்களின் அயராத முயற்சியினால் 1 வயதான குழந்தையின் உயிருக்கு உத்தரவாதம் கிடைக்கப்பெற்றுள்ளது.





முல்லைத்தீவை முள்ளியவளையைச் சேர்ந்த 1 வயதான குழந்தை சிபின் புகழரசன் என்னும் பிஞ்சுக்குழந்தைக்கு இதய சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நிறைவேறியது, அத்துடன் குழந்தையின் உயிருக்கு உத்தரவாதம் கிடைக்கப்பெற்றுள்ளது. வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் "நிவாரணம்" புகழ் செந்தில்குமரனுக்கு!

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY
எல்லாவிமான வலிகளுக்கும் All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடதய் சம்மந்தமானவையும் Menstruation
உடற்பருமன் குறைத்தல் Weight Loss
முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

"போக்குவரத்து நெரிசல் மற்றும் வைத்தியசாலை வசதிகள் வரை யாழ்ப்பாண. நகரை மறுசீரமைக்க வேண்டும்"

யாழ்ப்பாண மருத்துவப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமாரன் வலியுறுத்து! அவரது சமூக அக்கறைக்கு குவியும் பாராட்டுக்கள்!



யாழ்ப்பாணத்தில் உள்ள போக்குவரத்து நெரிசல் தொடக்கம் வைத்தியசாலை வசதிகள் வரை யாழ்ப்பாண நகரை மறுசீரமைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள பேராசிரியர் சுரேந்திரகுமாரன் அவர்களைப் பாராட்டியும் அவரது சமூக அக்கறையைப் பாராட்டியும் யாழ்ப்பாணத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளில் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.!

யாழ்ப்பாண நகரில் அதிகரித்துவரும் போக்குவரத்து நெரிசல், வைத்தியசாலைகளில் நிலவும் உட்கட்டமைப்புக் குறைபாடுகள், பேரிடர்களை எதிர்கொள்வதற்கான தயார்நிலையின்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில், நகரை முறையான திட்டமிடலுடன் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் பீடாதிபதியும் சமுதாய மருத்துவத் துறைப் பேராசிரியருமான சுரேந்திரகுமாரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் 26.10.2026 அன்று திங்கட்கிழமை அநடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில், யாழ்ப்பாண நகரத்தை ஆரோக்கியமான நகரமாக மாற்றும் நோக்கில், ஆரோக்கிய நகரம் என்ற செயற்திட்டம் 2019ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடம், யாழ்ப்பாண மாநகரசபை, மாவட்ட செயலகம் மற்றும் ஆளுநர் அலுவலகம் ஆகியன இணைந்து இத்திட்டத்தில் செயற்பட்டு வருகின்றன.

எனினும், நகரை ஆரோக்கியமான பிராந்தியமாக மாற்றுவதற்குப் பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளபோதிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்க்கமான முடிவுகளும் செயற்பாடுகளும் இன்னும் முழுமையாக முன்னெடுக்கப்படவில்லை எனவும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

மேலும் தீர்வின்றித் தொடரும் போக்குவரத்து நெரிசல் யாழ்ப்பாண நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக அமைக்கப்பட்ட தொலைதூரப் பேருந்து நிலையம் பல ஆண்டுகள் கடந்தும் முழுமையாகப் பயன்பாட்டுக்கு வரவில்லை.

வெளி மாவட்டங்களிலிருந்து வரும் வாகனங்கள் ஒதுக்கப்பட்ட இடங்களில் தரித்து நிற்காமை, புகையிரத நிலையங்கள் பொதுப் போக்குவரத்துடன் முறையாக இணைக்கப்படாமை போன்றவை நகரின் போக்குவரத்து முகாமைத்துவத்தில் காணப்படும் முக்கிய குறைபாடுகளாக உள்ளன.

தொலைதூரப் பேருந்துகள் நகர மையத்துக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்துவதுடன், நகருக்கு வெளியே அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகளை முறையாகப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இதேநேரம் 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் நகருக்குள் அலுவலகங்களுக்குச் சென்று வரும் மக்களின் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்திற்கொண்டு, முன்னர் நடைமுறையில் இருந்த உள்நாட்டுப் போக்குவரத்து மற்றும் சுற்றுவட்டப் போக்குவரத்து முறைகளை நவீன தேவைகளுக்கு ஏற்ப மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் கீழ் நீண்ட காலத்திற்குப் பின்னர் எட்டு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையில் முதன்முறையாகப் பகல்நேரச் சிகிச்சைச் சேவையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகப் பேராசிரியர் தெரிவித்தார்.

இருப்பினும், மரபணு ஆய்வுக்கூடங்களை விரிவுபடுத்துதல், நோயாளர்களைத் துரிதமாக வைத்தியசாலைக்குக் கொண்டுவந்து இறக்குதல், அவசர ஊர்திகள் தடையின்றிச் சென்று வருதல் உள்ளிட்ட தேவைகளுக்குப் போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளில் உள்ள வைத்தியசாலைகளில் காணப்படுவதைப் போன்று, அவசர சிகிச்சைப் பிரிவுகள், நோயாளர்களை இறக்கும் இடங்கள் மற்றும் வாகனத் தரிப்பிடங்கள் ஆகியவற்றை முறையாகத் திட்டமிட்டு அமைக்க வேண்டும்.

இதன்மூலம் நோயாளர்களுக்குத் தாமதமின்றிச் சிகிச்சை வழங்குவதை உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மறுபுறம் யாழ்ப்பாண நகரம் அதிக நெருக்கடியான பகுதியாகக் காணப்படுவதால், பகல் வேளையில் எதிர்பாராத விபத்துகள் அல்லது பேரிடர்கள் ஏற்படும்போது அவற்றைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

குறிப்பாக, தீயணைப்புப் பிரிவு உள்ளிட்ட அவசரகாலக் கட்டமைப்புகள் போதுமான வசதிகளுடன் தயார்நிலையில் உள்ளனவா என்பதை ஆராய்ந்து, அவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பேராசிரியர் வலியுறுத்தினார்.

மேலும், நகரின் கால்வாய்கள் மற்றும் வடிகான்களை முறையாகப் பராமரிப்பதன் மூலம் டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆரோக்கிய நகரத் திட்டத்தை ஒருங்கிணைப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தில் பிரத்யேக அலுவலகம் அமைக்கப் பட்டுள்ளதாகவும், நவீன தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி நகரை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழர்களின் நீண்டகால இருப்பின் அடையாளமாக விளங்கும் யாழ்ப்பாண நகரத்தை ஆரோக்கியமானதும், முறையான உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டதுமான நகரமாக மாற்றுவதற்குப் பொதுமக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் அனைத்துத் துறையினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனப் பேராசிரியர் சுரேந்திரகுமாரன் வலியுறுத்தினார்.

ஈழத் தமிழ்த் திரைத்துறைக்கு ஒரு புதிய சந்தையை உருவாக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார் வடக்கின் ஆளுநர் நா.வேதநாயகன் !



ஈழத் தமிழ்த் திரைத்துறைக்கு ஒரு புதிய சந்தையை உருவாக்கி, உள்ளூர் கலைஞர்களின் படைப்புகள் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களைச் சென்றடைவதற்கும், அவர்களின் உழைப்புக்கு உரிய மதிப்பும் வருமானமும் கிடைப்பதற்கும் கரும்பறவை (Blackbird OTT) தளம் வழிவகுக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கரும்பறவை ஓடிடி தளத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு 27.10.2026 செவ்வாய்க்கிழமை அன்று யாழ்ப்பாணம் நாச்சிமார்கோவிலடியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர், ஈழத் தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கும் உள்ளூர் படைப்பாளர்களின் படைப்புகள் சர்வதேச அளவில் சென்றடைவதற்கும் இத்தகைய தளங்கள் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் எனக் குறிப்பிட்டார்.

ஒரு காலத்தில் ஈழத் தமிழ்த் திரைத்துறை தனித்துவமான அடையாளத்தைக் கொண்டிருந்ததையும், திரைப்படங்களும் பாடல்களும் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருந்ததையும் நினைவுகூர்ந்த ஆளுநர், தென்னிந்தியக் கலைப்படைப்புகளை ரசிப்பதில் தவறில்லை என்றாலும், அவற்றைப் பாராட்டும்போது எமது சொந்தக் கலைகளை மறந்துவிடக்கூடாது என வலியுறுத்தினார்.

ஈழத் தமிழ்க் கலைஞர்களிடம் திறமை இல்லாதது பிரச்சினையல்ல, அவர்களது படைப்புகள் பரந்துபட்ட பார்வையாளர்களைச் சென்றடைவதற்கான வாய்ப்புகளும், தொடர்ந்து படைப்புகளை உருவாக்குவதற்கான பொருளாதார ஆதரவும் சந்தை வாய்ப்புகளும் போதுமான அளவில் இல்லாமையே முக்கிய சவாலாக உள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். உலகெங்கும் உள்ள பார்வையாளர்களிடம் திரைப்படங்களையும் தொடர்களையும் கொண்டு சேர்க்கும் ஓடிடி தளங்கள், இக்குறையை நிவர்த்தி செய்வதற்குப் பங்களிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

ஈழத்துத் திரைப்படங்கள் போரை மட்டும் மையப்படுத்தியதாக இருக்க வேண்டிய அவசியமில்லை எனக் குறிப்பிட்ட ஆளுநர், போர் எமது வரலாற்றின் ஒரு பகுதி என்றாலும், அதற்கு அப்பாலும் எமக்கென்று தனித்துவமான வாழ்வியல் உள்ளது என்றார். மக்களின் மகிழ்ச்சி, காதல், நகைச்சுவை, குடும்ப உறவுகள், இளைஞர்களின் வாழ்க்கை, அவர்களது கனவுகள் மற்றும் சமூகம் எதிர்கொள்ளும் புதிய சவால்கள் என எமது வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் படைப்புகள் வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

கதை, நடிப்பு, ஒளிப்பதிவு, இசை, தொழில்நுட்பம் மற்றும் திரைக்கதை என அனைத்துத் துறைகளிலும் சர்வதேசத் தரத்தை நோக்கி உள்ளூர் கலைஞர்கள் முன்னேற வேண்டும் எனத் தெரிவித்த ஆளுநர், கலைத்தரத்துடன் பார்வையாளர்களைக் கவரும் தன்மையும் படைப்புகளில் இருக்க வேண்டும் என்றார். கலையையும் வணிகத்தையும் இணைப்பதில் தவறில்லை வணிக நோக்கத்துக்காகக் கலையின் தரத்தைக் கைவிடுவதுதான் தவறு என்றும் குறிப்பிட்டார்.


தரமான உள்ளூர்ப் படைப்புகளை ஆதரிப்பதில் பார்வையாளர்களுக்கும் பொறுப்பு உள்ளதாகத் தெரிவித்த ஆளுநர், சிறந்த படைப்புகளுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவதுடன், அவற்றைப் பார்ப்பதற்கான நியாயமான கட்டணத்தையும் செலுத்துவது படைப்பாளர்களின் உழைப்புக்கும் திறமைக்கும் பொருளாதார மதிப்பை வழங்கும் எனக் கூறினார்.

புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் தாயகத்தில் உருவாகும் திரைப்படங்களையும் பாடல்களையும் தமக்குப் பொருத்தமான நேரத்தில் பார்ப்பதற்கும், எமது மண்ணின் கலைஞர்களுடன் தொடர்பைப் பேணுவதற்கும் கரும்பறவை ஓடிடி தளம் உதவ முடியும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். இத்தளம் ஈழத் தமிழ்த் திரைத்துறைக்குப் புதிய சந்தையை உருவாக்குவதுடன், கலைஞர்களுக்கு வருமானம் கிடைக்கவும் புதிய தயாரிப்பாளர்கள் உருவாகவும் வழிவகுக்க வேண்டும் என்றும் அவர் வாழ்த்துத் தெரிவித்தார்.

ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் துணைச் செயலாளர் மதிகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், காரைநகர் இந்துக் கல்லூரியின் ஆசிரியரும் இளங்கலைஞருமான பா.இரமணாகரன், ராஜா கிறீம் ஹவுஸ் உரிமையாளர் சி.சண்முகானந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். சம்பத் வங்கி யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளர் ராஜசாந்தன் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். கரும்பறவை ஓடிடி தளத்தின் இயக்குநர் ச.சர்மன் அறிமுக உரையாற்றினார். ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் தலைவரும் மருத்துவ நிபுணருமான எஸ்.சிவன்சுதன் அவர்களும் நிகழ்வில் பங்கேற்றார்.

கனடிய செய்திகள் Canadian News

கனடா – ஸ்காபுறோவில் நடைபெற்ற பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் நூற்றாண்டு விழாவும் நினைவு மலர் வெளியீடும்!



- குரு அரவிந்தன்

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4:00 மணியளவில் ரொறன்ரோவில் உள்ள தமிழிசைக் கலா மன்றத்தில் மொழியியல் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் நூற்றாண்டு விழா கவிஞர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து தமிழ்தாய் வாழ்த்து, கனடா பண் ஆகியன இடம் பெற்றன. தொடர்ந்து வரவேற்பு நடனமும், கனடா, அண்ணாமலை பல்கலைக்கழக விரிவுரையாளர் நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு அவர்களின் வரவேற்புரையும் இடம் பெற்றன.

கவிஞர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமை உரையைத் தொடர்ந்து பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களி உரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் பல்கலைக்கழகத்தில் படித்த நாட்களில் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களுடன் பழகிய மறக்க முடியாத சில நினைவுகளைக் குறிப்பிட்டார். தொடர்ந்து பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் உரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் பேராசிரியர் ஆ. சதாசிவம் அதிகம் கவனம் செலுத்திய ஆக்கங்களில் இருந்து சுமேரிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையே உள்ள தொடர்புகளைக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியின் போது பேராசிரியர் இ. பாலசுந்தரம், திருமதி பூங்கோதை பாலராஜன் ஆகியோரால் தொகுக்கப்பட்ட நூற்றாண்டு நினைவு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப் பெற்றது. 522 பக்கங்களைக் கொண்ட இந்த நூலைத் தொகுத்து எமக்களித்த பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களை எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்கள் மலர்ச் செண்டு வழங்கிக் கௌரவித்தார். தொடர்ந்து பேராசிரியர் ஆ. சதாசிவத்தின் மகனான மதியழகன் ஆறுமுகம் அவர்களின் உரையும் இடம் பெற்றது.

அராலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் ஆ. சதாசிவம் 1948 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றார். 1952 ஆம் ஆண்டு சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றார். உதவி விரிவுரையாளராக அங்கே பணியாற்றி 1954 ஆம் ஆண்டு முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். ஆங்கிலம், வடமொழி, பாளி, மலையாளம் போன்ற மொழிகளையும் கற்றுக் கொண்டார். "சுமேரியன் ஒரு திராவிட மொழி" "சுமேரிய - திராவிடம்" போன்ற நூல்களையும் ஆங்கிலத்தில் வெளியிட்டார். கருத்துரைக்கோவை, ஈழத்துத் தமிழ் கவிதைக் களஞ்சியம், ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை, ஞானப்பள்ளு, தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி, மொழியியலும் தமிழ் மொழி வரலாறும், ஈழத்துத் தமிழ் வழக்கு அகராதி, மொழி இலக்கியம் இறைநெறி போன்ற நூல்களைத் தமிழில் தந்துள்ளார். பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் மனைவி திருமதி திருஞானேஸ்வரி மற்றும் குடும்பத்தினர் அமெரிக்காவில் இருந்து வருகைதந்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

திரு. குமரகுரு கணபதிப்பிள்ளை, திருமதி சசிகலா ஜீவானந்தன், திரு. சோம ஸ்ரீகதிர்காமநாதன், கலாநிதி கவிதா சிவாகரன் ஆகியோர் ஆய்வுரை வழங்கினார்கள். திருமதி விமலா பாலசுந்தரம் நன்றியுரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளராகத் திருமதி ஜோதி ஜெயக்குமார் சிறப்பாகப் பணியாற்றினார்.















மத ஆடைக்கு மதிப்பளிப்போம்

ஆனால் அதை அணிபவர் சட்டத்திற்கு அடிபணிய வேண்டும்!

இலங்கையில் மத அதிகாரம், சமமான நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சி எப்படியிருக்க வேண்டும்?

அறிமுகம்: மத நம்பிக்கைக்கு மரியாதை, செயல்களுக்கு பொறுப்புக்கூறல்

ஒரு மத ஆடை என்பது ஆன்மிக மரபுகள், அறநெறிப் போதனைகள் மற்றும் உயர்ந்த விழுமியங்களின் அடையாளமாகக் கருதப்படுகிறது. எனவே, அதற்கு மரியாதை அளிப்பது இயல்பானது. ஆனால், அந்த ஆடையை அணிந்திருப்பது ஒருவருக்குச் சட்டத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் கவசமாக மாறிவிடக் கூடாது. மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், காவல்துறையினர் மற்றும் சாதாரண குடிமக்கள் என அனைவருக்கும் ஒரே அடிப்படைக் கொள்கை பொருந்த வேண்டும்: **சட்டத்திற்கு மேலானவர் எவரும் இல்லை**.

மதம், அரசியல் மற்றும் பொது அதிகாரம் ஆகியவை நீண்டகாலமாக ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ள இலங்கையில் இந்தக் கொள்கை மிகவும் முக்கியமானது. பௌத்த மதத்திற்கு இலங்கை அரசியலமைப்பில் சிறப்பான இடம் வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, மதச் சுதந்திரமும் சட்டத்தின் முன் சமத்துவமும் அரசியலமைப்பால் பாதுகாக்கப்படுகின்றன. மதத்திற்கு வழங்கப்படும் மரியாதையும் சட்டத்தின் சமமான நடைமுறையும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல.

இங்கு எழும் அடிப்படைக் கேள்வி, மதத் தலைவர்கள் மரியாதைக்குரியவர்களா என்பதல்ல. அவர்கள் மரியாதைக்குரியவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மத அந்தஸ்து ஒருவரைச் சட்டப்பூர்வமான பொறுப்புக்கூறலில் இருந்து விடுவிக்க வேண்டுமா என்பதே உண்மையான கேள்வி.

சட்டத்தின் ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகச் சமூகத்தில் இதற்கான பதில் தெளிவானது: **இல்லை**.

மத மரியாதை என்பது சட்ட விலக்காக மாறக்கூடாது

இலங்கைச் சமூகத்தில் பௌத்த பிக்குகள் கல்வி, ஆன்மிக வழிகாட்டல், பண்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் சமூக சேவை போன்ற துறைகளில் முக்கியமான பங்களிப்புகளைச் செய்துள்ளனர். பலர் தமது வாழ்க்கையை மக்களுக்குச் சேவை செய்வதற்கும் கருணை, ஒழுக்கம் மற்றும் அறநெறிகளை வளர்ப்பதற்கும் அர்ப்பணித்துள்ளனர். அவர்களின் சேவைகள் உரிய முறையில் மதிக்கப்பட வேண்டும்.

ஆனால், மத அதிகாரம் கொண்டிருப்பதால் ஒருவரின் ஒவ்வொரு செயலும் சட்டபூர்வமானதாகவோ அறநெறிக்கு உட்பட்டதாகவோ ஆகிவிடாது. மதத் தலைவர்களும் மற்ற குடிமக்களைப் போலவே தமது செயல்களுக்குப் பொறுப்புடையவர்கள்.

குற்றச்சாட்டுகள் எழுந்து, அவற்றை விசாரிப்பதற்குப் போதுமான நியாயமான காரணங்கள் இருக்கும்போது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பக்கச்சார்பின்றி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். ஒருவரின் மத ஆடை, பதவி, அரசியல் தொடர்புகள் அல்லது சமூகச் செல்வாக்கு ஆகியவை சட்டபூர்வமான விசாரணைக்குத் தடையாக இருக்கக்கூடாது.

ஒருவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுவது அவர் குற்றவாளி என்பதற்கான நிரூபணம் அல்ல. கைது செய்யப்படுவதும் குற்றம் நிரூபிக்கப்பட்டதற்குச் சமமல்ல. குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் நியாயமான விசாரணை, சட்ட நடைமுறைகளுக்கான உரிமை மற்றும் குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றமற்றவராகக் கருதப்படும் பாதுகாப்பு ஆகியவை வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை, மத அந்தஸ்தைக் காரணமாகக் காட்டி ஒருவர் சட்டபூர்வமான விசாரணையிலிருந்து தப்பிக்கவும் அனுமதிக்கக் கூடாது.

மதத்திற்கு வழங்கப்படும் மரியாதை, பொறுப்புணர்வை வலுப்படுத்த வேண்டும்; அதற்குப் பதிலாக மாறக்கூடாது.

இலங்கை: மதம், அரசியல் மற்றும் பொறுப்புக்கூறல்

பௌத்த நிறுவனங்களுக்கும் அரசியல் அதிகாரத்திற்கும் இடையிலான உறவு இலங்கையில் நீண்டகாலமாகப் பொது விவாதத்திற்குரியதாக இருந்து வருகிறது. தேசிய அடையாளம், கல்வி, அரசியலமைப்புச் சீர்திருத்தம் மற்றும் பொதுக் கொள்கைகள் தொடர்பான விவாதங்களில் மதத் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். சிலர் அரசியல் இயக்கங்களுடனும் சர்ச்சைகளுடனும் தொடர்புபட்டுள்ளனர்.

மத அதிகாரமும் அரசியல் செல்வாக்கும் ஒன்றோடொன்று இணையும் போது, அனைவரும் சமமாக நடத்தப்படுகிறார்களா என்ற கேள்வி எழுவது இயல்பானது. செல்வாக்கு மிக்கவர்கள் முன்னுரிமை பெறுகிறார்கள் என்றும், சாதாரண மக்கள் சட்டத்தின் முழுமையான தாக்கத்தை எதிர்கொள்கிறார்கள் என்றும் மக்கள் நம்பத் தொடங்கினால், நீதித்துறையின் மீதான நம்பிக்கை பாதிக்கப்படலாம்.

இத்தகைய நிலை காவல்துறை, நீதிமன்றங்கள் மற்றும் அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கையைக் குறைக்கக்கூடும். அதேவேளை, பொதுமக்களின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட மத நிறுவனங்களின் நற்பெயருக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இதற்கான தீர்வு பௌத்த மதத்தையோ வேறு எந்த மதத்தையோ எதிர்ப்பது அல்ல. மாறாக, சட்டத்தை அனைவருக்கும் ஒரே அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதே தீர்வாகும். விசாரணைகள் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். சட்ட நடவடிக்கைகள் உரிய நடைமுறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். நீதிமன்றங்கள் அரசியல் அல்லது மத அழுத்தங்களின்றி தீர்ப்புகளை வழங்க வேண்டும்.

எந்தவொரு நிறுவனமும் சட்டபூர்வமான கண்காணிப்புக்கு அப்பாற்பட்டதாக இருக்கக்கூடாது. அதேபோன்று, ஒருவரின் மத அடையாளத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அவர் குற்றவாளியாகக் கருதப்படவும் கூடாது.

சமமான சட்டம்: சிறப்புச் சலுகைகள் எவருக்கும் இல்லை

சட்டத்தின் ஆட்சி என்பது செல்வம், சமூக அந்தஸ்து, அரசியல் செல்வாக்கு அல்லது மத அதிகாரம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவரும் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் என்பதைக் குறிக்கிறது.

ஒரு சாதாரண குடிமகன் மீது குற்றச்சாட்டு எழுந்தால் விசாரணை நடத்தப்பட முடியும் என்றால், ஒரு மதத் தலைவரும் தானாகவே அதிலிருந்து விலக்குப் பெற முடியாது. அதேவேளை, மத நம்பிக்கை அல்லது மதப் பதவியைக் காரணமாகக் கொண்டு அவருக்கு எதிராகப் பாரபட்சமான நடவடிக்கைகளும் எடுக்கப்படக்கூடாது.

சட்டத்தின் முன் சமத்துவம் என்பது ஒவ்வொரு வழக்கிலும் உள்ள தனிப்பட்ட சூழ்நிலைகளைப் புறக்கணிப்பதல்ல. மாறாக, அனைவருக்கும் ஒரே சட்டக் கோட்பாடுகள், உரிய நடைமுறைகள் மற்றும் நீதிக்கான பாதுகாப்புகள் பாரபட்சமின்றிப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

பொறுப்புக்கூறல் என்ற பெயரில் அவமானப்படுத்துதல், பாகுபாடு காட்டுதல் அல்லது அரசியல் நோக்கத்துடன் வழக்குத் தொடருதல் ஆகியவற்றை நியாயப்படுத்த முடியாது. மதத் தலைவர்களுக்குக் கூடுதல் தண்டனை வழங்குவதே நோக்கமல்ல் அவர்களுக்கு அநியாயமான பாதுகாப்போ பாரபட்சமான நடத்தையோ வழங்கப்படாமல் இருப்பதே நோக்கமாகும்.

நியாயமான நீதிமுறை இரண்டு கொள்கைகளை உறுதிப்படுத்த வேண்டும்: சிறப்புச் சட்ட விலக்கு கூடாது; தெரிவுசெய்து துன்புறுத்துவதும் கூடாது.

தெரிவுசெய்யப்பட்ட நீதி ஏற்படுத்தும் ஆபத்து

சட்டம் தெரிவுசெய்து நடைமுறைப்படுத்தப்படுவதாக மக்கள் கருதும்போது, ஜனநாயக நிறுவனங்கள் மீதான நம்பிக்கை கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. செல்வாக்கு மிக்கவர்கள் சட்ட விசாரணைகளிலிருந்து தப்பிக்க முடிகிறது என்றும், அதிகாரமற்றவர்கள் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்கிறார்கள் என்றும் மக்கள் நம்பினால், நீதித்துறையின் நம்பகத்தன்மை சிதையத் தொடங்கும்.

இந்தப் பிரச்சினை மதத் தலைவர்களுடன் மட்டும் தொடர்புடையதல்ல. அரசியல்வாதிகள், செல்வந்த வணிகர்கள், உயர் அரச அதிகாரிகள் மற்றும் செல்வாக்கு மிக்க சமூகப் பிரமுகர்கள் என அனைவரும் சட்டத்திற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

பலவீனமானவர்களிடம் கடுமையாகவும் அதிகாரம் மிக்கவர்களிடம் தயக்கத்துடனும் நடந்துகொள்ளும் நீதிமுறை உண்மையான நீதியை வழங்க முடியாது.

அதேவேளை, பொதுமக்களின் கோபமும் சமூக ஊடகப் பிரசாரங்களும் ஆதாரங்களுக்கும் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கும் மாற்றாக இருக்க முடியாது. உறுதிப்படுத்தப்படாத குற்றச்சாட்டுகள் ஒருவரின் நற்பெயரைச் சிதைக்கலாம் சமூக விரோதத்தையும் அதிகரிக்கலாம்.

இதற்கான சரியான அணுகுமுறை என்னவென்றால், பக்கச்சார்பற்ற விசாரணை, வெளிப்படையான சட்ட நடைமுறைகள் மற்றும் சுதந்திரமான நீதித்துறைத் தீர்மானங்கள் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதாகும்.

அதிகாரம் மிக்கவர்களையும் பொறுப்புக்கூறச் செய்யும் வலிமையும், அனைவரையும் தன்னிச்சையான தண்டனையிலிருந்து பாதுகாக்கும் நியாயமும் நீதிமுறைக்கு இருக்க வேண்டும்.

மத நிறுவனங்கள் தமது நம்பகத்தன்மையைப் பாதுகாக்க வேண்டும்

தமது உறுப்பினர்கள் தொடர்பாக நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் எழும்போது, மத நிறுவனங்கள் அவற்றை உரிய தீவிரத்துடன் அணுகுவதற்குப் பொறுப்புடையவை. சட்டபூர்வமான விசாரணைகளுக்கு ஒத்துழைத்தல், தெளிவான ஒழுக்க விதிகளைப் பின்பற்றுதல் மற்றும் உரிய வெளிப்படைத்தன்மையைப் பேணுதல் ஆகியவை மக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்க உதவும்.

இதன் பொருள், நீதிமன்றத் தீர்ப்புக்கு முன்னரே ஒருவரைக் குற்றவாளியாகக் கருதுவது அல்ல. மாறாக, உண்மை, கருணை மற்றும் நீதி ஆகியவற்றை மத நிறுவனங்கள் நடைமுறையில் கடைப்பிடிக்கும்போது அவற்றின் நம்பகத்தன்மை மேலும் வலுப்பெறும் என்பதே இதன் பொருள்.

ஒரு தனிநபரின் தவறான செயல்களைக் காரணமாகக் கொண்டு ஒட்டுமொத்த மதச் சமூகத்தையும் குற்றம்சாட்டக் கூடாது. அதேவேளை, மதச் சமூகத்தின் நற்பெயரைக் காரணமாகக் காட்டி தனிநபர் தொடர்பான நியாயமான கேள்விகளையும் கவலைகளையும் மௌனப்படுத்தவும் கூடாது.

மதத்தைப் பாதுகாப்பதும் பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல. மாறாக, அவை ஒன்றையொன்று வலுப்படுத்தக்கூடியவை.

முடிவுரை: மத ஆடைக்கு மரியாதை அளிப்போம்; சட்டத்தை நிலைநாட்டுவோம்

மத, அரசியல் மற்றும் சமூக வேறுபாடுகளைக் கடந்து மக்களின் நம்பிக்கையைப் பேணக்கூடிய நிறுவனங்கள் இலங்கைக்குத் தேவை. மதச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், உண்மையான ஆன்மிகச் சேவையை மதித்தல் மற்றும் அச்சமோ பாரபட்சமோ இன்றி சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகியவை நீதியான சமூகத்தின் அடிப்படைகளாகும்.

ஒரு மத ஆடை புனிதமான அழைப்பின் அடையாளமாக இருக்கலாம். ஆனால் அது தனிநபரின் பொறுப்பை நீக்கிவிடாது. ஒரு பதவி மரியாதையைப் பெற்றுத் தரலாம். ஆனால் அது ஆதாரங்களுக்குப் பதிலாக இருக்க முடியாது. அரசியல் தொடர்புகளும் சமூகச் செல்வாக்கும் சட்டத்திலிருந்து தப்பிப்பதற்கான அனுமதிச் சீட்டாக மாறக்கூடாது.

கொள்கை தெளிவானது: குற்றச்சாட்டுகளை நியாயமாக விசாரிக்க வேண்டும்; குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்; உரிய சட்ட நடைமுறைகளின் மூலம் குற்றத்தை நிரூபிக்க வேண்டும்; அதன் பின்னர் பாரபட்சமின்றிச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பௌத்த பிக்குகள், கிறிஸ்தவ மதகுருக்கள், இந்துக் குருக்கள், முஸ்லிம் மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் சாதாரண குடிமக்கள் என அனைவருக்கும் இந்த அடிப்படைக் கொள்கை பொருந்த வேண்டும்.

மத ஆடைக்கு மரியாதை அளிப்போம். மத நம்பிக்கையை மதிப்போம். சட்டத்தை நிலைநாட்டுவோம். ஆனால் மரியாதையைச் சட்ட விலக்குடன் ஒருபோதும் குழப்பிக்கொள்ள மாட்டோம்.

சட்டம் அனைவருக்கும் சமம். சிறப்புச் சலுகைகளுக்கான இரகசியக் கதவுகள் இல்லை. நீதிக்கு மேலானவர் எவரும் இல்லை.

மதத்திற்கான மரியாதையும் சட்டத்தின் முன் சமத்துவமும் ஒன்றாக நிலைநிற்க வேண்டும் என்று நீங்கள் நம்பினால், இந்தச் செய்தியைப் பகிருங்கள்.

எழுதியவர் - ஈழத்து நிலவன்
தமிழ்த் தேசிய வரலாற்றாய்வாளர் | உலக அரசியல், பொருளாதாரம், உளவுத்துறை மற்றும் இராணுவ ஆய்வாளர்
27-10-2026

இலங்கை செய்திகள் Sri Lanka News

குழந்தையை வைத்தியசாலையில் பிரசவித்து பின்னர் வீடு திரும்பிய இளம் தாய் கிணற்றில் விழுந்து மரணம்!

- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் - தொல்புரம், கண்டாமை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளம் தாய் ஒருவர் கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்ட சோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பெண் கடந்த 19ஆம் திகதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தனது முதலாவது ஆண் குழந்தையைப் பிரசவித்துள்ளார். பிரசவத்தின் பின்னர் சிகிச்சை பெற்று வந்த அவர், 26ம் திகதி திங்கட்கிழமை வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளார்.

அன்று பிற்பகல் 6.30 மணியளவில் வீட்டைச் சென்றடைந்த அவர், இரவு 7.30 மணியளவில் வீட்டுக் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரின் சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இந்த வேதனைக்குரிய சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான அவுஸ்த்திரேலிய மற்றும், நியூசிலாந்து தூதுவர்கள்

பலாலி விமான நிலையத்தையும் ஆய்வு செய்தனர்!

- ந.லோகதயாளன்



யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்துள்ள நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய ஆகிய நாடுகளின் தூதுவர்கள், 27ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தைப் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

26ம் திகதி தனித்தனியாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்த இவ்விரு நாடுகளின் தூதுவர்களும், தமது விஜயத்தின் முதற்கட்டமாக காங்கேசன்துறை துறைமுகத்துக்குச் சென்று பார்வையிட்டமையுடன், அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து, காங்கேசன்துறை கடற்படை உயர் அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணப் பொலிஸ் உயர் அதிகாரிகளையும் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இவ்வாறான முக்கிய சந்திப்புகளை நிறைவு செய்த நிலையிலேயே, தூதுவர்கள் இருவரும் செவ்வாய்க்கிழமை அன்று பலாலி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு விஜயம் மேற்கொண்டு, அதன் செயற்பாடுகளைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.



செம்மணி இடைக்கால அறிக்கை குறித்து நீதிமன்ற உத்தரவுக்கமையவே எமது அரசு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கும்!

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவிப்பு

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை குறித்து, நீதிமன்ற உத்தரவுகளுக்கு அமைவாகவே அரசின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தில் 27-10-2026 அன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது: "பேராசிரியர் ராஜ் சோமதேவவினால் தயாரிக்கப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இடைக்கால அறிக்கை கடந்த 19ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் பிரதிகளை இந்த விவகாரத்துடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கும் வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதற்கமைய, அந்தத் தரப்பினர் அந்த அறிக்கையை முழுமையாக ஆராய்ந்து தமது கருத்துக்களையும் அவதானிப்புகளையும் நீதிமன்றத்தில் முன்வைப்பார்கள்.

இதற்கு மேலதிகமாக, அந்தப் பகுதியில் தோண்டி எடுக்கப்பட்ட மாதிரிகளின் பழமையைக் கண்டறியும் கார்பன் கால நிர்ணயச் சோதனையை மேற்கொள்வதற்கான அனுமதியை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திடம் கோரியுள்ளது.

இது தொடர்பான தனது தீர்மானத்தையும் உத்தரவையும் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் எதிர்வரும் நவம்பர் 19 ஆம் திகதி அறிவிக்கவுள்ளது." - என்றும் அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

தமிழ் பேசும் அமைச்சரின் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களங்களின் வடக்கு அலுவலகங்களில் "குவிக்கப்படும்" "தென்னிலங்கை" உத்தியோகத்தர்களால் தோன்றியுள்ள "அபாய எச்சரிக்கை"

- ந.லோகதயாளன்



தமிழ் பேசும் அமைச்சரான சந்திரசேகரன் அவர்களின் நிர்வாகத்தில் இயங்கும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களங்களின் வடக்கு மாகாண அலுவலகங்களில் "குவிக்கப்படும்" தென்னிலங்கையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களால் தோன்றியுள்ள "எச்சரிக்கை" தொடர்பாக சமூகஆர்வலர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தை திட்டமிட்டு முழுமையாக சிங்கள மயமாக்கல் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

வடக்கு மாகாண கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்கள் சிங்கள உத்தியோகத்தர்கள. மூலம் நிரப்பும் படலம் இந்த ஆட்சியில் மிக உச்சம. பெற்றுள்ளபோதிலும் எவரும. கண்டுகொள்ளவில்லை என தெரிவிக்கம்படுகின்றது.

இதில் அதிகம. சிங்கள மயமாக்கப்படும் முதலாவது அலுவலகமாக மன்னார் அலுவலகம் விளங்குகினறது. மன்னார் அலுவலகத்திலே தற்போது சகல தரத்திலும் 8 உத்தியோகத்தர்கள் மாத்திரமே பணியில் உள்ளனர். இதனால் அங்கே புதிதாக 10 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட 10 உத்தியோகத்தர்களில் 8 பளர் சிங்கள இனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களாக காணப்பட்டனர். இதன்போது 10 தமிழ் உத்தியோகத்தர்களும் 8 சிங்கள உத்தியோகத்தர்களுமாக காணப்படுவது தொடர்பில் விசனம் தெரிவித்தபோதும. எவருமே குரல் எழுப்பவில்லை.

இதனைப் புரிந்துகொண்ட கொழும்பு அரசு 10 பேர் உள்ள தமிழ் உத்தியோகத்தர்களில் 4 பேருக்கு 27ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றைய தினம் கட்டாய இடமாற்றம் வழங்கியுள்ளது. இதனால் மன்னாரில் உள்ள மீன்பிடி அலுவலகத்தில் சகல தரத்திலும் 6 பேர் மட்டுமே தமிழ் உத்தியோகத்தர்களாகவும் 8 பேர் சிங்கள மொழி உத்தியோகத்தர்களாகவும் இருப்பதனால் மன்னார் கடற்றொழில் திணைக்களமே விரைவில் சிங்கள மயப்படுத்தப்பட்டு விடுமோ என்ற அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கட்டாய இடமாற்றம் வழங்கப்படும் 4 தமிழ் உத்தியோகத்தர்களும் மன்னாரில் அண்மையில் இடம்பெற்ற கடல் அட்டை ஏலத்தின்போது உதவிப் பணிப்பாளருடன் இணைந்து பணியாற்றியவர்கள் என்ற அடிப்படையிலேயே இந்த கட்டாய இடமாற்றம் எனக் கூறப்படுவதனால் இந்த செயல் திட்ட மிட்ட இனச் சுத்திகரிப்பா என சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

தற்போது கட்டாய இடமாற்றம. வழங்கப்படும் 4 உத்தியோகத்தர்களில் ஒருவர் 58 வயதுடையவர் என்பதனைக்கூட கருத்தில் எடுக்கப்படவில்லை எனவும் மாவட்டத்தில் எஞ்சியுள்ள 6 தமிழ் உத்தியோகத்தர்களிலும் இருவர் எதிர் வரும் ஜனவரி மாத்த்துடன் வருடாந்த இடமாற்றத்தின் மூலம் மாற்றலாகி செல்லும் உத்தியோகத்தர்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்டமானது கடற்றொழிலில் அதிக நெருக்கடிகள், முரண்பாடுகளைக் கொண்ட மாவட்டம் என்பதை தெரிந்தும் இவ்வாறு சிங்கள மயப்படுத்தப்படுவது எதிர் காலத்தில் ஓர் பாரிய சிரகசிய திட்டத்தின் முன்னோடியாகவே கருதப்படுகின்றது.

இதேநேரம் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் தலா 4 சிங்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு ஏற்கனவே இரு சிங்கள ஊழியர்கள் பணியாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் 9 வயது சிறுமியை சித்திரவதை செய்த அவரது சித்திக்கு 7 வருட கடூழிய சிறைத்தண்டனை

மட்டக்களப்பு பிரதேசம் ஒன்றில் 9 வயது சிறுமி ஒருவரை இரும்பு கரண்டியால் கூடு வைத்து ஒரு வருடகாலமாக சித்திரவதை செய்த குற்றத்துக்காக சிறுமியின் சித்தியான 25 வயதுடைய அப்துல் மும்தாஜ் என்பவருக்கு 7 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 15 ஆயிரம் ரூபா அபராதம் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 25 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்குமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி.ஜே. பிரபாகரன் 29ம் திகதி அன்று வியாழக்கிழமை (29-10-2026) தீர்ப்பளித்தார்.

குறித்த பிரதேசம் ஒன்றில் குறித்த சிறுமியின் தாயார் இல்லாத நிலையில் அவரது தந்தையார் 25 வயதுடைய அப்துல் மும்தாஜ் என்பவரை இரண்டாவது திருமணம் முடித்துக் கொண்ட இவர் கணவரின் முதல் மனைவியின் 9 வயது சிறுமியை கடந்த 2015 மார்ச் 10ம் திகதி தொடக்கம் 2016 மார்ச் 10ம் திகதியான ஒரு வருட காலத்தில் தொடர்ச்சியாக இரும்பு கரண்டியால் கூடு வைத்து மற்றும் வாயில் துணியை அடைத்து அடித்து துன்புறுத்தி சித்திரவதை செய்து வந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த சிறுமியின் சித்தியை 2016 பொலிசார் கைது செய்து அவருக்கு எதிராக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து விசாரணைகள் இடம் பெற்று வந்த நிலையில் குறித்த வழக்கு 2022ம் ஆண்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் வழக்கு தொடுநர் சார்பில் அரச சட்டவாதிகளான எஸ். அனுஷாங்கன் மற்றும் ரி.தர்சிகா ஆகியோர் ஆஜராகி தொடர்ந்து வாதாடி வந்த நிலையில் குறித்த நபர் குற்றவாளியாக நீதிமன்றில் 2026 ம் ஆண்டு ஒக்டோபர் 13 திகதி (2026-10-13) இனங்காணப்பட்டு தண்டனை தீர்ப்பு அறிவிக்கப்பட்டது

இதனையடுத்து குறித்த பெண்ணுக்கு முதலாவது குற்றத்திற்கு 7 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 5 ஆயிரம் ரூபா அபராதமும் இரண்டாவது குற்றத்துக்கு தலா ஒரு குற்றத்திற்கு 7 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 5 ஆயிரம் ரூபா அபராதமும் மூன்றாவது குற்றத்திற்கு 7 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 5 ஆயிரம் அபராதமும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 25 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு வழங்குமாறும் குறித்த தண்டனையை சமகாலத்தில் செயல்படுத்துமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி.ஜே. பிரபாகரன் 29ம் திகதி அன்று வியாழக்கிழமை தீர்ப்பளித்தார்.



செம்மணிப் புதைகுழி அறிக்கை:
பேராசிரியர் ராஜ் சோமதேவவிடம் கேட்கப்படவேண்டிய கேள்விகள்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



செம்மணி அறிக்கை தொடர்பாக பேராசிரியர் ராஜ் சோமதேவ மீது தமிழ்த் தரப்பு குற்றச்சாட்டுகளை வைக்கிறது.அவரை இனவாதி என்று திட்டும் பதிவுகளை சமூகஊடக வலைத்தளங்களில் காணக்கூடியதாக உள்ளது. சோமதேவ யார் என்பது தமிழ்த் தொல்லியலாளர்கள் மத்தியில் ஏற்கனவே தெரிந்த ஒரு விடயம்.

எனது நண்பர் ஒருவர் சொன்னார், விக்னேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், அவர் தமிழ் மொழியின் தொன்மை, தமிழ் மக்களின் தொன்மை தொடர்பாக ஆற்றிய உரைகள், வெளியிட்ட அறிக்கைகள் போன்றவற்றிற்கு சோமதேவ தனது காணொளிக-ளில் பதில் வினையாற்றியதாகவும், அந்தக் கா-ணொளிகளில் சிலவற்றை தான் பார்த்ததாகவும், அவை அவருடைய தொல்லியல் சார் அறிவை குறித்து தனக்கு மதிப்பை ஏற்படுத்தவில்லை என்றும்.

மேலும், ராஜ் சோமதேவ மாத்தளைப் புதைகுழி தொடர்பாக அமெரிக்காவுக்கு அனுப்பிய எலும்பு மாதிரிகளில் விலங்குகளின் எலும்புகள் இருந்ததாகக் கூறி அமெரிக்காவின் ப்ளோரிடாவில் உள்ள ஆய்வுக்கூடம் அவரைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்திருப்பதாகவும் ஒரு செய்தி உண்டு.

அதுபோலவே மன்னார் சதோச வளாகத்தில் காணப்பட்ட புதைகுழி தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்களும் சர்ச்சைகளுக்கு உள்ளாகின. மேலும, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் நியமிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய செயலணி ஒன்றில் சோமதேவர உறுப்பினராக இருந்திருக்கிறார். அந்தச் செயலணியானது கிழக்கில் பௌத்த மரபுரிமைச் சின்னங்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கத்தைக் கொண்டது.

மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில் ஒரு கேள்வியைத் தொகுத்துக் கேட்கலாம். பேராசிரியர் தொடர்பான மேற்கண்டவாறான சந்தேகங்கள், தரவுகள் என்பவற்றின் அடிப்படையில் தமிழ்த் தரப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள், சிவில் சமூகங்கள் ஏன் அவர் செம்மணிக்குள் இறக்கப்பட்ட போது கேள்வி எழுப்பியிருக்கவில்லை?

ஒரு பகுதி ஆங்காங்கே முகநூலில் எழுதியது. ஆனால் அவரைப் போன்ற ஒருவர் இந்த அகழ்வுப்பணிகளில் ஈடுபடக்கூடாது என்று தமிழ்த் தரப்பு தனது ஆட்சேபனையை உரிய தரப்புகளுக்கு, உரிய விதத்தில் தெரிவித்திருந்ததா? அவ்வாறு தெரிவித்திருக்காத ஒரு பின்னணியில் இப்பொழுது அவருடைய இடைக்கால அறிக்கை மீது விமர்சனங்கள் வைக்கப்படுகின்றனவா?

அதிலும் குறிப்பாக,கடந்த ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை தொல்லியல் மையத்தில், தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பணிகள் தொடர்பாக பொதுமக்களுக்கான விழிப்புணர்வுக் காட்சிப்படுத்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறையுடன் இணைந்து மேற்படி நிகழ்வை ஒருங்கிணைத்த இணைத் தலைவர்களில் பேராசிரியர் சோமதே-தவவும் ஒருவர். செம்மணியில் அகழ்வுப் பணி-களை முன்னெடுத்து அதே காலப்பகுதியில், யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் கலந்து கொண்ட மற்றொரு நிகழ்வு அது. அப்பொழுது பேராசிர-ியர் தொடர்பான சர்ச்சைகளை ஏன் யாரும் முன் வைக்கவில்லை?

கஜேந்திரக்குமார் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கும் விமர்சனங்களை இக்கட்டுரை நிராகரிக்கவில்லை. அவரைப் போன்று ஏனைய கட்சிகளும் கருத்து தெரிவிக்க வேண்டிய பொறுப்பு உண்டு. அதேசமயம் இந்த விவகாரம் இப்படித்தான் முடியும் என்பதை ஏற்கனவே உகிக்கக்கூடியதாக இருந்த போதிலும் ஏன் தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்த விடயத்தில் முன்கூட்டியே தமது ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கவில்லை?

இப்பொழுது மூன்றாவது இடைக்கால அறிக்கை வந்தபின் அதை ஆட்சேபிக்கும்போது தமிழ் மக்கள், தாங்கள் எதிர்பார்த்தது அந்த அறிக்கையில் இல்லை என்பதற்காக அதனை அரசியல் ரீதியாக விமர்சிக்கின்றார்கள் என்று ஒரு கருத்து கட்டமைக்கப்படும். அது ஏற்கனவே கட்டமைக்கப்பட்டு விட்டது. தமிழர்களில் ஒரு பகுத-ியினரும் அதை செய்கிறார்கள். கொழும்பு மைய ஆங்கில ஊடகங்களும் அதைச் செய்கின்றன. பேராசிரியரின் அறிக்கையை தமிழர்களில் ஒரு பகுத-ியினர் விஞ்ஞானபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் அணுகுவதற்கு பதிலாக அரசியல் ரீதியாக அணுகுகிறார்கள் என்று தமிழ்த் தரப்பில் உள்ள சிலரே குற்றம் சாட்டக் காண்கிறோம்.

இந்த விடயத்தில் தமிழ்த் தரப்பு முன்கூட்டியே ஆட்சேபித்திருந்திருக்க வேண்டும் என்பதுதான் உண்மை. அதேசமயம் இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருப்பது ஓர் இடைக்கால அறிக்கை. இறுதி அறிக்கை அல்ல. ஆனாலும் இனி வரக்கூடிய அறிக்கைகளிலும் முடிவுகளிலும் அது தாக்கத்தைச் செலுத்தும். அந்த அடிப்படையில் அந்த அறிக்கை தொடர்பாக தமிழ்த் தரப்பு புத்திபூர்வமான, விஞ்ஞானபூர்வமான கேள்விகளை எழுப்ப வேண்டிய பொறுப்பு உண்டு.

எடுத்த எடுப்பிலேயே பேராசிரியரை இனவாதி என்று கூறிப் பெட்டி கட்டுவதை விடவும், தமிழ்மக்கள் மத்தியில் உள்ள துறை-சார் நிபுணர்கள், அக்கறை கொண்ட சக்திகள், அரசியல்வாதிகள், சிவில் சமூகங்கள், பாதிக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் போன்றவை இணைந்து பேராசிரியரோடு ஒரு பகிரங்க உரையாடலுக்குப் போனால் என்ன? இந்த அறிக்கை நீதிமன்ற நடவடிக்கைகளின் ஒரு பகுதியா-கவே வெளிவந்திருக்கிறது. எனவே நீதிமன்றத்தின் நடவடிக்கைகளைக் குழப்பாத விதத்தில் சோமதே-தவவோடு தமிழ்த் தரப்பு உரையாடினால் என்ன?

அவர் ஒரு பேராசிரியர். கடந்த பல மாதங்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து, பெருந்தொகை அரசு பணத்தைச் செலவழித்து அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டவர். அந்த அகழ்வுப் பணி தொடர்பான காணொளிகளையும் செய்திகளையும் ஒளிப்படங்களையும், ஏன் சில சமயங்களில் செயற்கை நுண்ணறிவு மூலம் தயாரிக்கப்பட்ட ஒளிப்படங்களையும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் சமூக ஊடக வலைத்தளங்களில் பகிர்ந்து வந்தார்கள். அப்பொழுது கூட அவர் தொடர்பான ஐயங்களையும் சந்தேகங்களையும் அரசியல் அடர்த்தியோடு, உத்தியோகபூர்வமாக யாரும் முன் வைத்திருக்கவில்லை.

பல மாதங்கள் அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வேலை செய்திருக்கிறார். அவரோடு தமிழ்ச் சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள் போன்றவர்கள் இடையூடாடி இருக்கிறார்கள். முக்கியமாக ஐநா மனித உர-ிமைகள் ஆணையாளர், வெளிநாட்டுத் தூதுவர்கள், ராஜதந்திரிகள், ஊடகவியலாளர்கள் போன்றோர் அவரோடு உரையாடியிருக்கிறார்கள். எனவே இந்த விடயத்தில் அறிவுபூர்வமான, விஞ்ஞானபூர்வமான உரையாடல் பரப்பு ஒன்றைத் திறக்க வேண்டும். அதனைத் தமிழ்த் தரப்பில் யாராவது ஒழுங்கு செய்ய வேண்டும்.

பேராசிரியரிடம் கேட்பதற்கு தமிழ் மக்களிடம் பல கேள்விகள் உண்டு. உதாரணமாக:

முதலாவது கேள்வி, அவருடைய முன்னைய இரண்டு அறிக்கைகளில் இருந்தும் மூன்றாவதாக வந்த இடைக்கால அறிக்கை ஏன் வேறுபடுகிறது?

இரண்டாவது கேள்வி, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கைக்கும் இப்பொழுது அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கைக்கும் உள்ள முரண்பாட்டை எப்படி விளங்கிக் கொள்வது?

மூன்றாவது கேள்வி, சித்துப்பாத்தி ஒரு சுடலை. அங்கே இவ்வளவு தொகையாக உடல்கள் புதைக்கப்படுவது என்பது ஒரு அசாதாரண நிலமை. அந்த அசாதாரண நிலைமைக்கு அவர் தனது அறிக்கையில் கூறுவது போல இயற்கை அனர்த்தமும் பெருந்தொற்று நோயும் மட்டும்தான் காரணமா? யுத்தம் காரணம் இல்லையா?

நாலாவது கேள்வி, அப்படியென்றால் அந்தச் சுடலையின் வயதை அதாவது அந்த சுடலை மக்களால் பாவிக்கப்பட்டு வரும் காலகட்டத்தை வைத்துக் கணிக்கும் பொழுது, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட எந்த இயற்கை அனர்த்தத்தின் போது அல்லது பெரும் தொற்று நோயின் போது உடல்கள் அங்கே புதைக்கப்பட்டன?

இந்தக் கேள்வியைக் கேட்கும்போது அந்தச் சுடலையின் வயதை உரிய ஆதாரங்களோடு காட்ட வேண்டும். அந்த சுடலை 1972 ஆம் ஆண்டு அரசாங்கப் பதிவுகளில் சித்துப் பாத்தி மயானம் என்று காணப்படுகிறது. அதற்கு முன் 1956 ஆம் ஆண்டளவில் அதற்கு அயலில் காணப்பட்ட ஒரு காணியில் பக்கத்தில் ஒரு சுடலை உண்டு என்ற குறிப்பு உண்டு. அதற்கும் முன்னர் சென்றால் 1930 களில் பிரிட்டிஷ் ஆட்சியாளரிடமிருந்து அந்த நிலம் பொதுப் பயன்பாட்டுக்கு பெறப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. இதை உறுதிப்படுத்த வேண்டும். அது சித்துப் பாத்தி சுடலையாக அறியப்படுவதற்கு முன்பு திடல் என்று அழைக்கப்பட்டதாகவும் ஒரு தகவல் உண்டு. மேற்கண்ட தரவுகளில் அடிப்படையில் தொகுத்துக் கணித்தால் சித்து பாத்தியின் வயது கிட்டத்தட்ட 90 ஆண்டுகள்தான். இந்த 90 ஆண்டுகாலப் பரப்புக்குள் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட எந்த இயற்கைப் பேரிடர் அல்லது பெருந்தொற்று நோயின் போது அங்கே உடல்கள் புதைக்கப்பட்டன?

ஐந்தாவது கேள்வி, குற்றச் செயல்களோடு சம்பந்தப்பட்ட உடல்களை நீதிமன்றம் ஏரிப்பதற்கு அனுமதிப்பதில்லை. அந்த அடிப்படையில் புதைக்கப்படும் உடல்கள் சித்துப் பாத்திக்கு கொண்டு வரப்பட்டனவா? ஆனால் அரச மருத்துவமனைகளில் இருந்து அவ்வாறு கொண்டு வரப்படும் உடல்களைப் புதைப்பதற்கு குருந-கரில் ஓரிடம் இருந்தது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பொழுது கோம்பையன் மணல் சுடலை அதற்கு பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது. சித்துப் பாத்தி மயானம் அவ்வாறு பயன்படுத்தப்பட்டதற்கான அரச பதிவுகள் உண்டா?

ஆறாவது கேள்வி, யாழ்ப்பாணத்தில் 500க்கும் குறையாதவர்கள் உயிரிழந்த தொற்று நோய்க் காலம் அல்லது இயற்கை அனர்த்த காலம் எது? அக்காலகட்டங்களில் இறந்தவர்களின் உடல்கள் சித்துப் பாத்திக்கு எடுத்துக் கொண்டுவரப்பட்டனவா?

குறிப்பாக சித்துப் பாத்தியின் வயதுக்குள் வைத்துப் பார்த்தால் 1934, 35 களில் நாட்டை தாக்கிய மலேரியா. அதன் பின் 2004 இல் நாட்டைத் தாக்கிய சுனாமி. அதன்பின் 2020இல் நாட்டை தாக்கிய கோவிட்19 ஆகிய மூன்று அனர்த்தங்களின் போதும் உடல்கள் அங்கே கொண்டுவரப்பட்டனவா? 1934 35 களில் மலேரியா தாக்கம் ஈர வலை-லையப் பகுதிகளில்தான் அதிகமாக இருந்தது என்றும், யாழ்ப்பாணத்தில் உயிர் சேதம் இல்லை என்றும் ஒரு குறிப்பு உண்டு. அதை உறுதிப்படுத்த வேண்டும்.

மேலும், சுனாமி உடல்கள் கடற்கரையிலேயே அகற்றப்பட்டன. அந்த உடல்கள் சித்துப் பாத்திக்கு கொண்டுவரப்படவில்லை. அடுத்ததாக கோவ-ிட் 19 உடல்கள் அநேகமாக எரிக்கப்பட்டன. புதைக்கப்படவில்லை.

மேற்கண்ட ஆறு கேள்விகளும் பொதுவா-னவை. இதைத் தவிர துறைசார் நிபுணர்களால் அந்த விடயத்தில் மேலும் கேள்விகளை எழுப்பமுடியும். எனவே இந்த விடயத்தில் துறை-சார் நிபுணர்கள், புத்திஜீவிகள்,சிவில் சமூகங்கள், அரசியல் சமூகம் போன்ற எல்லாத் தரப்புகளும் இணைந்து கேள்விகளை முன்வைக்க வேண்டும். பேராசிரியரோடு பகிரங்க உரையாடல் ஒன்றைச் செய்ய வேண்டும். இதில் ஒளிவு மறைவுக்கு இடமில்லை. இப்பொழுது தேவையாக இருப்பது உணர்ச்சிவசப்பட்ட குற்றச்சாட்டுகளோ அல்லது முற்கற்பிதங்களை நிறுவுவதற்கான வலிந்த தர்க்கங்களோ அல்ல.

பேராசிரியரை ஏற்கனவே யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை ஆனைகோட்டை அகழ்வுப் பிரதேசத்துக்கு அழைத்திருக்கிறது. அங்கே கண்டெடுக்கப்பட்ட பொருட்களைக் காட்சிக்கு வைத்து ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வில் அவர் இணைத் தலைவராகப் பங்காற்றியிருக்கிறார். எனவே யாழ். பல்கலைக்கழகமே இந்த விடயத்தில் அறிவுபூர்வமான திறந்த உரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யலாம். தமிழ் அறிவோர் சமூகம் அதைச் செய்யலாம். சிவில் சமூகங்கள் செய்யலாம்.எதையும் அறிவு பூர்வமாக,கணிதமாக, விஞ்ஞானபூர்வமாக அணுக வேண்டும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

கோப்பாய் மகா வித்தியாலயத்தில் விசேடதேவை உள்ள மாணவர்களின் செயற்திறனை மேம்படுத்தும் "திறன் வகுப்பறைச்செயற்பாடு" அறிமுகம்!



கடந்த 22ம் திகதி வியாழக்கிழமை அன்று யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குள் அடங்கும் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் IMHO மற்றும் இங்கிலாந்தின் Ratnam Foundation இன் ஏற்பாட்டில் Dr. ஈஸ்வரன் வேலாயுதபிள்ளை அவர்களினதும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பினதும் அனுசரணையுடன் வழங்கப்பட்ட smart board learning class திறன் பலகை கற்றல் உபகரணத்தொகுதி வகுப்பறை உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டு ஆசிரியர்கள் மாணவர்களின் பயன்பாடு அவதானிக்கப்பட்டது.

இப்பாடசாலை யாழ்ப்பாண வலயத்தின் விசேடதேவைகள் உள்ள (special need children) மாணவர்களுக்கான அலகும் உட்படுத்தல்கல்வி (inclusive education) செயற்படும் பாடசாலையாகும். இங்கு 84 மாணவர்களும் (19 விசேட தேவைமாணவர்கள்) 22 ஆசிரியர்களும் கல்விச்செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். இத்திறன் பலகை உண்மையிலேயே இம்மாணவர்களின் செயற்றிறனை அதிகரிக்கவல்லது இதனை மாணவர்களின்செயற்பாட்டை பார்த்தபோது அளவிடமுடிந்தது ஆச்சரியமாகவும் இருந்தது. விசேடதேவை உள்ள மாணவர்கள் மிகுந்த விருப்புடன் திறன்பலகையில் சித்திரங்களை வரைந்து கற்றலில் ஈடுபட்டனர். மதிப்பீட்டின் போது இடைநிலை பிரிவு மாணவர்களும் சிறப்பாக செயற்பட்டனர்.

இந்நிகழ்வு அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் கல்விச்செயற்பாட்டிற்கான ஆலோசகர் முத்து. இராதாகிருஷ்ணன், யாழ் வலய ஆசிரிய ஆலோசகர் சந்திரிக்கா, இப்பாடசாலையின் அதிபர், பழையமாணவர் சங்க செயலாளர், பாடசாலை அபிவிருத்திச்சபை செயலாளர் ஆகியோரின் சிறப்பான பங்குபற்றலோடு நடைபெற்றது. பாடசாலையின் கல்வி வளர்சிக்கு இத்திறன் வகுப்பறை மிகுந்த ஒரு கொடையாகும் என அதிபரும் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரும் குறிப்பிட்டனர்.

இந்நிகழ்வில் பங்குபற்றிய IMHO ஆலோசகர் தனது உரையில் ஆரம்ப பிரிவு, மற்றும் விசேடதேவை மாணவர்களின் அடிப்படை தேர்சிகளுக்கு ஊக்கம் தரும் வகையில் திறன்வகுப்பறை செயற்பாட்டை ஆசிரியர்கள் நன்கு திட்டமிடவேண்டும் என குறிப்பிட்டார், நிகழ்வுகள் மிகச்சிறப்பாக அமைந்தன. மாணவர்களின் ஈடுபாடு விதந்துரைக்கத்தக்கது.





கோட்டாபய ராஜபக்சாவுக்கான பயணத்தடை நீக்கம் தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களம் பதிலளிக்க நீதிமன்றம் காத்திருகின்றது



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத் தடையைத் தற்காலிகமாக நீக்குவது தொடர்பான கோரிக்கை குறித்து வரும் நவம்பர் 4 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி கருத்துக்களை முன்வைக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் கடிதம் அனுப்பியுள்ளது.

மேலதிக சிகிச்சைக்காகச் சிங்கப்பூர் செல்வதற்கு அனுமதி கோரி முன்னாள் ஜனாதிபதியின் சட்டத்தரணிகள் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவைப் பரிசீலித்த கொழும்பு கோட்டை நீதிவான் வசந்த அமரசேன இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னதாகச் சிங்கப்பூரிலுள்ள வைத்தியசாலையொன்றில் இதய அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருந்த நிலையிலும், அதன் தொடர்ச்சியான மேலதிக மருத்துவ சிகிச்சைகளுக்காக அவர் மீண்டும் சிங்கப்பூர் செல்ல வேண்டியுள்ளமையாலும் அவரது பயணத் தடையைத் தற்காலிகமாக நீக்குமாறு சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

வழக்கு 28ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் திறந்த நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகியிருந்தார்.

எனினும், இந்த வழக்கின் முறைப்பாட்டாளரான குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் இதன்போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

இதனையடுத்தே, பயணத் தடையைத் தற்காலிகமாக நீக்குவது தொடர்பான கோரிக்கைக்குத் தமது தரப்புப் பதிலையும் நிலைப்பாட்டையும் முன்வைப்பதற்காக வரும் நவம்பர் 4 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிவான் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை வேண்டிக் கொண்டார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுடன் தொடர்புடைய வழக்கில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரிகள் சிலருக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உயிராபத்தை ஏற்படுத்தும் நிலையில் காணப்படும் புங்குடுதீவு "வாணர் தாம்போதி கடற்பாலம்"

உடனடி திருத்த வேலைகளைச் மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை!



யாழ்ப்பாணக் குடாநாட்டையும் தீவகப் பகுதிகளையும் இணைக்கும் முக்கிய போக்குவரத்து மார்க்கமான புங்குடுதீவு வாணர் தாம்போதி கடற்பாலம், நிரந்தர புனரமைப்பின்றி இருப்பதுடன், அதன் இரு கரைகளும் பாதுகாப்பு கற்களோ அன்றி இரும்பு சட்ட அணைகளோ இன்றி இருப்பதுடன் அதன் இரு கரையோரங்களும் பெரும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதால், மழை காலமாகிய இக்காலப்பகுதியில் பாரிய விபத்துகள் ஏற்படும் ஆபத்து வலுப்பெற்றுள்ளதாக மக்கள் மற்றும் வாகன சாரதிகள் பெரும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆளுகையில் இருக்கும், இலங்கையின் நீளமான கடற்பாலங்களில் ஒன்றான சுமார் 5 கிலோமீற்றர் நீளமுடைய இப்பாலத்தைப் பாதுகாப்பான முறையில் புனரமைத்து, மக்களின் அச்சமற்ற போக்குவரத்தை உறுதிப்படுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையும், இன்றைய அரசாங்கமும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேநேரம் புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு உள்ளிட்ட தீவகப் பகுதிகளின் போக்குவரத்தில் இப்பாலம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

குறிப்பாக, நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், நாக விகாரை மற்றும் நெடுந்தீவு உள்ளிட்ட இடங்களுக்குச் செல்லும் பொதுமக்கள், பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் எனப் பலரும் பயணிக்க இந்த ஒரு வீதியே போக்குவரத்து மார்க்கமாக இருக்கின்றது.

அத்துடன், கட்டுமானப் பொருட்களை ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்கள், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர், பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் நாளாந்தம் இப்பாலத்தின் ஊடாகப் பயணிக்கின்றனர்.

இதனால், தீவகத்தின் பொருளாதார மற்றும் மக்கள் சார் நடவடிக்கைகளுக்கும் இப்பாலம் இன்றியமையாததாக விளங்குகின்றது.

இதேநேரம், யுத்த காலத்திலும் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் தீவகத்தின் பிரதான வீதிகளைப் புனரமைப்பதற்கான பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, அன்றைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முன்மொழிவுகளின் அடிப்படையில் தீவகத்தின் பிரதான வீதிகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அந்த வகையில், குறிகாட்டுவான் - வழுக்கையாறு வீதியையும் மீளமைப்பதற்கான திட்டம் முன்மொழியப்பட்டிருந்தது.

சுமார் 27.5 கிலோமீற்றர் நீளமுடைய இவ்வீதியில் 5 கிலோ மீற்றர் மற்றும் 2 கிலோ மிற்றர் கொண்ட இரண்டு பெரும் பாலங்கள் அமைந்துள்ளதுடன், வீதியின் நீளம் மற்றும் கட்டுமானச் செலவுகளைக் கருத்திற்கொண்டு நிதியைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக அபிவிருத்திப் பணிகள் தாமதமடைந்திருந்தன.

இந்நிலையில், நீண்ட காலம் சிறு சிறு புனரமைப்புடன் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட குறித்த வீதி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில், நயினாதீவு விகாராதிபதியின் வலுவான கோரிக்கையால் வேலணை அராலிச் சந்தியிலிருந்து குறிகாட்டுவான் வரையான பகுதி அகலிக்கப்படாது, தற்காலிகமாக காப்பெற் இடப்பட்டு செப்பனிடப்பட்டது.

எனினும், புங்குடுதீவு வாணர் தாம்போதி கடற்பாலத்தின் கட்டமைப்பில், நிரந்தர புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படாத நிலையில், பாலத்தின் இரு கரையோரப் பகுதிகளும் தற்போது பெரும் சேதமடைந்துள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மறுபுறம், குறித்த வீதி ஒடுங்கிய நிலையில் காணப்படுவதால், வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்வதும், எதிரெதிரே வரும் வாகனங்கள் பாதுகாப்பாக விலகிச் செல்வதும் பெரும் சவாலாக இருக்கின்றது.

மேலும், பாலத்தின் இரு மருங்கிலும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாதிருப்பதுடன், வீதியும் ஆங்காங்கே சிதைவடைந்தும் காணப்படுகின்றன.

இதனால் வாகனங்கள் வீதியை விட்டு விலகிக் கடலுக்குள் சென்ற சம்பவங்களும், விபத்துகளில் உயிரிழப்புகள் ஏற்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்ற என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால், இப்பாலத்தின் ஊடாகப் பயணிக்கும் சாரதிகளும் பயணிகளும் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேநேரம் தற்போது பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில், பாலத்தின் சேதமடைந்த பகுதிகள் மேலும் பாதிக்கப்படக்கூடும் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

எனவே, வீதி அபிவிருத்தி அதிகாரசபை இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு, பாலத்தின் இரு கரையோரங்களையும் சீரமைப்பதுடன், பாதுகாப்புத் தடுப்புகள் உள்ளிட்ட அத்தியாவசிய பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்றனர்.

அத்துடன் குறிகாட்டுவான் இறங்குதுறையை சீர்ப்படுத்தும் இன்றைய அரசு, தற்காலிகத் திருத்தங்களுடன் காலத்தைக் கடத்தாமல், தீவக மக்களின் நீண்டகாலப் போக்குவரத்துத் தேவையைக் கருத்திற்கொண்டு, குறிகாட்டுவான் - வழுக்கையாறு வீதி மற்றும் புங்குடுதீவு வாணர் தாம்போதி கடற்பாலத்தை நிரந்தரமாகப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் மக்களின் வலியுறுத்துகின்றனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

வடக்கு மாகாணத்தில் முதலாம் தர மாணவர்களில் 10 இல் ஒருவருக்கு பார்வை குறைபாடு உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது!

பு. கஜிந்தன்

வடக்கு மாகாணத்தில் முதலாம் தர மாணவர்களில் சுமார் 10 பேரில் ஒருவருக்குப் பார்வைக் குறைபாடு இருப்பது, "தெளிவான பார்வை, பிரகாசமான எதிர்காலம் - கட்டம் II" பாடசாலைக் கண் சுகாதாரத் திட்டத்தின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய கண்டறிதல்கள் அடங்கிய அறிக்கையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கண் பிரிவு மருத்துவ நிபுணர் எம்.மலரவன் அவர்கள் 26ம் திகதி அன்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் வைத்து வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களிடம் கையளித்தார்.

கடந்த ஜூலை 21ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 23ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம், வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள 13 கல்வி வலயங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்போது மொத்தம் 14,997 முதலாம் தர மாணவர்கள் கண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இது மொத்த முதலாம் தர மாணவர்களில் 92.6 வீதமாகும்.

கண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களில் 1,455 பேருக்கு (9.7 வீதம்) ஒளிவிலகல் பிழைகள் எனப்படும் பார்வைக் குவியக் குறைபாடுகள் இருப்பது கண்டறியப்பட்டது. இவர்களில் 129 மாணவர்கள் (8.9 வீதம்) மட்டுமே ஏற்கெனவே மூக்குக்கண்ணாடி அணிந்திருந்தனர். ஏனைய 1,326 மாணவர்கள் (91.1 வீதம்) மூக்குக்கண்ணாடி அணிந்திருக்கவில்லை.

மேலும், பார்வைக் குவியக் குறைபாடுகளுக்கு அப்பாற்பட்ட ஏனைய கண் பிரச்சினைகளும் மாணவர்களிடம் கண்டறியப்பட்டுள்ளன. இதனால் சில மாணவர்களுக்கு மேலதிக மருத்துவப் பரிசோதனைகள், கண் நிபுணர்களின் ஆலோசனைகள், சிகிச்சைகள் மற்றும் தொடர்ச்சியான மருத்துவக் கண்காணிப்புகள் தேவைப்படலாம் என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 1,199 மாணவர்கள் கண் பரிசோதனையில் பங்கேற்கவில்லை என்பதும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள், சம்பந்தப்பட்ட பாடசாலைகள் அருகிலுள்ள கண் மருத்துவ நிலையங்களைத் தொடர்புகொண்டு பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, மூக்குக்கண்ணாடி அணியுமாறு பரிந்துரைக்கப்பட்ட மாணவர்கள் அவற்றைத் தொடர்ந்து அணிவதையும், மேலதிக பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் தேவைப்படுவோர் அவற்றைத் தாமதமின்றிப் பெற்றுக்கொள்வதையும் பெற்றோர் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.





அறிக்கை கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, திட்டத்தின் பெறுபேறுகள் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பான விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், மாணவர்களின் கண் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இத்திட்டத்தை முன்னெடுத்த கண் மருத்துவ நிபுணர் எம்.மலரவன் தலைமையிலான மருத்துவக் குழுவினருக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் இவ்வாறான சுகாதாரச் சேவைகள் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்திய ஆளுநர், மாணவர்கள் தேசியப் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனரா, மாகாணப் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனரா அல்லது சர்வதேசப் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனரா என்ற வேறுபாட்டைப் பார்க்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

இத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்காத சில பாடசாலைகளின் அதிபர்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறும், சில இடங்களில் ஒத்துழைப்பு வழங்காத பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை, தீவகம் மற்றும் வவுனியா தெற்கு கல்வி வலயங்களில் கண் பரிசோதனையின் அடிப்படையில் மூக்குக்கண்ணாடி அணிய வேண்டும் என அடையாளம் காணப்பட்ட மாணவர்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடிகள், குறித்த வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் இன்று கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கண் மருத்துவ நிபுணர் எம். மலரவன் அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்துக்கு Alaka Foundation நிதியுதவி வழங்கியுள்ளது. நகுலேஸ்வரி வாசுதேவன் முன்னெடுக்கும் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் திட்டத்துடன், Assist RR UK & Sri Lanka நிறுவனமும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

இன்றைய அறிக்கை கையளிப்பு மற்றும் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் செயலாளர்கள், கல்வி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களின் மாகாணப் பணிப்பாளர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அனுசரணையாளர் கலாநிதி சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இஸ்ரேல் தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டதென நெதன்யாகு குற்றம்சாட்டு!

உலக செய்திகள் World News

இஸ்ரேல் தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டுள்ளதென பெஞ்சமின் நெதன்யாகு குற்றம்சாட்டியுள்ளார். "நெசட்" என்று அழைக்கப்படும் இஸ்ரேல் நாடாளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு நேற்று விறுவிறுப்பாக நடைபெற்றது. அங்கு மொத்தம் உள்ள 73.3 லட்சம் வாக்காளர்களில், சுமார் 56.9 லட்சம் பேர் (77.7 சதவீதம்) பேர் தங்கள் வாக்குகளை செலுத்தியுள்ளனர். குறிப்பாக இஸ்ரேலில் உள்ள அரபு குடிமக்கள் அதிக அளவில் வாக்கு செலுத்தியுள்ளனர். தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி நடைபெற்றது.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் மொத்தம் 120 இடங்கள் உள்ள நிலையில், ஆட்சி அமைக்க குறைந்தபட்சம் 61 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. இந்த தேர்தலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான கூட்டணிக்கும், முன்னாள் ராணுவ தளபதி காடி ஐசென்கோட் தலைமையிலான கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. நெதன்யாகு அணிக்கு 53 இடங்களும், ஐசென்கோட் தலைமையிலான எதிர்க்கட்சி அணிக்கு 48 இடங்களும் கிடைத்துள்ளதாக இஸ்ரேல் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன. இதனிடையே தேர்தலில் போட்டியிட்ட அரபு கட்சிகள் 19 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன. வாக்கு எண்ணிக்கை முழுமையாக முடிவடையாததால் இந்த எண்ணிக்கைகள் மாறலாம் என்று கூறப்படுகிறது. இருப்பினும் ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மை யாருக்கும் கிடைக்கவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

இதன் காரணமாக இஸ்ரேலில் புதிய அரசு அமைப்பதில் இழுபறி ஏற்பட்டுள்ளது. இதனால், கூட்டணி பேச்சுவார்த்தைகள் பல வாரங்களுக்கு நீடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டணி அரசு அமையாவிட்டால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 90 நாட்களுக்குள் மீண்டும் தேர்தல் நடத்தப்பட வாய்ப்பு உள்ளது. இந்த நிலையில், இஸ்ரேல் தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டுள்ளது என பெஞ்சமின் நெதன்யாகு குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக "எக்ஸ்" தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது "அரபு கட்சிகள் இஸ்ரேல் தேர்தல்களைத் திருடிவிட்டார்கள்! அரபு கட்சிகளுக்கு ஆதரவாக சில வெளிநாட்டு அமைப்புகள் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்ததாக நீதிபதி சோல்பர்க் வெளியிட்டுள்ள அறிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. இது ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் ஆகும். இவர்களின் நோக்கம் இஸ்ரேல் நாடாளுமன்றத்தை வெளிநாட்டினர் கைப்பற்ற வேண்டும், இஸ்ரேலை இஸ்லாமிய மயமாக்கி, வலதுசாரி ஆட்சியை வீழ்த்துவதோடு, இஸ்ரேலிய பாதுகாப்புப் படையை அனைத்துத் தளங்களிலும், குறிப்பாக ஈரானில் தோல்வி அடைய வைக்க வேண்டும் என்பதே ஆகும். இஸ்ரேல் நாடாளுமன்றத்தை கைப்பற்ற வெளிநாட்டு அமைப்புகள் முயன்றது அம்பலமான பிறகு, எந்தவொரு சியோனிசக் கட்சியும் அரபு கட்சிகளுடன் ஒத்துழைக்கக் கூடாது என்பதும், பணத்திற்கு வாங்கப்பட்ட வாக்குகள் மூலம் நாடாளுமன்ற சபாநாயகரை மாற்றக் கூடாது என்பதும், இஸ்ரேலுக்கு ஆபத்தான ஒரு அரசாங்கத்தை அமைக்கக் கூடாது என்பதும் தெளிவாகிறது. இந்த குற்றங்களை விசாரிக்க, ஷின் பெட் மற்றும் காவல்துறையிடம் உள்ள அனைத்து வழிகளையும் பயன்படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

சர்வதேச சதுரங்க தகுதி காண் போட்டிக்கு தெரிவாகிய யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் சிறீஷனாத் தீக்ஷிகன்!

பு. கஜிந்தன்



சர்வதேச சதுரங்க தகுதி காண் போட்டிக்கு தெரிவாகிய யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் தீக்ஷிகனுக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன!

இலங்கைப் பாடசாலை சதுரங்க சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான சதுரங்க சுற்றுப்போட்டி அனுராதபுரம் ஸ்வர்ணபாலி மகளிர் மகா வித்தியாலயத்தில் 23,24,25ஆம் திகதிகளில் இடம்பெற்றது. இதில் 6 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவில் போட்டியிட்ட யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் சிறீஷனாத் தீக்ஷிகன் 7 சுற்றுக்களில் 5ல் அபாரமாக ஆடி (Merit) வெற்றி பெற்றுள்ளார்.

இதன்மூலம் 2027 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள சர்வதேச சதுரங்க போட்டிகளில் இலங்கையை பிரதிநிதிப்படுத்தும் வீரர்களை தேர்ந்தெடுப்பதற்கான தெரிவுப்போட்டியில் பங்கெடுப்பதற்கான தகுதியை பெற்றுள்ளார். குறித்த மாணவன் இதற்கு முன்னரும் பல சதுரங்க போட்டிகளில் தொடர்ச்சியாக பங்கெடுத்து சாதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மட்டக்களப்பு கடற்றொழில் திணைக்கள பரிசோதகர்கள் சிலரின் ஒத்துழைப்புடன் மீனவர்கள் "சுருக்குவலை" பாவித்து மீன் பிடிக்கின்றனர்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு "ஊழல் மோசடி மற்றும் போதை பொருளுக்கு எதிரான அமைப்பு" குற்றச்சாட்டுகின்றது

மட்டக்களப்பு கடல் பிராந்தியத்தில் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள ஒரு சில பரிசோதகர்களின் மறைமுகமான ஒத்துழைப்புடன் தான் இந்த சட்டவிரோத "சுருக்குவலை" பாவித்து மீனவர்கள் சிலர் மீன் பிடிக்கின்றனர் எனவே இந்த சட்டவிரோத சுருக்கு வலையை அடியோடு இல்லாமல் ஒழிக்க விசேட அதிரடிப்படையினருக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என மட்டுநகர் ஊழல் மோசடி மற்றும் போதை பொருளுக்கு எதிரான அமைப்பின் ஊடக பேச்சாளர் அந்தனிசில் ராஜ்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பாலமீன்மடு வில் கடந்த 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலையில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி எமது அமைப்பு மீனவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் அதனை கடற்படையினருக்கு வழங்கி முதற் கட்டமாக 5 சட்டவிரோத சுருக்கு வலைகளை கடலில் வைத்து கைப்பற்றினோம், அதன் பின்னர் கடந்த 20ம் திகதி இவ்வாறு கிடைத்த தகவல்களை கடற்படையினருக்கு வழங்கி இரண்டாம் கட்டமாக காத்தான்குடி தொடக்கம் மாங்காடு வரைக்கும் உள்ள கடலில் 2 கோடி ரூபா பெறுமதியான 4 சட்டவிரோத சுருக்கு வலைகளை கைப்பற்றினோம்.

அதில் கைப்பற்றப்பட்ட சுருக்கு வலைகள் மிகவும் எடை கூடிய சுருக்கு வலைகள் அதை சிறிய படகில் ஏற்றுவது கடினமானது இருந்த போதும் ஒரு சிறிய படகில் ஒரு வலையை ஏற்றி அதை கல்லடி கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றோம்.

ஏனைய 3 வலைகளையும் கடற்படை கப்பல் வர வளைத்து அதில் ஏற்றப்பட்ட நிலையில் கல்லடியில் மற்றும் பாலமீன்மடு வில் துறைமுகம் இல்லாத காரணத்தால் அந்த கப்பலை கரைக்கு கொண்டு வர முடியாத காரணத்தால் அதனை வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டு சென்று இறக்குமாறு கடற்படையினரிடம் கோரினோம்.

அதனடிப்படையில் அவர்கள் வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டு சென்று அங்கு கடற்றொழில் பரிசோதகரிடம் கடற்படையினர் கையளித்தனர் இதன்போது பரிசோதகர் வாழைச்சேனை மற்றும் வாகரை கடலில் மறைத்து வைத்திருந்ததாக தவறான செய்தியை ஊடகங்களுக்கு வழங்கிய செய்தியை சில ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது இந்த தவறான தகவல்களை வழங்கிய கடற்றொழில் பரிசோதகரின் இந்த செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம்.

அதேவேளை கடந்த வாரம் 9 மீனவர் சங்கங்கள் மீனவர்கள் ஒன்றிணைந்து கடற்றொழில் திணைக்களத்திற்கு முன்னால் சட்டவிரோத சுருக்கு வலையை தடை செய்ய கோரி பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு மகஜர் ஒன்றை வழங்கினோம்.



அதனடிப் படையில் குறித்த திணைக்கள பணிப்பாளர் இதுவரைக்கும் எந்த விதமான சட்டவிரோத சுருக்கு வலைகளை கைப்பற்றவில்லை இதனை எமது அமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது.

இதேவேளை நாங்கள் சிறிய அமைப்பை உருவாக்கி கடற்றொழில் திணைக்களத்தின் வேலைகளை செய்யும் போது அவர்களுக்கு கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் இதுவரை எந்தவிதமான சட்டவிரோதமான சுருக்கு வலையை கைப்பற்றுவதற்கு முயற்சிப்பதில்லை.

காரணம் அரசாங்கத்தால் வழங்கப்படும் சம்பளத்தை விட சட்டவிரோத செயற்பாட்டாளர்கள் வழங்குகின்ற ஊதியம் மிக பெரிய தொகையாக இருக்கிறது அதன் காரணத்தால் தான் மாவட்டத்தில் கடல் வளங்கள் அழிக்கப்பட்டிருந்தும் அதற்கு எந்தவிதமான அக்கறையும் இன்றி இந்த சட்டவிரோதமான இந்த சுருக்கிற்கு ஆசி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று செட்டிபாளையம், மாங்காடு, பாலமுனை பிரதேசங்களில் உள்ள மீனவ சங்கங்களின் சில தலைவர்கள் பொருளாளர்கள் மற்றும் சங்கங்களில் உள்ள சில உறுப்பினர்களான கண்ணன், ஜீவன், ரஞ்சினி, வசந்தா, அர்ஜுன், வெள்ளை கண்ணன், மேனன், றஞ்சன், சின்னத்தம்பி, கோபி, மற்றும் சபீர், நஸீர், பௌஸர், றிஸ்கான், அஸ்ரப், றபீக், ஜெனுஸ்ஆப்தீன், உவைஸ் (வாடி), சியான் உட்பட்டவர்கள் இந்த சட்டவிரோத சுருக்கு வலை பாவித்து மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத சுருக்குவலை பாவித்து வரும் இந்த செயற்பாட்டினை தடுக்க வேண்டியது கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் மற்றும் கடற்படையினர் தலையாகிய கடமை. இருந்த போதும் கடலில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுபவர்களை கைது செய்ய விசேட அதிரடிப்படையினருக்கு அதிகாரத்தை வழங்கினால் ஒரு கிழமையில் இந்த சட்டவிரோத சுருக்கு வலையை அடியோடு ஒழிக்க முடியும் என்பதுடன் சட்டவிரோத சுருக்குவலை பாவித்து மீன் பிடிப்பவர்கள் பெயர்கள் அடுத்த ஊடக சந்திப்பில் வெளியிடப்படும் என்றார்.

சிறுவயதில் ஒரேநாளில் இரண்டு அரங்கேற்றங்களை மேடையேற்றும் செல்வி றொஷேல் கிறிஸ்டனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

– வாழ்த்துத் தெரிவித்துள்ள அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி

பிஞ்சு விரல்களால் மிருதங்கத்தை வாசித்து வீணையை மீட்டினாலும். செல்வி றொஷேல் கிறிஸ்டனின் மனதில் உறுதி சிந்தனையில் தெளிவு ஆகியவற்றை நான் அவதானித்தேன்

தனது பிரதம விருந்தினர் உரையில் "உதயன்" லோகேந்திரலிங்கம் தெரிவிப்பு!

இசைச் செல்வி றொஷேல் கிறிஸ்டன் அன்னநாதனின் மிருதங்க மற்றும் வீணை அரங்கேற்றங்கள் ஒரே மேடையிடல் கடந்த 24-10-2026 அன்று கனடாவின் விற்பி மாநகரில் உள்ள றுர்ஜவுடீலு ஊழுருசுவு ர்ழுருளுநு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றன.

அவரது மிருதங்க குரு "மிருதங்கள் ஷேஸ்த்திரம்" இசைக் கல்லூரியின் அதிபர் "மிருதங்க ஞானவாருதி" வாசுதேவன் ராஜலிங்கம் அவர்கள் ஆவார். வீணை வாத்திய குரு" நாத வீணா" மன்றத்தின் அதிபர் "இசைக் கலைமணி" குகனேஸ்வரி சத்தியமூர்த்தி ஆவார்.







அன்றைய இரண்டு அரங்கேற்றங்களையும் தொகுத்து வழங்கிய தேவா சபாபதி அவர்கள் இறுதிவரை தனது பணியை நேர்த்தியாக ஆற்றினார்.

முதலில் இடம்பெற்ற மிருதங்க அரங்கேற்றத்திற்கு முன்னர் விசேட வழிபாடுகள் மற்றும் வாத்தியக் கருவிகளை அரங்கேற்றச் செல்வி றொஷேல் கிறிஸ்டன் அன்னநாதனிடம் வழங்குதல் ஆகியன முறைப்படி நடைபெற்றன.

தொடர்ந்து மிருதங்க குரு "மிருதங்கள் ஷேஸ்த்திரம்" இசைக் கல்லூரியின் அதிபர் "மிருதங்க ஞானவாருதி" வாசுதேவன் ராஜலிங்கம் அவர்களின் வழிகாட்டலில் அரங்கேற்றச் செல்வி றொஷேல் கிறிஸ்டன் அன்னநாதனின் மிருதங்க அரங்கேற்றம் ஆரம்பமானது. மேடையில் பக்கவாத்தியக் கலைஞர்களாக ஸ்ரீமதி மதுமதி சிவகுமாரன்(பாடல்), மிதுரன் மனோகரன் (வயலின்), கலையரசன் சிங்கராஜ் (கஞ்சிரா), கதிர் பரணீதரன் (கடம்) ஆகியோர் வீற்றிருந்து றொஷேல் கிறிஸ்டன் அன்னநாதனின் மிருதங்க வாசிப்பை மெருகூட்டினார்கள். முதலாவது இரண்டாவது உருப்படிகளை வாசிக்க ஆரம்பித்தவுடனேயே அரங்கேற்றச் செல்வியின் அபாரத்திறமை நன்கு வெளிப்பட்டது. மேடையில் அவரது குரு தனது மகிழ்ச்சியை முகத்தில் காட்டிய வண்ணம் தனது மாணவி மேலும் அக்கறையோடும் அவதானத்தோடும் வாசிப்பை உறுதி செய்தார். அத்துடன் பக்கவாத்திய கலைஞர்களும் தங்கள் ஒத்தாசையை வழங்கினார்கள். மிருதங்க அரங்கேற்றத்தின் இறுதியில் மிருதங்க ஷேஸ்த்திரத்தின் முதலாவது அரங்கேற்றத்தை மாணவனாக இருந்து குருவிற்கு பெருமை தேடித்தந்த அனந்தகுமார் கௌரவ விருந்தினராக அழைக்கப்பெற்று தனது வாழ்த்துரையை வழங்கினார். அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்த சுப்பிரமணியம் இராஜரட்ணம் அவர்கள் தனது

வாழ்த்துரை அன்றைய அரங்கேற்றச் செல்வி கர்நாடக இசைத்துறையில் மாத்திரமல்ல. கல்வி. விளையாட்டு மற்றும் பல துறைகளில் ,ஈடுபட்டு அனைத்திலும் திறமையான வீராங்கனையாகவும் சாதனையாளராகவும் திகழ்கின்றார் என்று புகழாரம் சூட்டினார்.

தொடர்ந்து வீணை வாத்திய குரு" நாத வீணா" மன்றத்தின் அதிபர் "இசைக் கலைமணி" குகனேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களது வழிகாட்டலில் வீணை அரங்கேற்றத்திற்காக மேடையில் சென்று நடு நாயகமாக அமர்ந்தார் அரங்கேற்றச் செல்வி றொஷேல் கிறிஸ்டன் அன்னநாதன் அவர்கள்.

மேற்படி வீணை அரங்கேற்றத்தின் பக்கவாத்தியக் கலைஞர்களாக மிருதங்க குரு வாசுதேவன் இராஜலிங்கம், தனுஜன் தேவதாஸ் (கடம்) மனோகரன் (தாளம்- மோர்சிங்) செல்வி டெறனியா ஜெகதீசன் (தம்புரா) ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாகத் திகழ்ந்தார்கள்.

இரண்டாவது அரங்கேற்றத்திலும் தனது பிஞ்சு விரல்களால் வீணையை மீட்டுவதில் தனது வித்துவத்தைக் காட்டத் தொடங்கினார் செல்வி றொஷேல் . அவர்கள் தனது விரல்களால் எவ்வாறு வீணையின் நரம்புகளை இவ்வளவு விரைவாகவும் இனிமையாக இசையை உருவாக்குவதிலும் உச்சத்திற்கு சென்று வருகின்றார் என்பதை பாராட்டும் வகையில் சபையோ கரகோசம் செய்தார்கள். தனது மிருங்க அரங்கேற்றத்தினைப் போன்றே தனது பிஞ்சு விரல்களால் மிருதங்கத்தை வாசித்து வீணையையும் மீட்டினாலும், செல்வி றொஷேல் கிறிஸ்டனின் மனதில் உறுதி ,சிந்தனையில் தெளிவு ஆகியவற்றின் உதவியோடு தனது இரண்டு அரங்கேற்றங்களையும் ஒரே நாளின் அதே மேடையில் செவ்வனே நிறைவேற்றினார்.


அன்றைய தினம் இரண்டு அரங்கேற்றங்களின் இறுதியில் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் அலுவலகம் வழங்கிய அரசு சார்பான சான்றிதழை "உதயன் லோகேந்திரலிங்கம் அவர்கள் அரங்கேற்றங்களை சிறப்பாக பூர்த்தி செய்த றொஷேல் அவர்களுக்கு வழங்கினார். அதில் தனது சிறுவயதில் ஒரேநாளில் இரண்டு அரங்கேற்றங்களை மேடையேற்றும் செல்வி றொஷேல் கிறிஸ்டன் எவ்வளவு பாராட்டினாலும் தகும்! என்ற வார்த்தைகளை வாழ்த்துத் தெரிவித்துள்ள அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அங்கு பிரதம விருந்தினர் உரையாற்றிய உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நாகமணி லோகேந்திரலிங்கம் தனது உரையில் இரண்டு அரங்கேற்றங்களையும் ஒரே மேடையில் சமர்ப்பித்த அரங்கேற்றச் றொஷேல் கிறிஸ்டன் அன்னநாதன் அவர்கள்.தனது பிஞ்சு விரல்களால் மிருதங்கத்தை வாசித்து வீணையையும் மீட்டினாலும், செல்வி றொஷேல் கிறிஸ்டனின் மனதில் உறுதி ,சிந்தனையில் தெளிவு ,பார்வையில் கூர்மை, ஆகியவற்றை நான் அவதானித்தேன் என்றும் றொஷேல் கிறிஸ்டன் அன்னநாதன் அவர்கள் தான் கால் பதித்துள்ள அனைத்து துறைகளிலும் எதிர்காலத்தில் ஒளிவீசி பிரகாசித்து எமது தமிழ்ச் சமூகத்திற்கு நற்பெயரை பெற்றுத் தரவேண்டும் என வாழ்த்தினார்.

இறுதியில் நன்றியுறையாற்றிய அரங்கேற்ற நாயகியின் தாயார் பிரியா அவர்கள் அன்புடனும் நேர்த்தியாகவும் தனது உரையை ஆற்றி பார்வையாளர் மனதில் மகிழ்ச்சியுடன் மண்டபத்தை விட்டு வெளியேறும் வகையில் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்தார். தொடர்ந்து மேடைக்குச் சென்ற பார்வையாளர் றொஷேல் அவர்களை வாழ்த்தினார்கள்.

HAPPY DIWALI

தீபாவளி வாழ்த்துக்கள்





Hon.

TIM HODGSON

Member of Parliament Markham-Thornhill

905-479-1269 Tim.Hodgson@parl.gc.ca TimHodgsonMP.ca

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திடமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24



Diwali Mela

Sunday, November 8
4 – 10 p.m.

Sesquicentennial Park

Celebrate the Festival of Lights

Live Music

Free Activities

Local Eats



Main Stage
Presented by RBC

Fireworks
Presented by Performance Auto Group

Generously sponsored by
Bell CAA primont mattamy HOMES TD Tim Hortons

brampton.ca/diwali

BRAMPTON









EXCELLENT INVESTMENT OPPORTUNITY FOR INDIVIDUAL BUYER OR SYNDICATES.

15 CONDOS - CENTRAL SCARBOROUGH

BULK SALE. $ 4,875,000. ($325,000 EACH.)

- Newly renovated! Gorgeous! Open concept!
- Lobby and Hallways also updated. 4 Story Bldg.
- 13 - 2 BR Condos. Spacious - Approx 750 s.f.
- Vacant possession! No hassles with tenants.
- Ideal for student housing.
- Open concept kitchen, dining + living rooms
- En-suite laundry. $ Allowance for all appliances
- Some WR's with large shower with sliding glass doors and large vanity cabinet.
- TTC at door step. Short drive to subway & LRT
- Many temples nearby.
- 1 Parking + 1 Locker.
- For more information and appointment to view

CALL ANDY - 647-448-4558

No agents please. No commission payable.

UNIQUE INVESTMENT OPPORTUNITY













LOGAN KANAPATHI

MPP for Markham-Thornhill

PA to the Minister of Red Tape Reduction

NEED HELP WITH A PROVINCIAL ISSUE? CONTACT ME!

TEL: 905 - 305 - 1935
E-MAIL: LOGAN.KANAPATHICO@PC.OLA.ORG
WEBSITE: WWW.LOGANKANAPATHI.CA
ADDRESS: 7380 MCCOWAN ROAD, UNIT 3, MARKHAM, ON L3S 3H8

Logan_Kanapathi Logan Kanapathi
logankanapathi LoganKanapathi

இலங்கை செய்திகள் Sri Lanka News

2027 ஜனவரியில் நடைபெறவுள்ள வடக்கு ஏற்றுமதியாளர்கள் மாநாடு வடக்கின் உற்பத்தி திறனை அதிகரிக்க துணை நிற்கும் என்கிறார் வடக்கு ஆளுனர்!

பு. கஜிந்தன்



வடக்கு மாகாணத்தின் வளங்களையும் உற்பத்தித் திறனையும் சர்வதேசச் சந்தைகளுடன் இணைத்து, ஏற்றுமதி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பங்களிப்பை 4.5 வீதத்திலிருந்து 10 வீதமாக உயர்த்தும் இலக்கை அடைவதற்கு வடக்கு ஏற்றுமதியாளர்கள் மாநாடு 2027 பெரிதும் துணைநிற்கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

2027 ஜனவரி 20, 21ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ள வடக்கு ஏற்றுமதியாளர்கள் மாநாடு 2027 தொடர்பான உத்தியோகபூர்வ அறிமுகமும் திட்ட விளக்கக் கூட்டமும் ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் 29ம் திகதி அன்று (29.10.2026) வியாழக்கிழமை காலை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கை முகாமைத்துவக் கழகத்தின் ஏற்பாட்டில், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் தலைமையில், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் உள்ளிட்ட பங்காளர்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் இம்மாநாடு, வடக்கு மாகாணத்தின் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் சிறிய, நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களுக்குப் புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் வளங்களைப் பொருளாதார வலிமையாக மாற்ற வேண்டும்

கூட்டத்தின் ஆரம்பத்தில் உரையாற்றிய ஆளுநர், வடக்கு மாகாணம் இயற்கை வளங்களிலும் மனித வளங்களிலும் பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்டார். விவசாயம், கடற்றொழில், பனைசார் உற்பத்திகள், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள், தகவல் தொழில்நுட்பச் சேவைகள், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் காணப்படும் வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

இவ்வாண்டு வடக்கு மாகாணத்தில் முதலீட்டாளர் மாநாட்டை நடத்திய இலங்கை முகாமைத்துவக் கழகம், அடுத்த கட்டமாக ஏற்றுமதியாளர் மாநாட்டை முன்னெடுப்பது மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயனளிக்கும் என ஆளுநர் தெரிவித்தார். முதலீடுகளை ஈர்ப்பது மட்டுமன்றி, உள்ளூர் உற்பத்திகளைப் பரந்த சந்தைகளுக்குக் கொண்டு சென்று விற்பனை வாய்ப்புகளை உருவாக்குவதும் அவசியம் என அவர் சுட்டிக்காட்டினார்.

மாண்புமிகு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் சாதகமான அணுகுமுறையைக் கொண்டிருப்பதாகவும், பல அமைச்சர்கள் மாகாணத்தின் வளர்ச்சியில் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார். ஏற்கெனவே திட்டமிடப்பட்டுள்ள முதலீட்டு வலயங்கள் அடுத்த ஆண்டில் செயற்படத் தொடங்கும் எனத் தாம் நம்புவதாகவும், முதலீடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி முயற்சிகள் ஒன்றிணைந்து முன்னேறுவதற்கான வாய்ப்புகள் உருவாகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பங்களிப்பை 4.5 வீதத்திலிருந்து 10 வீதமாக உயர்த்தும் இலக்கை நோக்கிப் பயணிப்பதற்கு, உற்பத்தியை அதிகரித்தல், பெறுமதி சேர்த்தல், புதிய சந்தைகளை அடைதல், முதலீடுகளை ஈர்த்தல் ஆகியவை முக்கியமானவை எனவும் ஆளுநர் வலியுறுத்தினார்.

உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உலகச் சந்தை வாய்ப்புகள்

வடக்கு ஏற்றுமதியாளர்கள் மாநாடு, உள்ளூர் உற்பத்தியாளர்களையும் சர்வதேசக் கொள்வனவாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களையும் நேரடியாக இணைக்கும் தளமாக அமையவுள்ளது. வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கும் வழங்கப்படும் சேவைகளுக்கும் வெளிநாட்டுச் சந்தைகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதுடன், ஏற்றுமதிக்குத் தயாராகும் தொழில் முயற்சியாளர்களின் திறன்களையும் மேம்படுத்துவது மாநாட்டின் முக்கிய நோக்கங்களாகும்.

விவசாயம் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், பனைசார் உற்பத்திகள், கடலுணவுகள் மற்றும் மீன்பிடிப் பொருட்கள், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் சேவைகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சிறிய கைத்தொழில்கள், இயற்கை நலவாழ்வுப் பொருட்கள், பாரம்பரிய மருத்துவம், சுகாதார உபகரணங்கள், சுற்றுலா, மரபுரிமை மற்றும் பண்பாட்டுத் துறைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் மாநாட்டில் முக்கியத்துவம் பெறவுள்ளன.



இந்தத் துறைகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் தமது பொருட்களையும் சேவைகளையும் அறிமுகப்படுத்துவதற்கும், சந்தைத் தேவைகளை அறிந்துகொள்வதற்கும், வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்களுடன் புதிய தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் மாநாடு வழிவகுக்கும். குறிப்பாக, இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டுச் சந்தைகளையும், ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள புலம்பெயர் வர்த்தக வலையமைப்புகளையும் பயன்படுத்தி வடக்கு மாகாண உற்பத்தியாளர்களுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கண்காட்சி, நேரடி வர்த்தகச் சந்திப்புகள் மற்றும் திறன் மேம்பாடு

இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள மாநாட்டில் ஏற்றுமதி தொடர்பான கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கண்காட்சி, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளின் அறிமுகங்கள், நேரடி வர்த்தகச் சந்திப்புகள் ஆகியவை இடம்பெறவுள்ளன.

குறைந்தது 50 முதல் 75 வரையான நேரடி வணிகத் தொடர்புச் சந்திப்புகளை ஏற்படுத்துவதையும், 75 முதல் 100 வரையான தகுதியான கொள்வனவாளர்களை ஈர்ப்பதையும் இலக்காகக் கொண்டு திட்டமிடப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்கள் தமது பொருட்களின் தரம், விலை, விநியோகம் மற்றும் ஏற்றுமதிச் சாத்தியங்கள் குறித்து கொள்வனவாளர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடுவதற்கும், நீண்டகால வணிக உறவுகளை உருவாக்குவதற்கும் இதன்மூலம் வாய்ப்பு ஏற்படும்.

ஏற்றுமதி வளர்ச்சிக்கு அவசியமான சர்வதேசச் சந்தைத் தகவல்கள், வெளிநாட்டு வர்த்தக விதிமுறைகள், தரச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான நடைமுறைகள், வர்த்தக நிதி மற்றும் இடர் முகாமைத்துவம், பொருட்களின் போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலி ஏற்பாடுகள் தொடர்பிலும் உற்பத்தியாளர்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான முன்னேற்பாடாக, எதிர்வரும் நவம்பர் 3, 4ஆம் திகதிகளில் பயிற்சிப் பட்டறைகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பட்டறைகள் மற்றும் அவற்றுக்குப் பின்னரான வழிகாட்டல் செயற்பாடுகள் ஊடாக, ஏற்றுமதிக்குத் தயாராகும் தொழில் முயற்சியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் அவர்களின் வணிகத் தயார்நிலையை வலுப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளைச் சர்வதேசத் தரத்துக்கு உயர்த்துதல், புதிய சந்தைகளுக்குள் நுழைவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல், நிதி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்கும் அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல் ஆகியவையும் மாநாட்டின் முக்கிய செயற்பாடுகளாக அமையவுள்ளன.

இம்மாநாட்டை இலங்கை முகாமைத்துவக் கழகம் ஏற்பாடு செய்கின்றது. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு இதற்குத் தலைமையேற்று ஆதரவு வழங்குகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் முக்கிய ஒத்துழைப்புப் பங்காளராகச் செயற்படுகின்றது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனம், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகியன முக்கிய பங்காளர்களாக இணைந்துள்ளன. வவுனியா பல்கலைக்கழகம் பிராந்தியத் திட்ட முகாமைத்துவப் பிரிவாகச் செயற்படுவதுடன், ஆளுநர் செயலகம், மாகாணச் செயலகம் மற்றும் மாவட்டச் செயலகங்கள் பிராந்திய ஒருங்கிணைப்புப் பணிகளில் பங்களிக்கவுள்ளன.

முதலீட்டாளர்களின் அனுமதிச் சிக்கல்களைக் குறைக்க முத்தரப்பு ஒப்பந்தம்

முதலீட்டாளர்கள் பல்வேறு திணைக்களங்களிடமிருந்து அனுமதிகளைப் பெறுவதில் எதிர்கொள்ளும் சிரமங்களைக் குறைத்து, முதலீட்டுச் செயற்பாடுகளை எளிதாக்கும் நோக்கில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட இணையத்தளத் திட்டத்தை உத்தியோகபூர்வமாக முன்னெடுப்பதற்கான முத்தரப்பு ஒப்பந்தம் இன்றைய கூட்டத்தில் கைச்சாத்திடப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் அற்புதராஜா மற்றும் இலங்கை முகாமைத்துவக் கழகத்தின் திட்டத் தலைவர் கௌசல் ராஜபக்ச ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

முதலீட்டாளர்கள் பல்வேறு திணைக்களங்களுடனும் நிறுவனங்களுடனும் தனித்தனியாகத் தொடர்புகொண்டு அனுமதிகளைப் பெறும்போது எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்களைக் குறைப்பது இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் முதலீட்டுச் செயற்பாடுகளுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதையும், சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்புகளை ஒருங்கிணைப்பதையும் இலகுவாக்குவதற்கான வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.


ஐந்து மாவட்டங்களிலும் பாடசாலைத் தோட்டங்கள் அமைக்கும் திட்டம்

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் பாடசாலைத் தோட்டங்களை உருவாக்கும் செயற்றிட்டமும் இன்றைய நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் முதற்கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு பாடசாலை தெரிவுசெய்யப்பட்டு, அங்கு பாடசாலைத் தோட்டங்கள் அமைக்கப்படவுள்ளன. இச்செயற்றிட்டத்தை லயன்ஸ் கழகத்தின் ஊடாகத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.



வடக்கு மாகாணத்தின் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பதோடு, அவற்றைச் சர்வதேசச் சந்தைகளுக்கு ஏற்ற பொருட்களாக மாற்றி, மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஏற்றுமதி வருமானத்துக்கும் வலுச்சேர்க்கும் நீண்டகால முயற்சியாக வடக்கு ஏற்றுமதியாளர்கள் மாநாடு 2027 அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய் முரளி அவர்களும், வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலகங்களின் திட்டமிடல் பணிப்பாளர்கள், முகாமைத்துவக் கழகத்தின் உறுப்பினர்கள், பல்வேறு வர்த்தக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றனர்.



செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்ட "உண்மை–நீதி"

""தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைகள், காணாமல்போதல்கள், மனித உரிமைமீறல்கள் தொடர்பாக இந்த நாட்டில் நடக்கும் எந்தவிதமான உள்ளூர் விசாரணைப் பொறிமுறைகளும் தமிழ் மக்களுக்கு நீதியை ஒருபோதுமே பெற்றுத்தராது என்பதற்கு செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான ஆய்வாளரான தொல்லியல் நிபுணர் ராஜ் சோமதேவவும் ஏனைய உறுப்பினதற்போது சாட்சியாக மாறியுள்ளனர்". எனினும் கிருசாந்தி குமாரசுவாமி படுகொலை தொடர்பான வழக்கின் முடிவில், குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகள் பலர் தப்பிவிட இராணுவச் சிப்பாயான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ என்பவருக்கு 1998 ஜூலை மாதம் மரண தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை அறிவிக்கப்பட்டபோது, நீதிமன்றக் கூண்டில் நின்று ராஜபக்ஷ ஒரு அதிர்ச்சி தரும் வாக்குமூலத்தை அளித்தார் "நான் யாரையும் கொல்லவில்லை, உடல்களைப் புதைக்க மட்டுமே உதவினேன். செம்மணிப் பகுதியில் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட 300 முதல் 400 தமிழர்களின் உடல்கள் இருக்கும் இடங்களை என்னால் அடையாளம் காட்ட முடியும்" என்று பகிரங்கமாகக் கூறினார். இந்த சாட்சியம் ஒன்றே பாதிக்கப்பட்டவர்களுக்கு சாதகமாக உள்ளது."

---------- கே.பாலா -

செம்மணி மண்ணுக்குள் புதைக்கப்பட்டவை வெறும் மனித உடல்கள் அல்ல. அவை சாட்சிகள். நீதி கேட்டுத் தவிக்கும் தலைமுறைகளின் ஏக்கங்களைச் சுமந்திருக்கும் மனித எச்சங்கள். ஆனால், யாழ்ப்பாணத்தின் செம்மணிப் பூமியில் மீட்கப்பட்ட இந்த மனித எச்சங்கள் "இயற்கை அனர்த்தங்களாலோ அல்லது தொற்று நோய்களாலோ" உயிரிழந்தவர்களுடையதாக இருக்கலாம் என்ற தொல்லியல் ஆய்வாளர் ராஜ் சோமதேவவின் அறிக்கை, ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் நெஞ்சில் மீண்டும் ஒருமுறை நெருப்பை அள்ளிப்போட்டுள்ளது.

அறிவியல் பூர்வமான உண்மைகளைத் தேடித் தர வேண்டிய நிபுணர்கள், ஆய்வாளர்கள், அதிகாரத்தின் நிழலில் நின்று சாட்சியங்களை மழுங்கடிக்கும் முயற்சிகள் எத்தகைய அநீதியானது? வரலாற்றின் பக்கங்களில் குருதி படிந்த உண்மைகளைத் திரித்து, இராணுவத்தை பாதுகாப்பதற்காக தனது மனச்சாட்சியையே அடகுவைக்கும் இந்த ஆபத்தான வேலையை தொல்லியல் ஆய்வாளர் ராஜ் சோமதேவ செய்திருப்பது சிங்களவர்கள் மீது தமிழ் மக்கள் வைத்திருந்த மிச்சசொச்ச நம்பிக்கையையும் தகர்த்தெறிந்துள்ளது. இந்த நாட்டில் தமிழர்களுக்கு ஒரு போதும் நீதி கிடைக்காது என்பதையே இது மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது.

செம்மணி மனிதப்புதைகுழியின் சுருக்கமான வரலாற்று பின்னணி

1995 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், இலங்கை இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்காக "ரிவிரச" என்ற பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. இதன் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் தென்மராட்சி மற்றும் வன்னிப் பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்தனர். 1996 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பிறகு, அப்பகுதியில் கடுமையான ஊரடங்குச் சட்டமும், சோதனைச் சாவடிகளின் மூலம் கண்காணிப்புகளும் தீவிரப்படுத்தப்பட்டன.

1996-1997 காலப்பகுதியில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பொதுமக்கள் சோதனைச் சாவடிகளிலும் இராணுவ முகாம்களிலும் வைத்து கைது செய்யப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். செம்மணியில் மனிதப் புதைகுழிகள் உள்ளன என்ற உண்மை, ஒரு கொடூரமான படுகொலைச் சம்பவத்தின் விசாரணையின் போதே முதன்முதலில் உலகிற்குத் தெரியவந்தது. 7 செப்டம்பர் 1996 அன்று சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கிருசாந்தி குமாரசுவாமி என்ற மாணவி, செம்மணி பகுதியில் அமைந்திருந்த இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் கடத்தப்பட்டு, கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். மகளைத் தேடிச் சென்ற அவரது தாய் ராசம்மா, தம்பி பிரணவன் மற்றும் குடும்ப நண்பர் கிருபாகரமூர்த்தி ஆகிய மூவரும் இராணுவத்தினரால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் 4 உடல்களும் செம்மணி உப்புவெளிப் பகுதியில் அரைகுறையாகப் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

கிருசாந்தி குமாரசுவாமி படுகொலை தொடர்பான வழக்கின் முடிவில், குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகள் பலர் தப்பிவிட இராணுவச் சிப்பாயான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ என்பவருக்கு 1998 ஜூலை மாதம் மரண தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை அறிவிக்கப்பட்டபோது, நீதிமன்றக் கூண்டில் நின்று ராஜபக்ஷ ஒரு அதிர்ச்சி தரும் வாக்குமூலத்தை அளித்தார் "நான் யாரையும் கொல்லவில்லை, உடல்களைப் புதைக்க மட்டுமே உதவினேன். செம்மணிப் பகுதியில் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட 300 முதல் 400 தமிழர்களின் உடல்கள் இருக்கும் இடங்களை என்னால் அடையாளம் காட்ட முடியும்" என்று பகிரங்கமாகக் கூறினார்.

இதுவரை காலம் சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமை அமைப்புகள் கூறிவந்த வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்களுக்கு, ஒரு இராணுவச் சிப்பாயின் கூற்றே சாட்சியமாக அமைந்தது. சோமரத்ன ராஜபக்ஷவின் வெளிப்படுத்தலைத் தொடர்ந்து, 1999 ஆம் ஆண்டில் சர்வதேச நிபுணர்களின் முன்னிலையில் செம்மணியில் முதற்கட்ட அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.அங்கு அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் இருந்து 15 மனித எச்சங்கள், உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டன. அவற்றில் சில உடல்கள் 1996 இல் காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களுடையது என்பது தடயவியல் பரிசோதனைகளின் மூலம் உறுதி செய்யப்பட்டது. இருப்பினும், முழுமையான மற்றும் வெளிப்படையான அகழ்வாராய்ச்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படாமல், அரசியல் மற்றும் சட்ட சிக்கல்களால் அந்த விசாரணை முடங்கியது.

உண்மையை புதைத்த சோமதேவவின் அறிக்கை

நீண்டகால இடைவெளிக்கு பின்னர் மீண்டும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகள் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதான சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்லியல் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினராலும் முன்னெடுக்கப்பட்டன. 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மீண்டும் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சிப் பணிகளின் போது 583க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகளும், சிறார்களின் உடைகள், பொம்மைகள், பாடசாலைப் பைகள் மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையிலான மனித எச்சங்களும் மீட்கப்படடன.


செம்மணி மனித எச்சங்கள் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மற்றும் கள ஆய்வுகளின் அடிப்படையில், தொல்லியல் ஆய்வாளர் ராஜ் சோமதேவ தரப்பிலிருந்து பல்வேறு கட்டங்களாக இடைக்கால அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. இவ்வாறான நிலையில்தான் ராஜ் சோமதேவ இதுவரை அகழ்ந்து எடுக்கப்பட்ட 583 எலும்புக்கூடுகளில் சுமார் 150 வரையிலான எலும்புக்கூடுகளையும் அவற்றுடன் சேர்த்து கண்டெடுக்கப்பட்ட சான்றுப் பொருட்களையும் ஆய்வு செய்து இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்து அண்மையில் அவர் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் மூன்றாவது மற்றும் நான்காவது இடைக்கால அறிக்கைகளாக சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கைகளில்தான் "செம்மணிப் புதைகுழியில் புதைக்கப்பட்டுள்ளவர்களின் பின்னணியில், தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவு என்பன காரணமாக இருந்திருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது. அத்துடன் இந்தப் புதைகுழியானது சமய ரீதியிலான இறுதிச் சடங்குகள் இடம்பெற்றுள்ளன என்பதற்கான சில குறிப்பிடத்தக்க ஆதாரங்களையும் கொண்டுள்ளது. இதுவரை கிடைத்த சான்றுகளின் அடிப்படையில், செம்மணிப் புதைகுழியானது உலகின் பல பகுதிகளில் அவதானிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய மனிதப் புதைகுழிகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காண்பிக்கின்றது. குறிப்பாக சரியான முறையில் அடக்கம் செய்யப்படும் முறைமைகளுடன் ஒப்பிடுகையில், அந்தப் புதைகுழி குறிப்பிட்டுக் கூறக்கூடிய அதிக ஒற்றுமைகளை வெளிப்படுத்துகின்றது. இறந்தவர்களின் அதிக அடர்த்தியானது சடலங்கள் எந்தச் சூழ்நிலையில் அடக்கம் செய்யப்பட்டன என்பதை முறையாகவும், துல்லியமாகவும் நிரூபிக்கவில்லை. அவ்வாறு நிரூபிப்பதற்குத் தேவையான ஆதாரபூர்வ விடயங்கள் தென்படவில்லை.

செம்மணிப் புதைகுழியில் இருந்து அதிகளவான எலும்புத் தொகுதிகள் மீட்கப்பட்டமைக்குக் காரணம் இதன் பின்னணியில் தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவு என்பன இருந்திருக்கலாம். ஆதலால் சடலங்களை முறையாகவும் விரைவாகவும் அப்புறப்படுத்த வேண்டிய தேவை அந்நேரத்தில் ஏற்பட்டிருக்கலாம். இறுதிச் சடங்கில் பயன்படுத்தப்படும் பொருட்கள் அதிகளவில் மீட்கப்படாமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஆயினும் இதுவரை மீட்கப்பட்ட சில தடயங்கள், அங்கு முறைப்படி இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன என்பதையும் வெளிப்படுத்துகின்றன." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருட அறிக்கையில் இருந்து இறுதியாக சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கியமான விடயங்கள் இந்த அறிக்கையில் முற்றிலும் மாறுபடுவதே தமிழ் மக்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக தொடர்ந்து இயங்கிவரும் செயற்பாட்டாளர்கள் மத்தியில் கடும் சந்தேகத்தையும் விசனத்தையும் ராஜ் சோமதேவ மீதான விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதற்கு முன்னர் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதிய நீதிமன்றில் ஒரு இடைக்கால ஆய்வு அறிக்கையை சமர்ப்பித்திருந்தார். அந்த அறிக்கையில் மிகவும் தெளிவாக, யாழ் செம்மணியில் அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிப் பகுதியில் குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமைக்கான தடயங்கள் உள்ளன எனத் தான் கருதுவதாகவும், வழமையாக உடல்கள் நல்லடக்கம் செய்வதுபோன்று அங்கிருந்து மீட்கப்பட்ட எலும்புத் தொகுதிகள் காணப்படவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார்.

(தொடர்ச்சி 16 பக்கம்)



(15 பக்கத் தொடர்ச்சி)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்ட "உண்மை–நீதி"

யார் இந்த ராஜ் சோமதேவ?

இவரின் முழுப்பெயர் டெல்கஹவத்தகே ராஜ் குமார சோமதேவ. நவம்பர் 01, 1960 இல் வெல்லவாயாவில் பிறந்தவர். களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் தொடர்பான முதுகலை கல்வி நிறுவனத்தின் மூத்த பேராசிரியராகப் பணியாற்றியவர். லண்டன் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் நிறுவனத்தின் "சார்லஸ் வாலஸ் ஆராய்ச்சிப் பேராளர்" விருதைப் பெற்றவர். மேலும் இலங்கை தொல்லியல் மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர். இலங்கையில் தொல்லியல் துறையுடன் தடயவியல் அறிவியலையும் இணைத்த முன்னோடிகளில் இவரும் ஒருவர். இலங்கையில் கடந்த காலங்களில் கண்டெடுக்கப்பட்ட பல சர்ச்சைக்குரிய மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சிகள் மற்றும் தடயவியல் ஆய்வுகளில் (உதாரணமாக மாத்தளை பொது மருத்துவமனை வளாகம், மன்னார் சதொச மனிதப் புதைகுழி மற்றும் தற்பொழுது யாழ்ப்பாணம் செம்மணி மனித எச்சங்கள் அகழ்வாராய்ச்சி) முக்கிய ஆலோசகராகவும் நிபுணராகவும் அரச மற்றும் நீதிமன்றப் பணிகளில் ஈடுபட்டு வருபவர்.

பேராசிரியர் சோமதேவவின் முந்தைய வரலாற்று மற்றும் தொல்பொருள் நிலப்பாடுகளைக் கவனித்தால், அவரது அணுகுமுறை எப்போதுமே பக்கச்சார்பானதாகவே இருந்து வந்துள்ளது என்கின்றார் சுகாதார அமைச்சின் சமூக மருத்துவ ஆலோசகரும் யாழ்ப்பாணம், பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் வருகைதரு விரிவுரையாளருமான டாக்டர் முரளி வல்லிபுரநாதன்.

இலங்கையில் விஜயனின் வருகைக்கு முந்தைய பெருங்கற்காலப் பண்பாடு, பொம்பரிப்பு, கந்தரோடை, ஆனைக்கோட்டை முத்திரை (கோவேதா), மற்றும் தமிழ் பிராமிச் சான்றுகள் என தமிழர்களும் சைவ வழிபாட்டு எச்சங்களும் இந்த மண்ணில் தொன்றுதொட்டு வாழ்ந்தற்கான உறுதியான தொல்பொருள் ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த ராஜ் சோமதேவ இந்த வரலாற்று உண்மைகளை ஒருபோதும் ஏற்றுக்கொண்டவரல்லர்.

திஸ்ஸமஹாராமவில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓட்டு எழுத்துக்களை (எண் 53) ஐராவதம் மகாதேவன் மற்றும் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் ஆகியோர் "திரளி முறி" என்ற தமிழ் பிராமி எழுத்தாக வாசித்த போது, அதனை மறுத்து அது சிங்கள-பிராகிருத வடிவம் என வலிந்து திரித்தவர் இந்த சோமதேவ.

இலங்கையின் தொல்வரலாறு முழுவதும் சிங்கள பௌத்தர்களின் பூர்வீகத்திற்கு மட்டுமே சொந்தமானது என்ற ஒருதலைப்பட்சமான நிலைப்பாட்டை தொல்பொருள் ரீதியாக நிலைநிறுத்தவே அவர் தொடர்ச்சியாக முயன்று வந்துள்ளார். இப்போது இந்துக்களின் "சமாதி" என்ற புனித வழிபாட்டு முறையையும் போர் வன்முறைகளை மறைக்கத் தவறாகப் பயன்படுத்துகிறார் என்கின்றார் டாக்டர் முரளி வல்லிபுரநாதன்.

கோத்தபாய ராஜபக்சவின் நம்பிக்கைக்குரியவர்

தற்போது ராஜ் சோமதேவவின் அறிக்கை கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் இவர் ஒரு கோத்தபாய ராஜபக்ச விசுவாசியாக, கோத்தபாய ராஜபக்சவின் நம்பிக்கைக்குரியவராக உள்ளமையும் வெளிப்பட்டுள்ளது முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட "கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை மேலாண்மை செய்வதற்கான ஜனாதிபதி பணிக்குழு"வில் ராஜ் சோமதேவவும் முக்கிய நபராக நியமிக்கப்பட்டிருந்தார் இந்தப் பணிக்குழு 2020 ஜூன் 2 ஆம் திகதி வெளியிடப்பட்ட சிறப்பு அரசாங்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் அப்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட 11 பேர் கொண்ட அந்தப் பணிக்குழுவில் பேராசியர் ராஜ் சோமதேவ உட்பட கடும் இனவாதிகளான எல்லாவல மேதானந்த தேரோ (தொல்லியல் சக்கரவர்த்தி என குறிப்பிடப்பட்டவர்) பானமுரே திலகவன்ச தேரோ (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான பிரதம சங்கநாயகர்) மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன (பாதுகாப்பு அமைச்சின் அன்றைய செயலாளர்) சேனரத் பண்டார திஸாநாயக்க (தொல்பொருள் திணைக்கள அன்றைய பணிப்பாளர் நாயகம்) சந்திரா ஹேரத் (அன்றைய காணி ஆணையாளர் நாயகம்) ஏ.எல்.எஸ்.சி. பெரேரா (அன்றையஅளவையாளர் நாயகம்) பேராசிரியர் கபில குணவர்தன, தேஷபந்து தென்னகோன் (மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக இருந்தவர்) எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி. திஸாநாயக்க (அன்றைய கிழக்கு மாகாணக் காணி ஆணையாளர்) திலீத் ஜயவீர (தெரண ஊடகநிறுவனத்தின் தலைவரும் தற்போதைய சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவரும் எம்.பியுமாக இருக்கும் இவர் ஒரு இனவாதியாகவே பார்க்கப்படுபவர்) நியமிக்கப்பட்டனர்.

தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் இடங்களை அடையாளம் காண அமைக்கப்பட்ட இந்தக்குழுவில், ஆரம்பத்தில் தமிழ் அல்லது முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த தொல்பொருள் வல்லுநர்களோ பிரதிநிதிகளோ எவரும் சேர்க்கப்படவில்லை. கடும் இனவாதிகளான பௌத்த துறவிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்தவர்கள் பெரும்பான்மையாகக் கொண்ட இக்குழு, கிழக்கில் உள்ள சிறுபான்மையினரின் பூர்வீக நிலங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை தொல்பொருள் இடங்கள் என்ற போர்வையில் ஆக்கிரமிக்கவும், பௌத்த மயமாக்கவும் பயன்படுத்தப்படும் என்ற கடுமையான விமர்சனங்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்களாலும் மனித உரிமை அமைப்புகளாலும் அப்போது முன்வைக்கப்பட்டன.

இவ்வாறான கோத்தபாய ராஜபக்சவின் நம்பிக்கைகக்குரியவரான ராஜ் சோமதேவதான் செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான விசாரணைகள் மற்றும் அகழ்வாராய்ச்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக பேராசிரியர் ராஜ் சோமதேவவினை நீதிமன்றமே அதிகார பூர்வமாக நியமித்திருந்தது இவ்வாறான நிலையில் அவரின் அறிக்கை செம்மணி மனிதப்புதைகுழியின் உண்மைகளை, சாட்சியங்களை அப்படியே செம்மணி மனிதப்புதைகுழிக்குள் புதைப்பதாகவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையை நிராகரிக்க வேண்டிய 5 காரணங்கள்

செம்மணியில் புதைக்கப்பட்ட உடல்கள் போர்க்காலப் படுகொலைகள் அல்ல என்றும், அவை ஏதோ ஒரு தொற்றுநோய், இயற்கை அனர்த்தம் அல்லது வழக்கமான மனித சடங்கு ரீதியான புதைப்புகள் என்றும் நிறுவுவதற்கு முயற்சிக்கும் ராஜ் சோமதேவவின் செம்மணி அறிக்கையை நிராகரிக்க வேண்டிய 5 காரணங்களை பட்டியலிடுகின்றார் சுகாதார அமைச்சின் சமூக மருத்துவ ஆலோசகரும் யாழ்ப்பாணம், பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் வருகைதரு விரிவுரையாளருமான டாகடர் முரளி வல்லிபுரநாதன்.

1. எலும்புக்கூடுகளின் காயங்களையும் நிலைகளையும் திட்டமிட்டு மறைத்தல்:

"தியான நிலை" (சமாதி) என்ற போலி விளக்கம்: 227-ஆம் இலக்க எலும்புக்கூடு வழக்கமான மனித சடங்கின்படி "தியான நிலையில்" (சமாதி) புதைக்கப்பட்டதாக அறிக்கை சித்திரிக்கிறது. ஆனால், முந்தைய நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் தடயவியல் பதிவுகளின்படி, அதே எலும்புக்கூட்டின் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்ததும், மண்டையோடு மற்றும் தாடை எலும்புகள் கொடூரமான ஆயுதங்களால் அடித்து நொறுக்கப்பட்டிருந்ததும் புகைப்படச் சான்றுகளுடன் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கைகள் கட்டப்பட்டு, மண்டையோடு பிளக்கப்பட்ட கொலையை "தியான நிலை" என வர்ணிப்பது தடயவியல் மோசடி .முறையற்ற புதைப்புகள்: பல எலும்புக்கூடுகள் தலை துண்டிக்கப்பட்ட நிலையிலும், ஒன்றன் மேல் ஒன்றாக அவசரக் கோலத்தில் வீசப்பட்ட நிலையிலும் காணப்பட்டமையை அறிக்கை திட்டமிட்டு மூடிமறைக்கிறது.

2. சமகாலப் பொருட்களும் சான்றுகளும் புறக்கணிக்கப்படல்:

குழந்தைகளின் பொருட்கள்: 25-ஆம் இலக்க எலும்புக்கூடு ஒரு 4-5 வயதுக் குழந்தையினுடையது. அக்குழந்தையின் அருகே ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நவீன பாடசாலைப் பை, விளையாட்டுப் பாத்திரங்கள் மற்றும் பால் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன.சவப்பெட்டி என்ற புனைவு: அங்கிருந்த சிறு ஆணிகளையும் உக்கிய துணித் துண்டுகளையும் வைத்து, அது ஏதோ மரபுவழிச் சவப்பெட்டிப் புதைப்பு என அறிக்கை அனுமானிக்கிறது. ஆனால், பாடசாலைப் பையுடனும் விளையாட்டுப் பொருட்களுடனும் ஒரு குழந்தை புதைக்கப்பட்டிருப்பது, அது திட்டமிட்ட கடத்தல் மற்றும் படுகொலை என்பதையே திட்டவட்டமாக நிரூபிக்கிறது.

3. நோயியல் மற்றும் மூலக்கூற்று ஆதாரங்கள் இன்மைகள்:

ஒரு பெரும் தொற்றுநோயால் மக்கள் கொத்துக்கொத்தாக இறந்தார்கள் என்று வாதிடுவதற்கு, பற்களின் கூழ்மத்திலிருந்து பெறப்படும் பண்டைய டி.என்.ஏ. பரிசோதனைகள் மூலமாகவோ அல்லது எலும்புகளில் உள்ள நோய்க்கூற்று அடையாளங்கள் (கொலரா, பிளேக், தைபோய்ட் போன்றவை) மூலமாகவோ உயிரியல் சான்றுகள் நிறுவப்பட வேண்டும். சோமதேவவின் அறிக்கையில் இத்தகைய எந்தவொருஆதாரா பூர்வ (விஞ்ஞானபூர்வ) ஆய்வுகளோ, ஆய்வக நோயியல் உறுதிப்படுத்தல்களோ கிடையாது. வெறும் அனுமானங்களை மட்டுமே அறிக்கையாகத் தந்துள்ளார்.

4. யாழ்ப்பாணத்தின் சுகாதார மற்றும் மரணப் பதிவேடுகளில் சான்றுகள் இல்லை:

செம்மணியில் மீட்கப்பட்ட உடல்களில் 60 சதவீதத்திற்கும் அதிகமானவை பச்சிளங்குழந்தைகள் மற்றும் சிறுவர்களுடையவை. அப்படியொரு கொடிய தொற்றுநோய் பரவி நூற்றுக்கணக்கான மக்கள் ஒரேயடியாக இறந்திருந்தால், அதற்குரிய ஆவணங்கள் யாழ்ப்பாணத்தின் பொதுச் சுகாதாரத் துறை, போதனா வைத்தியசாலை அல்லது தேவாலயங்களின் மரணப் பதிவேடுகளில் பதிவாகியிருக்க வேண்டும். ஆனால், அப்படியொரு தொற்றுநோய் அனர்த்தம் நிகழ்ந்தற்கான எந்தவொரு நிர்வாகப் பதிவும் வரலாற்றில் இல்லை.

5. இராணுவத்தினரின் நீதிமன்ற வாக்குமூலங்களை மூடிமறைத்தல்:

செம்மணி புதைகுழி என்பது தொல்பொருள் ஆய்வின் போது தற்செயலாகக் கண்டெடுக்கப்பட்ட ஒன்று அல்ல. 1998-ஆம் ஆண்டு கிரிஷாந்தி குமாரசுவாமி வழக்கு விசாரணையின் போது, முன்னாள் இராணுவச் சிப்பாய் சோமரத்ன ராஜபக்ஷ உள்ளிட்ட படையினரால் நீதிமன்றில் பகிரங்கமாக அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலேயே இந்த புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டன. பாதுகாப்புப் படையினரால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர் என்ற உறுதிப்படுத்தப்பட்ட வாக்குமூலங்களையும் சாட்சியங்களையும் ஒதுக்கிவிட்டு, இதனை "தொற்றுநோய் மரணம்" என்று திசைதிருப்புவது அப்பட்டமான நீதிமறுப்பு என்கின்றார்.

சந்தேகங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள்

ராஜ் சோமதேவவின் அறிக்கையில் போர்க்காலத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சட்டவிரோதமாகப் புதைக்கப்பட்ட தமிழர்களின் எலும்புக்கூடுகளை, "இயற்கை அனர்த்தங்கள் அல்லது தொற்ற நோய்களால் இறந்தவர்களின் உடல்கள்" என சுட்டிக்காட்ட முயல்வது உண்மையான வரலாற்று மற்றும் போர்க்காலச் சம்பவங்களை திசைதிருப்பும் முயற்சி என்ற சந்தேகம் எழுப்பப்படுகிறது புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள், ஆடைகள் மற்றும் பொருட்கள் பல தசாப்தங்களுக்கு முன் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுடையவை என்பதற்கான சான்றுகள் இருக்கும்போது, அவற்றுக்கு முறையான காலக்கணிப்பு அல்லது தடயவியல் அறிவியல் சோதனைகளை செய்யாமல் அவசரப்பட்டு இதுபோன்ற முடிவுகளுக்கு வருவது ஏன் என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

செம்மணி புதைகுழி தொடர்பான ராஜ் சோமதேவின் அறிக்கையில் தொற்றுநோய் காரணமாக கனிசமான நபர்கள் உயிரிழந்து புதைக்கப்பட்டுள்ளமையுடன் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதை-குழி ஒத்துப் போவதாகவும், அதனை நிராகரிப்பதற்கு எவ்விதமான காரண-மும் இல்லலை என்ற கருத்தை தெரிவித்துள்ளார். அதே பந்தியில் இதுவரை-யில் கண்டறியப்பட்டுள்ள உடல்கள் தொடர்பில் நிபுணத்துவ குறைபாடுகள் காரணமாக இன்னும் எத்தனையோ விடயங்கள் செய்யவுள்ள காரணத்தினால் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் முடிவுகளை அறிவிக்க முடியாது என்று குறிப்பிட்டுவிட்டு, தொற்று நோயில் நடந்ததை போன்ற கருத்தையும் பதிவு செய்கின்றார். பேராசிரியர் ராஜ் சோமதேவ இவ்வாறு எந்த அடிப்படையில் அறிக்கையில் இந்த கருத்துக்களை பதிவு செய்துள்ளார்?

(தொடர்ச்சி 18 பக்கம்)

ஏக்கம்

திருமதி. பவானி சச்சிதானந்தன்
இலங்கை

சொல்லிக் கொள்ள முடியாத ஒருவித, தனிமையும் வெறுமையும் மனதை வாட்டிட கோகிலாவுக்கு தன் இயலாமையை பகிர்ந்திட யாரை அணுகலாம் என்ற குழப்பம் தடுமாற்றத்தைத் தந்தது. அதனால் அவள் தவித்து நின்றாள். அவள் வயதுக்கு இது போல் எத்தனையோ ஜீவன்களை பார்த்துப் பேசி ஆறத்தழுவி ஆறுதல் கூறி மகிழ்ச்சிப் படுத்தி உள்ளாள். ஆனாலும் தனக்கென்று வேதனைகள் சுமையான போது தான் அதன் வலி இத்தனை கனதியானது என்று புரிந்துகொண்டாள்.

அன்று அலவலாவி பலருக்கும் தைரியம் ஊட்டிய பல சந்தர்ப்பங்கள் நினைவில் வந்தாலும் அதிலெல்லாம் நிம்மதிக் காண முடியாது அவளது மனம் தவிப்புடன் ஏதோ ஒன்றைத் தேடி ஓடும் நிலைக்குச் சென்றது.

அழகிய வீடு, பெரிய தோட்டம் அக்கம் பக்கம் கணவனின் உறவுகள் வாழும் வீடுகள் திரும்பும் திசையிலெல்லாம் "என்ன எப்படி சுகமாயிருக்கீங்களா, என்ன செய்யறீங்க, சாப்பிட்டுங்களா? புள்ளைங்க படிக்கிறாங்களா?" என்று இன்னும் பல அன்றாட கேள்விக் கணைகளுடன் கணவனின் சொந்தங்கள் உரையாடி ஒன்றித்து கலந்திடுவார்கள்.

சலிப்புத் தட்டாத நிமிடத்தில் பிரச்சினைகளை மறந்திடும் மனிதத்தை மதிக்கத் தெரிந்த அன்பு உள்ளங்கள். உண்மையில் நோய்கள் பறந்து போகும் அளவிற்கு சிரிக்கத் துணிந்த ஆசை சொந்தங்கள். கவலையே இல்லாது கடந்திடும் அழகிய வசந்த காலம். ரசனை மிகுந்திட சிறுச் சிறு பிரச்சினைகள் எழுந்தாலும் குடும்பத்தில் பெரியவர் ஒருவர் பேசி சரி செய்து இயல்பு நிலையை உருவாக்கி ஒன்றும் இல்லாத பூஜியம் ஆக்கி சிரிப்பை தூவிட அனைவரும் சாதாரணமாகி விடுவார்கள். அப்படி வாழ்ந்த சூழல் மீண்டும் எத்தனைப் பிறவி எடுத்தாலும் சொந்தங்களிடம் பெருமைகளைப் பேசியே வாழ்ந்து கழித்திடலாம் என ஆசையாக நினைக்கக் கூடிய நினைவுகளை தந்திட கடந்த காலம் கண் முன்னால் வந்து நிற்கின்றது.

கோகிலா தன் கணவன் குமரன், ஏழு பிள்ளைகள் என அழகிய வசந்த வட்டத்துக்குள் குடும்பம் என்ற இல்லறத்தை கோவில் போன்று அலங்கரித்து வாழ்க்கையை சுதந்திரமாய் வாழ்ந்தவள். குமரனும் நல்ல வருமானம் தரக்கூடிய வர்த்தகராக இருந்ததினால் பணச் சிக்கல்கள் என்று கூறிடும் அளவிற்கு எப்போதுமே தாக்கம் செலுத்த வில்லை. உழைப்பை தன் வசமும், வருமானத்தை கோகிலாவின் கட்டுப் பாட்டிலும் இட்டவர் பிள்ளைகள் வளர்ப்பில் கடுமையானவராகவும் அவர்களின் பொறுப்பை கோகிலாவிடமும் ஒப்படைத்த வண்ணம் நிம்மதியாக தொழில் மூழ்கிச் செயற்பட்டார்.

கோகிலாவும் சுங்குடி பட்டுச் சேலையில் ஐம்பது சத அளவில் வட்டமாய் குங்குமப் பொட்டு நெற்றியில் சிறியதாய் சிரிப்பு நேர்த்தியான உடை நடை பாவனையில் அன்று மலர்ந்த மலராக புன்னகைத்த முகத்தோடு களையாக இருப்பாள். இவளைப் பார்ப்பவர்களுக்கு அல்லது பேசியவர்களுக்கு மீண்டும் ஒருதரம் பார்க்க வேண்டும், பேச வேண்டும் எனத் தோன்றிடும் அளவிற்கு அன்பைப் பொழிந்து உறவாடிடுவாள்.

ஆக! யாரோடும் பிரச்சினை, கோபம், கர்வம், வைராக்கியம், பிரிவு என்று கூறிடும் வகையில் என்றுமே இருந்ததில்லை. குமரனினினதும் கோகிலாவினதும் உறவினர்கள் சர்வ சாதாரணமாக வந்து உறவாடிப் போவார்கள். யார் வந்து போனாலும் வயிறார உணவருந்தி அன்பளிப்புகள் கை நிறைந்திட மகிழ்ச்சியாகவே விடைபெறுவார்கள். ஒவ்வொரு வீட்டு விஷேடங்களிலும் முக்கிய அழைப்பாக குமரன் கோகிலா தம்பதியினர் இடம் பெற்று இருப்பார்கள். தன் பிள்ளைகள் மட்டுமல்லாது இன்னும் பல பிள்ளைகளுக்கு அப்பா அம்மாவாக நின்று திருமணம் எனும் மங்கள விளக்கேற்றிட துணையாகி மகிழ்வித்து மகிழ்ந்திருக்கின்றார்கள். ஊரில் எல்லோரிடமும் இவர்களுக்கான மரியாதை அச்சு பிசகாமல் அப்படியே நீண்டு நிலைக்க வாழ்ந்த பெருமை குமரன் கோகிலாவையே இணைந்திட சுகமான நாட்களாக வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள்.

இவ்வாறாக காலம் கடந்திட, தம் பிள்ளைகளும் திருமண வயதுகளை அடைந்திட, முறையாக திருமணங்கள் செய்து கொடுத்து அவரவர்களுக்கான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்திட, பேரன் பேர்த்திகள் கண்டு மகிழ்ந்திட ஒவ்வொருவரின் வாழ்க்கையும் அழகாக பூச்சூடிட குமரன் கோகிலா பெற்ற ஆண் பெண் பிள்ளைகள் வீடுகளுக்கு விருந்தாளியாக போய் வந்தார்களே தவிர எந்த வீட்டிலும் உரிமையோடு அதிக நாட்கள் தங்கிடவே இல்லை.

மருமகன், மருமகள் பேரக் குழந்தைகளுகள் அவர்களைத் தங்கிச் செல்லும்படி கேட்டாலும் ஏதாவது காரணங்களைச் சொல்லி தம் இல்லம் நோக்கி வந்திடுவார்கள்.

தமக்கென கடவுள் அனைத்து வசதி வாய்ப்புகளையும் தந்திருக்க எதற்காகவும் இன்னுமொருவரில் தங்கி இருக்க வேண்டிய தேவை இல்லாது சுதந்திர வாழ்க்கையை அனுபவித்தார்கள்.



இருந்தும் அதிக ஜீவன்கள் ஓடி ஆடித் திரிந்த வீட்டில் தம்மோடு பிள்ளைகள் யாரேனும் குடும்பமாய் வாழ்ந்தால் இன்னும் கொஞ்சம் மகிழ்ந்திடலாம் என்று சில வேளை இருவரும் நினைக்க மறக்கவும் இல்லை.

அதே வேளை தாம் பிறந்து வளர்ந்த வீட்டில் பங்கு கேட்டு வந்து நிற்கின்ற அளவிற்கு எந்த பிள்ளைகளுக்கும் தேவை ஏற்படவும் இல்லை.பெரிய வசதியாக இல்லா விட்டாலும் தேவைகள் பூர்த்தி ஆகிடும் வகையில் அவர்களும் சுகமாக வாழ்ந்தார்கள்.

அதனால் தாம் பெற்ற பிள்ளைகள் கண் காணாத தூர இடங்களில் கூட மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள் என்ற மன நிம்மதியில் தாய் தகப்பனாக மகிழ்ந்தார்கள்.

தேவைகள் கருதி வீடுகளுக்குப் போய் வந்தார்கள். அதன் மூலம் ஒற்றுமையையும் காத்தார்கள்.

கடவுளை வேண்டி பூசைகள் செய்து சுமையில்லா நிதர்சனமான வாழ்க்கையில் சுகம் கண்டார்கள்.

இப்படியாக வாழ்ந்த வாழ்க்கையில் இவ்வளவு சீக்கிரமாக நாம் தனிப்பட்டுப் போய்விடுவோம் என நினைக்க முன்பே வீட்டுக்குள் இருவரும் தனித்தார்கள்.

உதவிக்கு இருந்தவர்கள் எந்த ஒரு களவு பொய்யும் இல்லாது கடமைகளை இருவருக்கும் சரியாக செய்தார்கள். உதவியாளர்களுக்கான கொடுப்பனவுகளை மாதா மாதம் கையளிக்க அவர்களும் நிம்மதியாக வீட்டைப் பராமரித்துக் கொண்டார்கள்.

காலம் கடந்திட குமரன் வயது மூப்புக் காரணமாக சுகயீனம் அடைந்திட தனது எண்பத்து ஒன்பதாவது வயதில் உலகத்தை விட்டுப் பிரிந்தார். இத்தனைக் காலமும் ஒருவருக்கு ஒருவர் அனைத்து விடயங்களிலும் துணையாக இருந்த காலம் மாறிட, கோகிலாவும் மனதாலும் வயதாலும் சோர்வடைந்திட அவளை ஒவ்வொரு பிள்ளையும் "இந்த வயதில் அம்மா தனியாக இருக்க வேண்டாம் நீங்க பெற்ற பிள்ளைகளிடம் வாருங்கள்" என அழைத்தார்கள். அதற்கு கோகிலா சம்மதிக்கவில்லை. அடுத்தவர்களுக்கு இடைஞ்சலாக இல்லாது வாழும் நிலையை வரமாகவும் தவமாகவும் எண்ணி யாருக்கும் சுமையாகாது வாழ்ந்திடவே விரும்பினாள். எனவே பிள்ளைகளும் அம்மாவின் விரும்பத்திற்கு மதிப்பளித்து அந்த வீட்டில் வைத்தே மிகுந்த கவனமாக கவனித்தார்கள்.

பிள்ளைகள் மாறி மாறி அப்பா அம்மா பிள்ளைகள் என வாழ்ந்த இத்தனைப் பெரிய வீட்டில் அம்மா மட்டும் தனித்திருக்க வேண்டாமென்று தத் தமது வீட்டுகளுக்கு அழைத்தப் போதும் கோகிலா கணவனும் தானும் இணைந்து கோயிலாக வைத்திருந்த வீட்டை விட்டுச் செல்ல விரும்பாத நிலையில் கோகிலா பெற்ற பிள்ளைகளும் நிறைவாக ஒத்துழைத்தார்கள்.

காலப் போக்கில் நோய் நொடி என்று படுக்கையில் ஓய்ந்துவிடாது, எண்பத்து ஐந்து வயதிலும் திடகாத்திரமாகவே வாழ்ந்தாள் கோகிலா.

அன்று கோகிலாவின் எண்பத்து ஆறாவது அகவை தின கொண்டாடத்திற்காக பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், உறவுகள் என வீடே அமர்க்களமாகிட இவளும் என்றுமில்லலாத மகிழ்ச்சியில் திளைத்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

கொண்டாட்டம் முடிய வந்தவர்கள் அனைவரும் அவரரவர் இல்லம் புறப்பட்டார்கள்.

நீண்ட நாட்களின் பின் தான் விரும்பிய அனைத்து நல் உள்ளங்களும் ஒன்று கூடி இணைந்திட கிடைத்ததை மனது நினைக்க நினைக்க இன்பமே நிறைந்தது.

அடுத்த நாள் காலை விடிய வீடு வெறிச்சோடிய நிலையில் அவளுக்கும் மனது ஏதோ வலிக்கத் தான் செய்தது.

என்ன தான் சுயமாக சில விடயங்களை வெறுத்து புறந்தள்ள நினைத்தாலும் இயல்பாக அதை நடைமுறைப்படுத்துவதில் சில அசௌகரியங்கள் இருக்கவே செய்கின்றன என்பதை உணர்ந்திட, பெற்ற பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிளைளைகள் அருகில் இருப்பது போல ஒரு சுகம் வராது என எண்ணினாள். அப்போதுதான் ஒரு ஏக்கத்துடன் கோகிலாவினது மனது தவிப்புக்குள்ளாகி தத்தளித்தது அவளுக்குப் புரிந்தது.

முற்றும்.

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS
சமூக உளவளம் பேணும் தொடர் - 125
Psychosocial Educational Series - 125

VASANTHAM HEALTH & WELLNESS CENTRE

இதயமும் மூளையும்
Heart and Brain


November 2, 2026 (Monday)
Canada EST: 7:00pm - 9:00 pm
November 3, 2026 (Tuesday)
U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 4:30a.m - 6:30am

Zoom ID: 918 584 6813
No Password Dial by Phone:
647 374 4685
Phone: 647 558 0588



Dr. Sasithary Eesan
Family Physician
Health Check Clinic, Scarborough

மாரடைப்பையும் பக்கவாதத்தையும்
தடுக்கும் வழிமுறைகள்
Heart Attack and Storke Prevention



Please join the Community and Social Education Zoom Series of Vasantham on the 1st and 3rd Mondays

ஒவ்வொரு முதலாம் மூன்றாம் திங்கட்கிழமைகளில் எங்களுடைய சூம் தொடரில் இணைந்துகொள்ளுங்கள்



Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172

VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAM
VASANTHAM

647-374-4685
VASANTHAM.CA

(16 பக்கத் தொடர்ச்சி)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்ட "உண்மை–நீதி"

அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிட்ட தொற்று நோய், இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் உறுதிப்படுத்தும் வகையிலும் ஆதாரங்கள் எதனையும் அறிக்கையில் சமர்ப்பிக்காமல், முடிவுக்கு வர முடியாது என்று கூறிக்கொண்டு, குறிப்பிடவிடயத்தை அழுத்தி கூறும் வகையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அவரின் நிகழ்ச்சி நிரல் என்ன? இதற்கு முன்னர் 3 அறிக்கைகளை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தனது சொந்த முடிவுகளை அவற்றில் குறிப்பிட்டுள்ளார். முதலாவது அறிக்கையில் இயற்கைக்கு மாறான மரணங்கள் நிகழந்த பாரிய புதைகுழி என்று குறிப்பிட்டிருந்தார். இந்த அறிக்கையில் மனிதப்புதைகுழி என்ற வார்த்தையையே அவர் பயன்படுத்தாதது ஏன்?

செம்மணி பகுதி மனிதப் புதைகுழி மனித உரிமை மீறல்கள் மற்றும் இராணுவ அத்துமீறல்களோடு தொடர்புடையது என்பது ஏற்கனவே நீதிமன்ற வழக்குகள் மூலம் உலகறிந்த நிலையில், அதனை தொற்று நோய் மரணங்கள் அல்லது இயற்கை அனர்த்த மரணங்கள் என திசைதிருப்ப முயல்வது அறிவியல் பூர்வமான தடயவியல் நடைமுறைகளுக்கு அப்பாற்பட்டது ராஜ் சோமதேவ இலங்கை அரசாங்கத்தையும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவத்தினரையும் காப்பாற்றும் நோக்கில் "அரசின் கைக்கூலியாக" செயல்படுகிறார் என்ற குற்றச்சாட்டுகள் பகிரங்கமாகக முன்வைக்கப்பட்டுள்ளன. செம்மணியில் நடைபெற்ற இன அழிப்பு மற்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கான ஆதாரங்களை மறைத்து, வரலாற்று உண்மைகளைப் பொய்ப்பிக்கும் வகையிலான அறிக்கைகளை நீதிமன்றத்தில் அவர் சமர்ப்பித்துள்ளார் என்று தமிழ் அரசியல் தரப்புகளால் குற்றம் சாட்டப்படுகிறது.

சோமதேவவின் அறிக்கைக்கு பதிலாகும் சோமரத்னவின் வாக்கு மூலம்

ராஜ் சோமதேவ செம்மணி மனிதப்புதைகுழியில் இருப்பது தொற்று நோய்கள், இயற்கை அனர்த்தங்களினால் இறந்தவர்களின் மனித எச்சங்கள் என அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில் மாணவி கிருஷாந்தி படுகொலை குற்றவாளியான இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச அப்போது நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலம் இப்போது ராஜ் சோம தேவவினால் சமர்பிக்கப்பட்டுள்ள அறிக் கை எந்தளவுக்கு திரிவுபடுத்தப்பட்டது, எந்தளவுக்கு உண்மைகளை மூடி மறைக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது அந்த வாக்கு மூலத்திலிருந்து சில பகுதிளைப்பார்ப்போம்.

"நான் அரியாலை முகாமில் சிவில் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டிருந்தேன். அந்தக் காலத்தில் நான் கப்டன் லலித் ஹேவாவின் கீழ் பணியாற்றினேன். குடும்பங்களின் பெயர்களையும் இளைஞர்களின் பெயர்களையும் பதிவு செய்வதே எனது பணியாக இருந்தது. நாங்கள் இரண்டு பட்டியல்களைத் தயாரிப்போம். ஒருமுறை, கப்டன் லலித் ஹேவாவும் லெப்டினன்ட் விஜேசிறிவர்தனவும் வேறொரு பிரிவிலிருந்து படையினரைக் கொண்டுவந்து என்னுடைய மேற்பார்வையின் கீழ் பணியாற்றச் செய்தனர்.

புலிச் சந்தேகநபர்கள் என அவர்கள் குறிப்பிட்ட நபர்களின் பட்டியல் எங்களிடம் வழங்கப்பட்டது. அந்தச் சந்தேகநபர்கள் வசித்த இடங்களைக் காட்டுமாறு என்னிடம் கேட்கப்பட்டது. அதன் பின்னர், சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேஜர் வீரக்கொடியும் மேஜர் குணசேகரவும் சிலரை அழைத்து வந்து, புலி அமைப்பின் இரண்டு தகவலாளர்கள் முன்னிலையில் நிறுத்தினர். அந்த நபர்களில் புலிச் சந்தேகநபர்கள் யார் என்பதை அடையாளம் காட்டுமாறு தகவலாளர்களிடம் கேட்கப்பட்டது. அவர்கள் அடையாளம் காட்டியவர்கள் ஏனையவர்களிடமிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டனர். சுமார் 50 பேர் அடையாளம் காணப்பட்டு, புகைப்படம் எடுக்கப்பட்டனர்.

அரியாலையில் மக்கள் எவ்வாறு கைது செய்யப்பட்டனர், கொல்லப்பட்டனர், புதைக்கப்பட்டனர் என்பதை என்னால் காட்ட முடியும். ஆரம்பத்தில், சிலர் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டுவரப்பட்டு, ஜெயா கட்டிடத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். வேறு சிலர் ஒரு பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டனர்.இவ்வாறு செய்யுமாறு உத்தரவிட்டவர்கள் கப்டன் லலித் ஹேவா, லெப்டினன்ட் விஜேசிறிவர்தன மற்றும் லெப்டினன்ட் துடுகலா ஆகியோராவர்.

அரசாங்க ஊழியரான செல்வரத்தினம் என்பவரைக் கைது செய்ததிலும் அவர்களே ஈடுபட்டிருந்தனர். அவர் முகாமுக்குக் கொண்டுவரப்பட்டார். மறுநாள் அவரது மனைவி வந்து, அவரைப் பார்த்தீர்களா என்று என்னிடம் கேட்டார். அப்போது என்னிடம் அதற்குப் பதில் இருக்கவில்லை. அந்த முகாமில் மக்களைச் சித்திரவதை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு கட்டிடம் இருந்தது. அந்தக் கட்டடத்தை இப்போதும் என்னால் உங்களுக்குக் காட்ட முடியும். நான் முகாமுக்குச் சென்றபோது, அந்தக் கட்டடத்தில் 25 பேர் இருந்தனர். அவர்களில் செல்வரத்தினமும் இருந்தார். அவரது கால்கள் கட்டப்பட்டிருந்தன. தனக்குப் புலிகள் அமைப்புடன் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறி, அவர் என்னிடம் கெஞ்சினார். நான் கப்டன் ஹேவாவிடம் செல்வரத்தினத்தை விடுவிக்குமாறு கேட்டேன். அதற்கு அவர் சம்மதித்தார். ஆனால், அன்றிரவே செல்வரத்தினம் கொல்லப்பட்டார். மறுநாள் நான் மீண்டும் அங்கு சென்றபோது, மேலும் 10 சடலங்களைக் கண்டேன்.

நான் ஜெயா கட்டடத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது, உதயகுமார் என்ற மற்றொரு நபர் கைது செய்யப்பட்டார். அவரது குடும்பத்தினர் அவரை விடுவிக்குமாறு என்னிடம் கெஞ்சினர். நான் சென்று கப்டன் ஜயவர்தனவிடம் அவரை விடுவிக்குமாறு கேட்டேன். அன்று பிற்பகல் அவர் மற்றொரு முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டார். நான் அங்கு சென்றபோது, அந்த நபரை விடுவிக்குமாறு கோரும் வானொலிச் செய்தி ஒன்று வந்தது. ஆனால், அவர் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டிருந்தார். அவரது உடல் கத்திகளால் வெட்டப்பட்டிருந்தது. அவரை விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டது. பின்னர் அவர் கொல்லப்பட்டார். சித்திரவதைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் எவை என்பதை நான் நன்கு அறிவேன். அந்தக் கட்டடத்தில் அவற்றை என்னால் உங்களுக்குக் காட்ட முடியும்.

ஒரு நாள், கப்டன் லலித் ஹேவா என்னிடம் ஒரு மண்வெட்டியைக் கொண்டுவருமாறு கேட்டார். நான் அங்கு சென்றபோது, ஆடைகள் எதுவுமின்றி இருந்த ஒரு பெண்ணுடன் கப்டன் ஹேவா இருந்தார். அந்தப் பெண்ணும் அவரது கணவரும் முன்னதாகவே முகாமுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தனர். லலித் ஹேவா அந்தப் பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார். பின்னர், நான் கொண்டுவந்த மண்வெட்டியாலும் சில கம்பிகளாலும் அந்தப் பெண்ணையும் அவரது கணவரையும் தாக்கினார். அவர்கள் இருவரும் உயிரிழந்தனர். அவர்களின் உடல்களை அங்கேயே புதைக்க அவர் முயன்றார். ஆனால், அது முடியவில்லை. பின்னர், அந்தச் சடலங்கள் செம்மணிக்குக் கொண்டுசெல்லப்பட்டன. அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தை என்னால் காட்ட முடியும். அரியாலையில் ஏராளமானோர் காணாமல் போயுள்ளனர். எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் என்பதை என்னால் கூற முடியும். எத்தனை பேர் புதைக்கப்பட்டனர் என்பதும் எனக்குத் தெரியும். கிருஷாந்தி குமாரசுவாமியைக் கொலை செய்ததாக நான் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தாலும், அந்தக் கொலையை நான் செய்யவில்லை. அவரது உடலை நான் புதைத்தேன். ஆனால், அப்போது அது கிருஷாந்தி குமாரசுவாமியின் உடல் என்பது எனக்குத் தெரியாது.

தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட எனது நான்கு சக ஊழியர்களும் நானும் வாக்குமூலங்களை அளித்துள்ளோம். செம்மணியில் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ள 10 இடங்களை என்னால் காட்ட முடியும். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பெரேராவால் 5 இடங்களைக் காட்ட முடியும். டி.எம். ஜயதிலக்க என்பவரால் ஒரு கோவிலுக்கு அருகில் பலர் புதைக்கப்பட்ட இடத்தைக் காட்ட முடியும். ஜெயா கட்டிடத்தின் பின்புறத்திலும் ஓர் இடம் உள்ளது. ரவி என்பவருக்குச் சொந்தமான ஒரு வாகனப் பழுதுபார்க்கும் பட்டறையில் பணியாற்றிய இரண்டு தொழிலாளர்கள் பிரதான முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டதை நான் அறிவேன். அவர்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் உடல்கள் எங்கு புதைக்கப்பட்டன என்பதும் எனக்குத் தெரியும்."

செம்மணிப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள், முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்டவர்கள் மற்றும் அவர்களைப் புதைத்த விபரங்கள் யாவற்றையும் சர்வதேச விசாரணையின் ஊடாகவே தாம் முழுமையாக வெளிப்படுத்தத் தயார் என சிறையில் உள்ள லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச நிபந்தனை விதித்துள்ளார். இவ்வாறான உண்மைகளைத் வெளிப்படுத்தத் தன் கணவர் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டு, அவரது மனைவி எஸ்.சி. விஜேவிக்ரம ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். ஆனால் கடந்த அரசுகளைப்போன்றே அநுரகுமார அரசும் சர்வதேச விசாரணபொறிமுறைகளை நிராகரித்து உண்மைகளை மூடி மறைத்து இராணுவத்தினரை பாதுகாக்கவே முற்படுகின்றது என்பதற்கும் இந்த செம்மணி மனிதப்புதைகுழியே சாட்சியாகவுள்ளதுடன் இந்த நாட்டில் நடக்கும் எந்தவிதமான உள்ளூர் விசாரணைப்பொறிமுறைகளும் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தராது என்பதற்கு ராஜ் சோமதேவவும் சாட்சியாகவுள்ளார்.

கனடாவில் எமது தமிழ், பேச்சு மொழியாக மட்டும் இல்லாது எழுத்து மொழியாகவும் திகழ்வதை உறுதி செய்வதே "எமது"ரொறன்ரோ தமிழ்ப் புத்தக அரங்கம்"

ரொறன்ரோ தமிழ்ப் புத்தக அரங்கம்" ஆரம்ப வைபவத்தில் சிறப்புரையாற்றிய கனடிய தமிழர் பேரவையின் இயக்குனர் சபை உறுப்பினர் சுகிர்தன் கணபதி தெரிவிப்பு!



"எமது தமிழினம் சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக இந்த மண்ணில் வாழ்ந்து வரும் பாக்கியத்தை பெற்றுள்ளது. அதே வேளையில் கனடாவில் எமது தமிழ், பேச்சு மொழியாக இருப்பதை உணர்ந்து நாம் திருப்தியடைந்தோம். எனினும் எமது மொழியை பேச்சு மொழியாக மாத்திரம் கொள்ளாது எழுத்து மற்றும் வாசிப்பு மொழியாகவும் திகழ்வதை உறுதி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இங்கு சில தமிழ் அமைப்புக்களோடு நாம் நடத்திய கலந்துரையாடல்களின் போது நாம் உணர்ந்தோம் உரையாடினோம். அந்த கலந்துரையாடல்களின் தீர்க்கமான முடிவின் அடிப்படையிலேயே நாம் நடத்துகின்ற "ரொறன்ரோ தமிழ்ப் புத்தக அரங்கம்" இன்று இங்கு ஆரம்பமாகின்றது. எனவே எமது மொழியையும் வாசிப்பையும் கொண்டாடும் ஒரு களமாகக் கொண்டாடுவோம்."

இவ்வாறு, "ரொறன்ரோ தமிழ்ப் புத்தக அரங்கம்" ஆரம்ப வைபவத்தில் சிறப்புரையாற்றிய கனடிய தமிழர் பேரவையின் இயக்குனர் சபை உறுப்பினர் சுகிர்தன் கணபதி தெரிவித்தார்.

கடந்த 24ம் திகதி சனிக்கிழமையன்று மதியம் ஸ்காபுறோவில் அமைந்துள்ள மல்வேர்ன் சமூக மையத்தின் அரங்கில் ஆரம்பமான "ரொறன்ரோ தமிழ்ப் புத்தக அரங்கம்" முதல்நாள் வைபவத்தை கனடிய தமிழர் பேரவையின் முன்னாள் தலைவர் சிவன் இளங்கோ அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சுகிர்தன் கணபதி அவர்கள் தனது உரையில் "நாம் எமது மொழியின் வளர்ச்சியையும் அதன் இருப்பையும் உறுதி செய்யும் வகையில் எமது இனத்தின் மத்தியில் ஒற்றுமையை உறுதி செய்ய வேண்டும். அதற்கு எமது மொழியைப் பேசுகின்ற அமைப்புக்களோடும் தனி நபர்களோடும் தோழமையை வளர்த்து கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலேயே கனடாவில் இயங்கிவரும் "ஐக்கிய இலங்கை முஸ்லிம் பேரவை" யோடு இணைந்து இவ்வருடத்தின் ரொறன்ரோ புத்தக அரங்கத்தை இரண்டு நாட்கள் நடத்துகின்றோம்" என்றார்.:.

அங்கு உரையாற்றிய ஐக்கிய இலங்கை முஸ்லிம் பேரவை" அமைப்பின் தலைவர் அயுப் அஸ்மின் அவர்கள் தனது உரையில் " நாம் எமது மொழியின் பெருமையையும் இனிமையையும் பேசும் போது அனுபவிக்கின்றோம். எனவே எமது மொழியின் செழுமையைப் பாதுகாக்க புத்தகங்களை வாசிப்பதையும் எழுத்தாளர்களையும் புத்தக வெளயீட்டாளர்களை ஒரே இடத்தில் சந்திக்கச் செய்ய வேண்டும். அவர்களை கொண்டாடியும் பாராட்டியும் மகிழ்விக்க வேண்டும். இதனால் நாம் மேலும் ஒரு பண்பட்ட சமூகமாக எழுச்சியுற வாய்ப்புக்கள் பெறுகும்" என்றார்.

தொடர்ந்து கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் எழுத்தாளர் தாம் சிவதாசன், சமீம் முகமட் உட்பட பலர் உரையாற்றினார்கள்.'

தொடர்ந்து இரண்டு நாட்களும் நூல் அறிமுகம் மற்றும் மற்றும் விமர்சன அரங்கு என பல பயனுள்ள் சந்திப்புக்கள் இடம்பெற்றன. பிரபல எழுத்தாளர் கே. டானியல் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூல் வெளியீடு மற்றும் ஆய்வு உரைகள் ஆகியன இடம்பெற்றன. அத்துடன் இங்கிலாந்தில் வாழும் எழுத்தாளர் சுப்பிரமணியனம் லோகநாதன் அவர்கள் எழுதிய "முதுமை வாழ்வின் முழுமை" என்னும் நூலின் அறிமுக விழா எழுத்தாளரும் திறனாய்வாளருமான திரு சண்முகலிங்கம் தலைமை தாங்கினார். நூலின் பிரதிகளை பல வர்த்தக நண்பர்களும் ஆர்வலர்களும் பணம் கொடுத்துப் பெற்றுச் சென்றனர். இவ்வாறான மேலும் பல நூல்களும் அங்கு அறிமுகம் செய்யப்பெற்றும் விற்பனை செய்யப்பெற்றும் வாசகர்களைச் சென்றடைய இவ்வாண்டின் "ரொறன்ரோ புத்தக அரங்கம்" பக்கபலமாக விளங்கிய என்றால் அது மிகையாகாது.

சத்தியன்


இலங்கை செய்திகள் Sri Lanka News

பேராசிரியர் ராஜ் சோமதேவவின் செம்மணி விளக்கங்கள் குறித்து தமிழ் மக்களுக்கு நம்பகத்தன்மை இல்லை!

சுயாதீன ஆய்வு கோரி உப்சாலா பல்கலைக்கழகத்திற்கு அமெரிக்காவில் இயங்கும் "தமிழர் புலம்பெயர் அமைப்பு" அனுப்புள்ள கடிதம்



பேராசிரியர் ராஜ் சோமதேவவின் செம்மணி விளக்கங்கள் குறித்து சுயாதீன ஆய்வு கோரி உப்சாலா பல்கலைக்கழகத்திற்கு அமெரிக்கத் தமிழர் புலம்பெயர் அமைப்பு கடிதம் உண்மையையும் நீதியையும் தேடும் குடும்பங்களுக்காக கல்விசார் ஆய்வு, வெளிப்படைத்தன்மை மற்றும் சுயாதீன தடயவியல் விசாரணை கோரிக்கை நியூயோர்க், அமெரிக்கா - இலங்கையின் யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாகப் பேராசிரியர் ராஜ் சோமதேவ முன்வைத்துள்ள விளக்கங்களைச் சுயாதீன கல்விசார் ஆய்வுக்கு உட்படுத்துமாறு கோரி, அவர் முனைவர் பட்டம் பெற்ற சுவீடனின் உப்சாலா பல்கலைக்கழகத்தின் தொல்லியல், பண்டைய வரலாறு மற்றும் மரபுரிமைப் பாதுகாப்புத் துறைக்கு அமெரிக்கத் தமிழர் புலம்பெயர் அமைப்பு கடிதம் எழுதியுள்ளது.



அவரது அறிக்கை, அதற்கான ஆதாரங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட ஆய்வு முறைகளை ஆராய்வதற்கான மதிப்பீட்டுக்கு ஏற்பாடு செய்யுமாறு அல்லது தகுதிவாய்ந்த சுயாதீன நிபுணர்களைப் பரிந்துரைக்குமாறு அக்கடிதம் பல்கலைக்கழகத்தைக் கேட்டுக்கொள்கிறது.

செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் அவை புதைக்கப்பட்ட சூழலின் சில அம்சங்களைத் தொற்றுநோய், பண்பாட்டு வழக்கங்கள் அல்லது இயற்கைப் பேரழிவு விளக்கக்கூடும் என யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டதாகக் கூறப்படும் கருத்துகள் தொடர்பாகவே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

"காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களைத் தேடும் குடும்பங்களுக்கு, சரிபார்க்கக்கூடிய ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்பட்ட விளக்கங்கள் வழங்கப்பட வேண்டும். ஒரு சாத்தியக்கூறு என்பது உறுதிசெய்யப்பட்ட ஆய்வு முடிவிலிருந்து தெளிவாக வேறுபடுத்தப்பட வேண்டும்" என அமெரிக்கத் தமிழர் புலம்பெயர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விளக்கங்களை உறுதிப்படுத்தும் தீர்மானமான தடயவியல் ஆதாரங்களையோ, மனித எச்சங்களுடன் தொடர்புபடுத்தக்கூடிய குறிப்பிட்ட தொற்றுநோய் அல்லது பேரழிவை அடையாளப்படுத்தும் ஆவணங்களையோ தாம் இதுவரை காணவில்லை என அமைப்பு தெரிவித்துள்ளது. எனினும், இதனால் முழுமையான அறிக்கையில் அத்தகைய ஆதாரங்கள் இல்லை என்று முடிவுசெய்ய முடியாது என்பதையும் அமைப்பு ஏற்றுக்கொள்கிறது. ஆகவே, உரிய நடைமுறைகளின் ஊடாக அறிக்கையையும் அதற்கான ஆதார ஆவணங்களையும் அணுகுவதற்கும், அவற்றைச் சுயாதீனமாக ஆய்வு செய்வதற்கும் அது அழைப்பு விடுக்கிறது.

சுயாதீன ஆய்வுக்கான கேள்விகள்
பின்வரும் விடயங்களை ஆராயுமாறு கடிதம் கோருகிறது:

- அறிவியல் ஆதாரங்கள்: தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவு என்ற விளக்கத்தை ஆதரிக்கும் கண்டுபிடிப்புகள் என்ன? குறிப்பாக, சிறுவர்களின் பாடசாலைப் பைகள், தனிப்பட்ட உடைமைகள் மற்றும் எலும்புக்கூடுகளில் காயங்கள் காணப்படுவதாக வெளியாகியுள்ள தகவல்கள் சுயாதீனமாகச் சரிபார்க்கப்பட்டு மதிப்பிடப்பட வேண்டிய நிலையில், அவை எவ்வாறு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன?
- வரலாற்றுப் பொருத்தம்: குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வு ஏதேனும் அடையாளம் காணப்பட்டுள்ளதா? அதன் காலப்பகுதி, சுயாதீனமாக உறுதிசெய்யப்பட்ட புதைகுழிகளின் காலத்துடன் பொருந்துகிறதா?
- அடக்க முறைகள் குறித்த விளக்கம்: முறைப்படியான இறுதிச்சடங்கு அடக்கங்கள் என்ற விளக்கத்திற்கு என்ன ஆதாரம் உள்ளது? நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் ஏனைய சட்டவிரோதக் கொலைகள் உள்ளிட்ட மாற்று விளக்கங்கள் எவ்வாறு மதிப்பிடப்பட்டன?
-நிபுணர்களின் பங்களிப்பு: எந்த முடிவுகளுக்குத் தடயவியல் நோயியலாளர்கள், மானிடவியலாளர்கள் அல்லது பிற சுயாதீன நிபுணர்களின் மதிப்பீடு தேவைப்படுகிறது?
- உறுதியின்மை: நேரடியாகக் கண்டறியப்பட்ட விடயங்கள், ஆரம்பநிலைக் கருதுகோள்கள் மற்றும் ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்பட்ட முடிவுகள் ஆகியவற்றை அறிக்கை தெளிவாக வேறுபடுத்துகிறதா?

"ஒழுங்கமைக்கப்பட்ட அல்லது முறைப்படியான அடக்கங்கள் என்ற விளக்கம், அந்த நபர்கள் எவ்வாறு உயிரிழந்தார்கள் என்பதைக் கண்டறியும் விசாரணைக்கு மாற்றாக அமையக்கூடாது. சட்டவிரோதக் கொலைகள் உட்பட, சாத்தியமான ஒவ்வொரு விளக்கமும் ஆதாரங்களின் அடிப்படையில் பாரபட்சமின்றி ஆராயப்பட வேண்டும்" என அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கல்விசார் ஆய்வும் வெளிப்படைத்தன்மையும்

இந்தக் கோரிக்கை பேராசிரியர் சோமதேவவின் நோக்கங்களை முன்கூட்டியே தீர்மானிப்பதோ, அவர் முறைகேட்டில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டை முன்வைப்பதோ அல்ல என அமெரிக்கத் தமிழர் புலம்பெயர் அமைப்பு வலியுறுத்துகிறது. நம்பகமான ஆய்வு முழு-மையான ஆவணங்களையும் பரிசீலிப்பதுடன், அவர் தனது ஆய்வு முறைகளை விளக்கவும் எழுப்பப்பட்டுள்ள கவலைகளுக்குப் பதிலளிக்கவும் வாய்ப்பளிக்க வேண்டும்.

ஒருவருக்கு உப்சாலா பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் வழங்கியிருப்பது, அவரது பிற்காலத் தொழில்சார் பணிகளைப் பல்கலைக்கழகம் அங்கீகரிக்கிறது என்று பொருள்படாது என்பதையும் அமைப்பு ஏற்றுக்கொள்கிறது. முன்வைக்கப்பட்ட விளக்கங்களின் அறிவியல் அடிப்படையை மதிப்பிடுவதற்கும், மேலும் தேவைப்படும் விசாரணைகளை அடையாளம் காண்பதற்கும் கல்விசார் உதவியையும் சுயாதீன நிபுணத்துவத்தையுமே இக்கடிதம் கோருகிறது.

அனைத்து மனித எச்சங்கள், பதிவுகள் மற்றும் தொடர்புடைய ஆதாரங்களைப் பாதுகாக்கவும், மேலும் சுயாதீன சர்வதேச தடயவியல் ஆய்வுகளுக்கு வழிவகுக்கவும், விசாரணை குறித்த அர்த்தமுள்ள தகவல்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்யவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அமெரிக்கத் தமிழர் புலம்பெயர் அமைப்பு வலியுறுத்துகிறது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களைத் தேடும் தாய்மார்களுடனும் குடும்பங்களுடனும் ஒற்றுமையாக நின்று, உண்மையைக் கண்டறிவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் பாதுகாக்கும் முழுமையான விசாரணைக்கு அமைப்பு அழைப்பு விடுக்கிறது.

"செம்மணியில் புதைக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு, ஆதாரங்கள் எங்கு வழிநடத்தினாலும் அவற்றைப் பின்பற்றும் வெளிப்படையான, பாரபட்சமற்ற விசாரணை கிடைக்க வேண்டும். அறிவியல் ரீதியான உறுதியின்மைகள் கடுமையான ஆய்வின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் உண்மையைத் தேடும் முயற்சி தொடர்ந்து திறந்த நிலையில் இருக்க வேண்டும்."

- அமெரிக்கத் தமிழர் புலம்பெயர் அமைப்பு (US Tamil Diaspora)

JOIN US FOR THE
Advancing Mental Health Equity for Tamil Communities
PARNERSHIP TOWN HALL



Saturday, October 31 1–3 p.m.
Scarborough Health Network–Centenary Hospital
Dr. Bruce Johnston Conference Room, 3rd floor
2867 Ellesmere Rd., Scarborough

Jaffna Medical Faculty Overseas Alumni Canada is hosting a town hall in partnership with Scarborough Health Network. This event brings together physicians, healthcare professionals serving Tamil communities, community organizations, and leaders to foster dialogue, strengthen connections, and advance mental health equity for Tamil communities.

Together, participants will explore opportunities to improve awareness, access, system navigation, and culturally responsive care.

WHAT TO EXPECT

- Presentation of a report created in partnership with Ontario Health that highlights current status, priorities, and next steps
- Perspectives from physicians, community leaders, and invited guests
- Moderated discussion and question period
- Informal networking reception with light refreshments

Register by Tuesday, October 27, 2026
Scan the QR code or visit tinyurl.com/tamil-mental-health
For questions or more information, please contact
Dr. Sri Navaratnam at info@jmfoa.ca

SHN SCARBOROUGH HEALTH NETWORK
Love, Scarborough

இவ்வார ராசிபலன்

30-10-2026 வெள்ளி தொடக்கம் 05-11-2026 வியாழன் வரையும்


ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்
ஸ்தாபகர்
ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்
40.வெண்பாக்கம் கிராமம், சிங்கப்பெருமாள் கோவில்ரயில் வேகேட் (வழி),
வெங்கடாபுரம் (அஞ்சல்), செங்கல்பட்டு (மா)- 603204.
தொடர்புக்கு WhatsApp: +917788994666



மேஷம்: பொருளாதார வசதி நல்லபடியே காணப்படுகிறது. கூடுதல் செலவுகள் ஏற்பட்டாலும் உங்களால் சமாளித்துவிட முடியும். குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும்போது பொறுமை மிக அவசியம். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிரச்னைகள் தீர்ந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். வாரப் பிற்பகுதியில் உடல் நலனில் கவனம் தேவை அலுவலகத்தில் சென்ற வாரம் போலவே பணிச்சுமை அதிகரிக்கவே செய்யும். ஆனால், சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வது ஆறுதலாக இருக்கும். வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். மற்றபடி வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் தரும் வாரம் இது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் எதிர்பாராத சலுகைகள் கிடைக்கும். மேஷ ராசிக்காரர்களே! இந்த வாரம் உங்களுக்கு அதிர்ஷ்ட வாரம். செவ்வாய் உங்கள் ராசிக்கு சாதகமாக இருக்கிறார். பண வரவு நல்லா இருக்கும். எதிர்பாராத பணம் கைக்கு வரும். கடன் தீரும். வேலையில் பதவி உயர்வு, பாராட்டு கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்பு வரும். தொழில் செய்பவர்களுக்கு பெரிய லாபம் கிடைக்கும். புதிய தொடர்பு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு வரன் அமையும். காதல் விஷயத்தில் வெற்றி கிடைக்கும். உடல் நலம் சீராக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.
அதிர்ஷ்ட எண்: 9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், வெள்ளி.



ரிஷபம்: வருமானத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகையால் வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் செய்தி கிடைக்கும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும் வேலைக்கு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். பணியின் காரணமாக சிலர் வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். நிர்வாகத்தினரின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். சக வியாபாரிகளால் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் இருப்பதால் சிரமம் எதுவும் இருக்காது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை குறையும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும் வேலையில் மேலதிகாரி ஆதரவு கிடைக்கும். புதிய பொறுப்பு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர் அதிகரிப்பார்கள். லாபம் நல்லா இருக்கும்.குடும்பத்தில் சந்தோஷம் கூடும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். திருமண விஷயத்தில் நல்ல முன்னேற்றம். காதலில் இருப்பவர்களுக்கு பெற்றோர் சம்மதம் கிடைக்கும்.உடல் நலத்தில் சிறு சோர்வு இருக்கும். சாப்பாட்டில் கவனம் தேவை. பயணத்தில் கவனம்.
அதிர்ஷ்ட எண்: 6. அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, பச்சை.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளிக்கிழமை.



மிதுனம்: பல வகைகளிலும் அனுகூலமான வாரமாக இருக்கும். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறை வேறும். உறவினர் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு மறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வழியில் எதிர்பாராத பொருள் வரவுக்கு வாய்ப்பு உண்டு. முக்கிய முடிவுகளை நன்கு யோசித்து எடுப்பது நல்லது அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் நீங்களே செய்வது நல்லது. அதிகாரிகளை அணுகும்போது பொறுமை அவசியம் வியாபாரத்தில் வழக்கமான நிலையே காணப்படும். வியாபாரத்தை விரிவுபடுத்த அல்லது வேறு இடத்துக்கு மாற்றும் முயற்சிகள் சற்று இழுபறியாக இருக்கும் என்பதால் பொறுமை அவசியம் குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு நிம்மதியான வாரம். வேலைக்குச் செல்லும் பெண்கள் அலுவலகத்தில் பணிகளைப் பொறுப்பாகச் செய்வது நல்லது. சக ஊழியர்களின் விஷயங்களில் தலையிடவேண்டாம் வேலையில் புதிய வாய்ப்பு தேடி வரும். பேச்சு திறமையால் பாராட்டு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தம் கிடைக்கும். வெளியூர் பயணம் லாபம் தரும்.குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். அவர்களின் படிப்பில் முன்னேற்றம். காதல் விஷயத்தில் சிறு கருத்து வேறுபாடு வரும், விட்டு கொடுங்கள்.உடல் நலம் நன்றாக இருக்கும். தூக்கம் சரியா இருக்கும். வண்டி வாகனத்தில் கவனம் தேவை.
அதிர்ஷ்ட எண்: 5. அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன்.



கடகம்: குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனஸ்தாபங்கள் நீங்கி சுமுக உறவு ஏற்படும். ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வீர்கள். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான அளவுக்கு பணம் இருக்கும். உறவினர்கள் உதவியுடன் திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். பிறருக்குக் கொடுத்த கடன் தொகை திரும்பக் கிடைக்கும் வாய்ப்பு உண்டு அலுவலகத்தில் பணிகளில் சற்று கூடுதல் கவனம் தேவைப்படும். சிறு தவறுகூட பெரிய சிக்கலை உண்டாக்கிவிட வாய்ப்பு உள்ளது. வியாபாரத்தில் பணியாளர்களால் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை மிக அவசியம். குடும்பத்தில் சற்று அமைதிக் குறைவான சம்பவங்கள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும் வேலையில் மேலதிகாரி பாராட்டு கிடைக்கும். பதவி உயர்வு வாய்ப்பு உண்டு. தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர் கிடைப்பார்கள். லாபம் அதிகரிக்கும்.குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். அம்மாவின் ஆசி கிடைக்கும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். குழந்தை பாக்கியம் எதிர்பார்ப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். உடல் நலத்தில் சளி, தலைவலி வரலாம், கவனம் தேவை. அதிக கோபம் வேண்டாம்.
அதிர்ஷ்ட எண்: 2. அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை.
அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.



சிம்மம்: குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் நிறைந்திருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சமாளிக்கும் அளவுக்குப் பணவரவு இருக்கும். வாரப் பிற்பகுதியில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். சிலருக்கு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். அதிகாரிகள் கண்டிப்பு காட்டினாலும் பொறுமை அவசியம் வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதல் உழைப்பு தேவை. சக வியாபாரிகளால் மறைமுகத் தொல்லைகள் ஏற்பட்டாலும், பாதிப்பு எதுவும் இருக்காது குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். கணவரின் அன்பும் ஆதரவும் உற்சாகமாக வைத்திருக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு சலுகைகள் கிடைக்கும் வேலையில் கவனமாக இருங்கள். சக ஊழியர்களிடம் பொறுமை தேவை. பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். தொழில் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்பு வரும், ஆனால் யோசித்து முடிவு எடுங்கள்.குடும்பத்தில் அமைதி காக்கவும். பேச்சில் கவனம் தேவை. கணவன் மனைவி சண்டை வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். பெற்றோர் ஆரோக்கியத்தில் கவனம். உடல் நலத்தில் கண் எரிச்சல், தலைவலி வரலாம். வெயிலில் அதிகம் அலைய வேண்டாம்.
அதிர்ஷ்ட எண்: 1. அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, தங்க நிறம்.
அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.



கன்னி: பணவரவு திருப்திகரமாக இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் சாத்தியம் உள்ளது. சகோதர வகையில் இருந்து வந்த கருத்துவேறுபாடுகளும் கசப்பு உணர்வுகளும் மாறி, சுமுகமான உறவு ஏற்படும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும். தாயாரின் உடல் நலனில் கவனம் செலுத்தவும் அலுவலகத்தில் கடுமையாக உழைத்தாலும் நல்ல பெயர் கிடைக்கும் என்று சொல்லமுடியாது. அலுவலகப்பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சிறிய தவறுகூட பாதிப்பை ஏற்படுத்தலாம் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பழைய கடன்கள் தீரும். பங்குதாரர்களால் தேவையான உதவி கிடைக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும் குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு சற்று சிரமமான வாரம் என்றே சொல்ல வேண்டும். வேலைக்குச் செல்லும் பெண்கள் வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும் வேலையில் உங்கள் திறமை வெளிப்படும். மேலதிகாரி பாராட்டுவார். புதிய பொறுப்பு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர் கிடைப்பார். குடும்பத்தில் சந்தோஷம் கூடும். பிள்ளைகளால் பெருமை. கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். திருமண பேச்சு வெற்றி அடையும். உடல் நலம் நன்றாக இருக்கும். வயிறு சம்பந்தமான பிரச்னை வரலாம், சாப்பாட்டில் கவனம் தேவை. மன அழுத்தம் குறையும்.
அதிர்ஷ்ட எண்: 5. அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்ட நாள்: புதன், சனி.



துலாம்: பண வரவு போதுமான அளவு இருக்கும். செலவுகளும் அளவாகவே இருக்கும். கணவன் - மனை விக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிரமமான நேரங்களில் நண்பர்கள் உதவி செய்வார்கள். பழைய கடன்களைத் தந்து முடிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை சுமுகமாக முடியும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். அரசாங்க வகையில் அனுகூலம் உண்டாகும் அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு இடமாற்றம், பதவி மாற்றம் கிடைக்கும் என்றாலும் அதனால் நன்மையே ஏற்படும் வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கி இணக்கமான சூழ்நிலை உண்டாகும் குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு திருப்திகரமான வாரம். வேலைக்குச் சென்று வரும் பெண்களுக்கு சற்று சோர்வு ஏற்படக்கூடும் பண வரவு நல்லா இருக்கும். நீண்ட நாள் பண பிரச்சனை தீரும். ஆடை, ஆபரணம் வாங்கும் யோகம். வேலையில் புதிய வாய்ப்பு வரும். பதவி உயர்வு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு பெரிய லாபம். கூட்டு தொழில் நல்லா இருக்கும். புதிய ஒப்பந்தம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன் மனைவி அன்பு கூடும். திருமணம் ஆகாதவர்களுக்கு நல்ல வரன் அமையும். காதல் விஷயத்தில் வெற்றி கிடைக்கும். உடல் நலம் சீராக இருக்கும். சரும பிரச்சனை இருந்தால் கவனம் தேவை.
அதிர்ஷ்ட எண்: 6. அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, இளம் நீலம்.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, சனி.

(தொடர்ச்சி 22 பக்கம்)

உலக செய்திகள் World News

மக்களின் தேவை அறிந்து அமைச்சர்கள் செயல்பட வேண்டுமென முதலமைச்சர் விஜய் உத்தரவு



மக்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தி செயல்பட வேண்டும் என முதலமைச்சர் விஜய் அமைச்சர்களுக்கு உத்தரவிட்டார். சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்-அமைச்சர் விஜய் தலைமையில் அமைச்சரவை கூட்டம் இன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில், தமிழ்நாட்டில் புதிதாக தொழில் தொடங்க உள்ள நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான முன்மொழிவுகள், விரிவாக்கம் செய்யப்பட உள்ள நிறுவனங்களுக்கு அனுமதி உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், மின்தடை விவகாரம் பெரிதாக உள்ளதால் பேட்டரி எரிசக்தி சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் முக்கிய முடிவுகள், அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள், தேர்தல் வாக்குறுதிகள் மற்றும் துறைவாரியான இலக்குகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் சட்டம் - ஒழுங்கு நிலவரம் தொடர்பாகவும் வருவாய்த் துறை சார்பாக ஏழை மக்களுக்கு பட்டா வழங்குவது, சமூக நீதி கணக்கெடுப்பு உள்ளிட்டவை குறித்தும் பேசப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், அமைச்சரவை கூட்டத்தில் முதல்-அமைச்சர் விஜய் 3 முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். அதன்படி, மக்களுக்கு என்ன தேவையோ அதற்குத்தான் அமைச்சர்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மக்களின் தேவை அறிந்து அமைச்சர்கள் அனைவரும் செயல்பட வேண்டும். மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் பிரச்சினை, சாலை வசதி தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்ற முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளார்.



அம்பாசமுத்திரம் இடைத்தேர்தலில் போட்டியிடப்போவதாக சீமான் அறிவிப்பு!

அம்பாசமுத்திரம் தொகுதி இடைத்தேர்தலில் தான் போட்டியிட உள்ளதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

சட்டசபை தேர்தலில் அதிமுக சார்பில் வெற்றிபெற்ற இசக்கி சுப்பையா, தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தார். இதனால் காலியாக உள்ள அம்பாசமுத்திரம் தொகுதியில் விரைவில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில், அம்பாசமுத்திரம் தொகுதி இடைத்தேர்தலில் தான் போட்டியிட உள்ளதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார். நெல்லையில் சீமான் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது இது தொடர்பாக அவர் பேசியதாவது: இடைத்தேர்தல் நடைபெறவுள்ள 5 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி போட்டியிடும். அம்பாசமுத்திரம் இடைத்தேர்தலில் நான் போட்டியிட உள்ளேன். என்னை பார்த்து தவெகவினர் ஏன் பயப்படுகின்றனர்? எல்லா சாதிக்குமான பொது வேட்பாளர் நான். சொந்த பந்தம் என்று பார்த்தால் நான் தமிழ்நாட்டில் எந்த தொகுதியிலும் போட்டியிட முடியாது. உறவுகள் வேறு, அரசியல் நிலைப்பாடுகள் என்பது வேறு. நான் எப்போதுமே பொது வேட்பாளர்தான் என்றார்.

"திமுகவினர் மீண்டும் ஊழல் செய்வதிலிருந்து சோர மாட்டார்கள்" என்ற ஆர்.எஸ்.பாரதியின் திமிர் அறிவிப்பு!

திமுகவினர் மீது எத்தனை வழக்குகள் போட்டாலும் சோர்ந்துவிட மாட்டார்களென தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கூறியுள்ளார். இது குறித்து அவர் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில், தவெக அரசில் காவல் துறையை சட்டம் ஒழுங்கு காப்பாற்றுவதற்கு பொதுமக்களை காப்பாற்றுவதற்கு பயன்படுத்தாமல், சிறையில் இருக்கக்கூடிய கைதிகளுக்கு கூட பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது. எனினும் திமுக வினர் மீண்டும் ஆட்சிக்கு வந்து ஊழல் செய்தவதிலிருந்து பின்வாங்க மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.



4வது ராக்கெட்டில் மனிதரை விண்ணுக்கு அனுப்பும் திட்டம் தொடர்பாக இஸ்ரோ தலைவர் அறிவிப்பு!

4-வது ராக்கெட்டில் மனிதரை விண்ணுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளதென இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவித்து உள்ளார். ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலுள்ள 2-வது ஏவுதளத்தில் இருந்து வெள்ளிக்கிழமை இரவு 11.51 மணிக்கு ஜி.எஸ்.எல்.வி.-எப்18 ராக்கெட் விண்ணில் ஏவப்படுகிறது. இதில் வழிகாட்டுதல் சேவைக்காக என்.வி.எஸ்-03 செயற்கைக்கோள் பயணிக்க இருக்கிறது. ஜி.எஸ்.எல்.வி. வகை ராக்கெட்டுகளுக்கான அதிகாரப்பூர்வ கவுண்ட்டவுன், ஏவுவதற்கு சுமார் 24 அல்லது 26 மணி நேரத்திற்கு முன்பு தொடங்கும்.

அந்த வகையில், இந்த ராக்கெட்டுக்கான கவுண்ட்டவுன் இன்று இரவு அல்லது நாளை (வெள்ளிக்கிழமை) அதிகாலையில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) விஞ்ஞானிகள் விண்ணில் உள்ள கண்" என்று அழைக்கும் "ஈ.ஓ.எஸ்-05" செயற்கைக்கோள், இந்தியாவின் முதல் புவி ஒத்திசைவு பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளாகும். இந்த செயற்கைக்கோள் ஜி.எஸ்.எல்.வி எப்-17 ராக்கெட் மூலம் கடந்த செப்டம்பர் 8-ந்தேதி புவி-ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

தற்போது அங்கிருந்து படங்களை அனுப்பத்தொடங்கியுள்ளது. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கிரையோஜெனிக் என்ஜினை கொண்ட இந்த ஜி.எஸ்.எல்.வி மார்க்-2 ரக ராக்கெட்டுகள், கடந்த 2021-ம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 6 முறை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனையொட்டி, இஸ்ரோ தலைவர் நாராயணன் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வழிபாடு செய்தார். இதன்பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், ககன்யான் திட்டத்தின் முதல் ராக்கெட் இந்த ஆண்டே விண்ணில் செலுத்தப்படும் என்று கூறினார். முதலில் 3 ஆளில்லா ராக்கெட்டுகள் ஏவப்பட்டு, அவற்றிலிருந்து கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் 4-வது ராக்கெட்டில் மனிதர் விண்ணுக்கு அனுப்பப்படுவார் என்றும் கூறினார்.

கம்போடியாவில் அமெரிக்க சொகுசு கப்பல் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதால் 200 பயணிகள் தவிப்பு



கம்போடியாவில் அமெரிக்க சொகுசு கப்பலின் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதால் 200 பயணிகள் கம்போடியா துறைமுகத்தில் தவித்து வருகின்றனர். அமெரிக்காவின் புளோரிடா நிறுவனத்துக்கு சொந்தமான "ஒடிசி" என்ற சொகுசு கப்பல், உலகை சுற்றி வர 3 ஆண்டு காலப் பயணத்தை மேற்கொண்டிருந்தது. இதற்காகப் பயணிகள் தங்களின் ஆயுட்காலச் சேமிப்பை முதலீடு செய்து அந்த கப்பலிலேயே தங்கி வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில், ஆசியப் பகுதியில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக கச்சா எண்ணெய் விலை தாறுமாறாக உயர்ந்தது. இதனால் ஒரு அறைக்கான மாதாந்திர எரிபொருள் செலவு சுமார் ரூ.1½ லட்சத்தில் இருந்து (1,800 டாலர்) ரூ.7 லட்சம் வரை (8,000 டாலர்) எகிறியது. இந்த நஷ்டத்தை சமாளிக்க முடியாமல், கம்போடியத் துறைமுகத்தில் வைத்து தனது சேவையை திடீரென நிறுத்துவதாக கப்பல் நிறுவனம் அறிவித்தது. இதன் காரணமாக கப்பலில் தங்கியிருந்த பயணிகள் வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதனால் 15 நாடுகளைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட பயணிகள், அடுத்ததாக எங்குச் செல்வது என்று தெரியாமல் கம்போடியத் துறைமுகத்தில் தவித்து வருகின்றனர்.

நடுவானில் துணிச்சலுடன் செயற்பட்ட இந்திய விமானிக்கு ஐக்கிய அரபு உயரிய விருது வழங்கி கௌரவித்துள்ளது

நடுவானில் சக துணை விமானியின் கொடூர தாக்குதலையும் மீறி, துணிச்சலுடன் செயல்பட்டு 174 பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய இந்திய விமானி கேப்டன் ஸ்மித் மச்சாருக்கு ஐக்கிய அரபு அமீரகம் தனது உயரிய குடிமை விருதை வழங்கி கௌரவித்துள்ளது. துபாயில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்கு "பிளை துபாய்" விமானம் கடந்த மாதம் 30-ம் தேதி அன்று 174 பயணிகளுடன் புறப்பட்டுச் சென்றது. சவுதி அரேபிய வான்வெளியில் 34,000 அடி உயரத்தில் விமானம் பறந்துகொண்டிருந்த போது, ஓமன் நாட்டைச் சேர்ந்த துணை விமானி ஹமாம் அல்-ஹமாமி, திடீரென காக்பிட்டில் இருந்த அவசரக்கால கோடரியால் கேப்டன் ஸ்மித் மச்சாரைத் தலைப்பகுதியில் கொடூரமாக தாக்கினார்.

தாக்குதலுக்குப் பின், விமானத்தை விபத்துக்குள்ளாக்கும் நோக்கில் துணை விமானி அதை முடுக்கியதால், விமானம் வெறும் 30 நொடிகளுக்குள் சுமார் 14,000 அடி கீழே செங்குத்தாக இறங்கியது. தலைப்பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்தம் கொட்டிய நிலையிலும், தனது இறுதி கட்ட ஆற்றலைத் திரட்டிய ஸ்மித் மச்சார், காக்பிட் கதவின் அவசரக்கால "ரிலீஸ்" பொத்தானை அழுத்தினார். கதவு திறந்ததும், உள்ளே நுழைந்த விமானப் பணியாளர்களும் பயணிகளும் இணைந்து ஹமாம் அல்-ஹமாமியை மடக்கிப் பிடித்தனர். பின்னர் விமானம் சவுதி அரேபியாவின் தபூக் விமான நிலையத்தில் அவசரமாக பத்திரமாகத் தரையிறக்கப்பட்டது. மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்குப் பின் குணமடைந்த கேப்டன் ஸ்மித் மச்சாருக்கு, அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் உத்தரவின் பேரில், "பர்ஸ்ட் கிளாஸ் ஆர்டர் ஆப் ஜாயித் ஜஜ" விருது அறிவிக்கப்பட்டது. இதையடுத்து கடந்த (செவ்வாய்க்கிழமை) அன்று அபுதாபியில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் துபாயின் முடிக்குரிய இளவரசும் பாதுகாப்பு அமைச்சருமான ஷேக் ஹம்தான் இந்த உயரிய விருதை ஸ்மித்திற்கு நேரில் வழங்கி சிறப்பித்தார்.

இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)



விருச்சிகம்: குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாரப் பிற்பகுதியில் உறவினர் வருகை சில குழப்பங்களை ஏற்படுத்தினாலும் பாதிப்பு இருக்காது அலுவலகத்தில் பதவிஉயர்வு, ஊதியஉயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். சிலருக்குப் பணியிடத்தில் மாற்றம் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். விற்பனையும் லாபமும் வழக்கம் போலவே காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும் குடும்ப நிர்வாகத்தை கவனித்து வரும் பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் பொறுமையைக் கடைப் பிடிப்பது அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு சில சலுகைகள் கிடைக்கும் பழைய கடன் தீரும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். எதிர்பாராத பணம் கைக்கு வரும். வேலையில் புதிய பொறுப்பு கிடைக்கும். மேலதிகாரி ஆதரவு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர் கிடைப்பார். பங்கு சந்தையில் கவனம் தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். சொத்து பிரச்சனை தீரும். திருமண விஷயத்தில் நல்ல முன்னேற்றம். உடல் நலத்தில் கவனம் தேவை. காய்ச்சல், உடல் வலி வரலாம். தண்ணீர் அதிகம் குடியுங்கள்.
அதிர்ஷ்ட எண்: 9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், வியாழன்.



தனுசு: பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். வீண் செலவுகளும் ஏற்படுவதற்கில்லை. நண்பர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வழக்குகள் மற்றும் கடன்கள் விஷயத்தில் முன்னெச்சரிக்கை அவசியம் அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ப சலுகைகளும் கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவு உற்சாகம் தரும். சக ஊழியர்களின் விஷயங்களில் தலையிடவேண்டாம். வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். சக வியாபாரிகளுடன் ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கி, சுமுகமான உறவு ஏற்படும். பங்குதாரர்களால் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு வாரப் பிற்பகுதியில் மனதில் சிறுசிறு சலனம் ஏற்படக் கூடும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு சக பணியாளர்களால் நிம்மதியும் சந்தோஷமும் கிடைக்கும் அனைத்தும் நன்மையாக நடக்கும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். வேலையில் பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும் வாய்ப்பு. புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்பு. தொழில் செய்பவர்களுக்கு பெரிய லாபம். வெளிநாட்டு தொடர்பு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பெரியவர்கள் ஆசி கிடைக்கும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம். உடல் நலம் சீராக இருக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.
அதிர்ஷ்ட எண்: 3. அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்ட நாள்: வியாழன்.



மகரம்: குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்னைகள் நீங்கி, நிம்மதி உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் எண்ணப்படி நடந்து கொள்வார்கள். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்து, மகிழ்ச்சி அடைவீர்கள். சகோதரர் நீங்கள் கேட்ட உதவியை செய்து தருவார். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வேலைக்கு விண்ணப்பம் செய்திருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு சலுகைகள் கிடைக்கும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். லாபம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் பிரச்னை எதுவும் இருக்காது குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு மனதை சஞ்சலப்படுத்தும். அலுவலகத்தில் பணிச்சுமை குறையும். சலுகைகளும் கிடைக்கும் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். சேமிப்பு அதிகரிக்கும். வேலையில் புதிய பொறுப்பு கிடைக்கும். மேலதிகாரி பாராட்டுவார். இடமாற்றம் எதிர்பார்ப்பவர்களுக்கு நல்ல செய்தி. தொழில் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்பு வரும். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். சொத்து வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளால் பெருமை. உடல் நலத்தில் கால் வலி, மூட்டு வலி வரலாம், கவனம் தேவை. ஓய்வு எடுங்கள்.
அதிர்ஷ்ட எண்: 8. அதிர்ஷ்ட நிறம்: நீலம், கருப்பு. அதிர்ஷ்ட நாள்: சனி.



கும்பம்: உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையான பணவரவு உண்டு. சிலருக்கு தந்தைவழி உறவினர்கள் வருகையால் வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்டநாளாகச் செல்ல நினைத்த புனிதத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். சிலருக்கு பிள்ளைகள் மூலம் பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும் அலுவலகத்தில் உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரமும் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். சிலருக்கு அவர்கள் விருப்பப்படி பதவி உயர்வோ அல்லது ஊதிய உயர்வோ கிடைக்கக்கூடும். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவதற்காக பாடுபடுவீர்கள். அதிக உழைப்பின் காரணமாக அசதியும் சோர்வும் ஏற்பட்டு நீங்கும் குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை சாதகமாக இருக்கும் இந்த வாரம் உங்களுக்கு அதிர்ஷ்டமான வாரம். புதிய சிந்தனைகள் தோன்றும். பண வரவு நல்லா இருக்கும். நீண்ட நாள் எதிர்பார்த்த பணம் கிடைக்கும். வேலையில் உங்கள் புதிய ஐடியாவுக்கு பாராட்டு கிடைக்கும். பதவி உயர்வு வாய்ப்பு. தொழில் செய்பவர்களுக்கு புதிய தொழில் தொடங்க நல்ல நேரம். ஆன்லைன் வியாபாரம் லாபம் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். நண்பர்களால் உதவி கிடைக்கும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். காதல் விஷயத்தில் நல்ல முன்னேற்றம். உடல் நலம் சீராக இருக்கும். தூக்கம் சரியாக இருக்கும். தலைவலி வரலாம், கவனம் தேவை.
அதிர்ஷ்ட எண்: 4. அதிர்ஷ்ட நிறம்: நீலம், வெள்ளை.
அதிர்ஷ்ட நாள்: சனி, புதன்.



மீனம்: பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். ஆனாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகள் வகையில் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயம் கிடைக்கவும் வாய்ப்பு உண்டு அலுவலகத்தில் எவ்வளவுதான் உழைத்தாலும் அதற்கேற்ற அங்கீகாரம் கிடைக்காது. சக பணியாளர்களிடம் தேவையான ஒத்துழைப்பு கிடைக்காது. பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் திருப்தி தருவதாக இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவி செய்வார்கள் குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் கடன் வாங்க நேரும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கனவுகள் நனவாகும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். சேமிப்பு அதிகரிக்கும். நகை வாங்கும் யோகம். வேலையில் புதிய வாய்ப்பு வரும். மேலதிகாரி ஆதரவு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர் கிடைப்பார். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன் மனைவி அன்பு கூடும். குழந்தைகளின் படிப்பில் முன்னேற்றம். திருமண பேச்சு வெற்றி அடையும். உடல் நலம் சீராக இருக்கும். கால் வலி, சளி வரலாம், கவனம் தேவை. தியானம் செய்யுங்கள்.
அதிர்ஷ்ட எண்: 7. அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், வெள்ளை.
அதிர்ஷ்ட நாள்: வியாழன், திங்கள்.




MORTGAGE

FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND

INDUSTRIAL CONSTRUCTION



OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

NESAN

416-908-5656



Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய $30.00 மட்டுமே!
416-752-1524

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

21st ANNIVERSARY
தமிழ் மிரர் Tamil Mirror
Celebrations and
AWARDS GALA 2026
NOV 15 (SUNDAY)
Evening 4.00 PM
VEDIC CULTURAL CENTRE
416 - 679 - 0126
Joe Malloori
An orator, A literarian, Kumki Actor.
Written 19 books, and spoken over 2000 stages

உதயம் 1595 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 30, 2026

சிறுவயதில் ஒரேநாளில் இரண்டு அரங்கேற்றங்களை மேடையேற்றும் செல்வி றொஷேல் கிறிஸ்டனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

– வாழ்த்துத் தெரிவித்துள்ள அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி

பிஞ்சு விரல்களால் மிருதங்கத்தை வாசித்து வீணையை மீட்டினாலும். செல்வி றொஷேல் கிறிஸ்டனின் மனதில் உறுதி சிந்தனையில் தெளிவு ஆகியவற்றை நான் அவதானித்தேன்

தனது பிரதம விருந்தினர் உரையில் "உதயன்" லோகேந்திரலிங்கம் தெரிவிப்பு!

இசைச் செல்வி றொஷேல் கிறிஸ்டன் அன்னநாதனின் மிருதங்க மற்றும் வீணை அரங்கேற்றங்கள் ஒரே மேடையிடல் கடந்த 24-10-2026 அன்று கனடாவின் விற்பி மாநகரில் உள்ள **WHITBY COURT HOUSE** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
(தொடர்ச்சி 11ம் பக்கம்)





கனடாவில் எமது தமிழ், பேச்சு மொழியாக மட்டும் இல்லாது எழுத்து மொழியாகவும் திகழ்வதை உறுதி செய்வதே இவ்வருட "ரொறன்ரோ தமிழ்ப் புத்தக அரங்கம்" ஆகும்!


"ரொறன்ரோ தமிழ்ப் புத்தக அரங்கம்" ஆரம்ப வைபவத்தில் சிறப்புரையாற்றிய கனடிய தமிழர் பேரவையின் உறுப்பினர் சுகிர்தன் கணபதி தெரிவிப்பு!



"எமது தமிழினம் சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக இந்த மண்ணில் வாழ்ந்து வரும் பாக்கியத்தை பெற்றுள்ளது. அதே வேளையில் கனடாவில் எமது தமிழ், பேச்சு மொழியாக இருப்பதை உணர்ந்து நாம் திருப்தியடைந்தோம். எனினும் எமது மொழியை பேச்சு மொழியாக மாத்திரம் கொள்ளாது எழுத்து மற்றும் வாசிப்பு மொழியாகவும் திகழ்வதை உறுதி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இங்கு சில தமிழ் அமைப்புக்களோடு நாம் நடத்திய கலந்துரையாடல்களின் போது நாம் உணர்ந்தோம் உரையாடினோம். அந்த கலந்துரையாடல்களின் தீர்க்கமான முடிவின் அடிப்படையிலேயே நாம் நடத்துகின்ற "ரொறன்ரோ தமிழ்ப் புத்தக அரங்கம்" இன்று இங்கு ஆரம்பமாகின்றது.
(தொடர்ச்சி 18ம் பக்கம்)

பேராசிரியர் ராஜ் சோமதேவவின் செம்மணி விளக்கங்கள் குறித்து தமிழ் மக்களுக்கு நம்பகத்தன்மை இல்லை

சுயாதீன ஆய்வு கோரி அவர் பட்டம் பெற்ற உப்சாலா பல்கலைக்கழகத்திற்கு அமெரிக்காவில் இயங்கும் "தமிழர் புலம்பெயர் அமைப்பு" அனுப்புள்ள கடிதம்



பேராசிரியர் ராஜ் சோமதேவவின் செம்மணி விளக்கங்கள் குறித்து சுயாதீன ஆய்வு கோரி அவர் பட்டம் பெற்ற சுவீடன் நாட்டில் உள்ள உப்சாலா பல்கலைக்கழகத்திற்கு அமெரிக்கத் தமிழர் புலம்பெயர் அமைப்பு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது .அதில் உண்மையையும் நீதியையும் தேடும் குடும்பங்களுக்காக கல்விசார் ஆய்வு, வெளிப்படைத்தன்மை மற்றும் சுயாதீன தடயவியல் விசார-ணை கோரிக்கை மற்றும் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் நடுநிலை அற்ற தன்மை ஆகியவை பற்றி விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நீண்ட கடிதத்தை உள்ளே படிக்கலாம்.
(தொடர்ச்சி 19ம் பக்கம்)



கனடா – ஸ்காபுறோவில் நடைபெற்ற பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் நூற்றாண்டு விழாவும் நினைவு மலர் வெளியீடும்!

சென்ற ஞாயிற்றுக் கிழமை -25-10-2026- பிற்பகல் 4:00 மணியளவில் ரொறன்ரோவில் உள்ள தமிழிசைக் கலா மன்றத்தில் மொழியியல் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் நூற்றாண்டு விழா கவிஞர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். (தொடர்ச்சி 5ம் பக்கம்)